DOWNLOAD HINDU TAMIL APP & READ E-PAPER E-MAGAZINE & E-BOOKS IN OFFLINE
QR CODE SCANNER
SPECIAL OFFER! Get One eBook FREE
E-PAPER
1 YEAR
Just Rs.549/-
Store.hindutamil.in

# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● ஞாயிறு, ஜூன் 20, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.170

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

https://www.hindutamil.in

● 10 பக்கங்கள் ₹ 7

ஸ்ரீ வீராஸ்
பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
மொத்த விலை கடை
சில்க்ஸ் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட் கலெக்ஷன்ஸ்
எம்.சி.ரோடு, வண்ணாரப்பேட்டை, செ - 21. போன்: 25901771 - 74
sriveerascreations www.sriveeras.com

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையுடன்

## சட்டப்பேரவை நாளை கூடுகிறது

■ சென்னை

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 16-வது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தில் நாளை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றுகிறார்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டப்பேரவை பொதுத் தேர்தல் முடிவு வெளியான நிலையில், திமுக 10 ஆண்டுகளுக்குப்பின் ஆட்சியை பிடித்துள்ளது. முதல்வராக ஸ்டாலின் கடந்த மே 7-ம் தேதி பொறுப்பேற்றார். இந்நிலையில் புதிய சட்டப்பேரவையின் முதல் கூட்டம் மரபுப்படி ஆளுநர் உரையுடன் நாளை கலைவாணர் அரங்கில் நாளை தொடங்குகிறது.

இதற்காக, சமீபத்தில் ஆளுநரை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் பேரவைத் தலைவர் மு.அப்பாவுவும் நேரில் ஆளுநரை சந்தித்து அழைப்பு விடுத்தார். ஆளுநர் அனுமதியளித்ததை தொடர்ந்து கூட்டத் தொடர் நாளை தொடங்குகிறது. முன்னதாக பேரவைக்குள் வரும் அனைவருக்கும் கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நெகட்டிவ் என முடிவுகள் வந்தவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். அதற்கான பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நாளை காலை 10 மணிக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றுகிறார். அவரது ஆங்கில உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை பேரவைத் தலைவர் வாசிப்பார். அத்துடன் பேரவை அலுவல்கள் முடித்துக் கொள்ளப்படும். தொடர்ந்து, அலுவல் ஆய்வுக்குழு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் கூடி, ஆளுநர் உரை மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவெடுக்கும்.

ஆளுநர் உரையை பொறுத்தவரை, புதிய அரசு பொறுப்பேற்று நடைபெறும் முதல் கூட்டம் என்பதால், திமுகவின் தேர்தல் அறிக்கை அறிவிப்புகளில் சில இடம் பெறலாம் என தெரிகிறது. குறிப்பாக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம், அரசு ஊழியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் ரத்து, கரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பாராட்டு, மேகேதாட்டு அணை விவகாரம், அரசுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகள் உள்ளிட்டவை குறித்த கருத்துகளையும் ஆளுநர் தெரிவிப்பார் எனக் கூறப்படுகிறது.

அதேபோல், எதிர்க்கட்சித் தலைவராக பழனிசாமி, துணை தலைவராக ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தேர்வாகி முதல் முறையாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்கின்றனர். இந்தச் சூழலில், முந்தைய அதிமுக அரசின் மீதெழும் விமர்சனங்களுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இந்தக் கூட்டத்தொடரைத் தொடர்ந்து விரைவில் திமுக அரசின் இந்த நிதியாண்டுக்கான முழு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

ATTENTION CLASS XI, XII & REPEATERS BATCH STUDENTS
VELAMMAL BODHI CAMPUS
ADMISSIONS OPEN
for
NEET 2022
ONLINE & CLASSROOM
PROGRAM
For More Details & Registrations
Ponneri 7299087829
Kolapakkam(Chennai) 86809 83000
Vellore 81243 51111
VBA - Annanagar 70925 01111

பெண் இன்று
8–ம் பக்கத்தில்...

கர்நாடகாவுக்கு சாதகமாக தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவு

# மேகேதாட்டு அணை விரைவில் கட்டப்படும்

● பணிகளை தொடங்கப்போவதாக முதல்வர் எடியூரப்பா அறிவிப்பு

இரா.வினோத்

■ பெங்களூரு

மேகேதாட்டுவில் கர்நாடக அரசு புதிய அணை கட்டுவதற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் பச்சைக்கொடி காட்டியுள்ளது. எனவே மத்திய அரசு அனுமதி அளித்ததும் விரைவில் அணை கட்டும் பணிகள் தொடங்கப்படும் என கர்நாடக முதல்வர் எடியூரப்பா தெரிவித்துள்ளார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் கர்நாடக அரசு ரூ.9 ஆயிரம் கோடியில் அணை கட்ட முயற்சிக்கிறது. இதற்கு தமிழக அரசும் விவசாய அமைப்புகளும் நீண்ட காலமாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதற்கு எதிராக தமிழக அரசின் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்நிலையில் கடந்த 17-ம் தேதி பிரதமர் மோடியை சந்தித்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், 'மேகேதாட்டு திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது' என வலியுறுத்தினார். இதற்கு கன்னட அமைப்புகளும் கர்நாடக விவசாய சங்கங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் கர்நாடக முதல்வர் எடியூரப்பா பெங்களூருவில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மேகேதாட்டு திட்டமானது கர்நாடகாவின் மிக முக்கியமான திட்டமாகும். அதனைகைவிடும்பேச்சுக்கே இடமில்லை. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு மேகேதாட்டுவில் ஆய்வு செய்ய குழு ஒன்றை அமைத்து, அங்கு அனுப்ப உத்தரவிட்டது. இதை எதிர்த்து கர்நாடக அரசு சார்பில் டெல்லியில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வு முன்னிலையில் மனு தாக்கல் செய்தோம். கர்நாடகாவின் கோரிக்கையை ஏற்று, மேகேதாட்டுவில் ஆய்வு செய்வதற்கும், தென்மண்டல தீர்ப்பாயம் தொடர்ந்து விசாரிக்கவும் தடை விதித்து தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. இது கர்நாடகாவுக்கு கிடைத்த வெற்றியாகும்.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் இந்த தீர்ப்பின் மூலம் கர்நாடக அரசு மேகேதாட்டுவில் புதிய அணை கட்டுவதற்கு பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது. எனவே மத்திய அரசு அனுமதி அளித்த உடன் விரைவில் மேகேதாட்டுவில் புதிய அணை கட்டும் பணிகள் தொடங்கப்படும். அதன் மூலம் 4 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும். பெங்களூருவின் குடிநீர் தேவையும் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.

இவ்வாறு எடியூரப்பா தெரிவித்தார்.

கர்நாடக உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை கூறும்போது,"கர்நாடக அரசு மேகேதாட்டுவில் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் செயல்படுவதாக தொடுக்கப்பட்ட வழக்கை தேசிய பசுமை தீர்ப்பாயம் முடித்து வைத்துள்ளது. இதன் மூலம் கர்நாடக அரசு எவ்வித விதிமுறை மீறலிலும் ஈடுபடவில்லை என்பது உறுதியாகியுள்ளது. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவு கர்நாடகாவுக்கு சாதகமாக வந்துள்ளதால் மத்திய அரசும் கர்நாடகாவின் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றும்" என்றார்.

முன்னாள் முதல்வர் குமாரசாமி கூறியதாவது:

மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் கர்நாடகாவின் நலன்களுக்கு எதிரானது. கர்நாடக ஆளும் கட்சியில் நிலவும் உட்கட்சி பூசலால் நிலம், நீர், மொழி ஆகியவற்றை பாதுகாக்க முடியாமல் எடியூரப்பா திணறுகிறார். மத்தியிலும் மாநிலத்திலும் பாஜக ஆட்சி இருந்தபோதும் எடியூரப்பாவால் மேகேதாட்டு திட்டத்துக்கு அனுமதி பெற முடியவில்லை. அரசியல் சாசனத்தின் 8-வது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக அறிவிப்பதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முயல்கிறார். இந்த விஷயத்தில் நான் அவரோடு கைகோக்க தயாராக இருக்கிறேன்.

அதே வேளையில் காவிரி பிரச்சினையில் கர்நாடகாவும் தமிழகமும் மோதிக் கொள்வதால் எவ்வித பயனும் இல்லை. தென்னிந்திய மாநிலங்கள் என்ற அடிப்படையில் மோதலை கைவிட்டு, சகோதரத்துவத்தின் அடிப்படையில் காவிரி பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வேண்டும். இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ஆட்சியில் தொடங்கினால் அதற்கு என் முழு ஆதரவு உண்டு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



▲ மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்காக கர்நாடக அரசு தேர்வு செய்துள்ள இடம்.

### எள்முனை அளவும் இடம் தரக்கூடாது தமிழக அரசை பழனிசாமி வலியுறுத்தல்

மேகேதாட்டு அணை கட்டுமானம் குறித்த கர்நாடகாவின் அறிவிப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிக்கை:

உச்ச நீதிமன்றம் 2018 பிப். 16–ம் தேதி வழங்கிய தீர்ப்பின்படி, தமிழகத்துக்கு 177.25 டிஎம்சி நீர் வழங்க வேண்டும். இந்த தீர்ப்பை செயல்படுத்த தமிழக அரசு அதே ஆண்டு நவ. 30–ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்தது. மேலும் கர்நாடக அரசு அணை கட்ட மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதி வழங்கக் கூடாது என்று ஜல்சக்தி அமைச்சகத்தை அறிவுறுத்துமாறு பிரதமரை கேட்டுக் கொண்டேன்.

உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி அணை கட்ட கர்நாடக அரசு சுற்றுச்சூழல் அனுமதி கோரியதை அடுத்து, 2018 டிச. 5–ம் தேதி தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மேகேதாட்டுவில் அணை கட்டப்படும் என்ற கர்நாடக முதல்வரின் ஒருதலைப்பட்சமான அறிவிப்பை கடுமையாக கண்டிக்கிறேன்.

கர்நாடக அரசின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து தமிழகத்துக்கு காவிரி நீரை முழுமையாக பெறவும் அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசின் போக்குக்கு எள்முனை அளவும் இடம் தராமல், தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடு முழுவதும் கரோனா பாதிப்பு குறைந்து வரும் நிலையில்

## கூடுதலாக 660 ரயில்களை இயக்க ரயில்வே ஒப்புதல்

■ புதுடெல்லி

நாடு முழுவதும் கரோனா பாதிப்பு குறைந்துவரும் நிலையில் 660-க்கும் மேற்பட்ட கூடுதல் ரயில்களை இயக்க இந்திய ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது.

கரோனா பாதிப்புக்கு முன் இந்தியாவில் சராசரியாக ஒருநாளைக்கு 1768 ரயில்கள் இயக்கப்பட்டு வந்ததாக இந்திய ரயில்வே கூறியிருந்தது. அதன்பிறகு கரோனா பாதிப்பு மற்றும் ஊரடங்கு காரணமாக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. அவசர மற்றும் சரக்கு போக்குவரத்து ரயில்கள் மட்டும் இயக்கப்பட்டுவந்தன. தளர்வுகள் அறிவிக்கப்பட்ட பிறகு ரயில் சேவைகள் கணிசமாக இயக்கப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 983 ரயில்கள் ஒரு நாளைக்கு இயக்கப்படுவதாக இந்திய ரயில்வே கூறியுள்ளது. அதாவது கரோனாவுக்கு முந்தைய ரயில் சேவையில் 56 சதவீதம் ஆகும்.

தற்போது கரோனா பாதிப்பு நாடு முழுவதும் குறைந்துள்ளது. எனவே ரயில் சேவைகள் தேவைக்கு ஏற்ப தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுவருகின்றன என்று இந்திய ரயில்வே கூறியுள்ளது. இது குறித்து இந்திய ரயில்வே கூறியிருப்பதாவது, 'ஜூன் 1-ம் தேதி நிலவரப்படி 800 ரயில்கள் இயக்கப்பட்டுவந்தன. கூடுதலாக 660 ரயில்கள் இயக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 552 ரயில்கள் மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஆகும். 108 சிறப்பு விடுமுறைக் கால ரயில்கள்' எனக் கூறியுள்ளது.

கரோனா பரவலின் நிலை மற்றும் ரயில் பயணங்களுக்கான டிமாண்ட் ஆகியவற்றின் அடிப்படையில் ரயில்களின் சேவையைப் படிப்படியாக செயல்படுத்த மண்டல ரயில்வே அலுவலகங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் சிறப்பு ரயில்களை மீண்டும் செயல்படுத்த உள்ளதாகக் கூறியுள்ளது. அடுத்த வாரத்திலிருந்து சென்னை எழும்பூர் -தஞ்சாவூர், எம்ஜிஆர் சென்னை சென்ட்ரல்-திருவனந்தபுரம், கோயமுத்தூர்-நாகர்கோயில் மற்றும் புனலூர்-மதுரை ஆகிய ரயில்கள் ஜூன் 20, 21 முதல் மீண்டும் இயக்கப்பட உள்ளது. இதேபோல் வடகிழக்கு ரயில்வேவும் சில சிறப்பு ரயில்களை இயக்க உள்ளதாகக் கூறியுள்ளது.

ரயிலில் பயணிப்பவர்கள் கரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ரயில்வே கேட்டுக்கொண்டுள்ளது.



▲ தமிழகத்தில் ஊரடங்கு நீட்டிப்பு குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று ஆய்வுக் கூட்டம் நடந்தது. இதில் தலைமைச் செயலர், டிஜிபி, சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## தளர்வுகளுடன் முழு ஊரடங்கு ஜூன் 28 வரை நீட்டிப்பு

● தமிழக அரசின் அறிவிப்பு இன்று வெளியாகிறது

■ சென்னை

தமிழகத்தில் முழு ஊரடங்கை கூடுதல் தளர்வுகளுடன் ஜூன் 28-ம் தேதி வரை நீட்டிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்தில் மருத்துவ நிபுணர்கள், அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர். ஊரடங்கு நீட்டிப்பு குறித்த அறிவிப்பு இன்று வெளியாகிறது.

தமிழகத்தில் கரோனா பாதிப்பு அதிகரித்ததால் கடந்த மே 24 முதல் தளர்வில்லா முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அடுத்தடுத்து மே 31, ஜூன் 7, ஜூன் 14-ம் தேதி என 3 கட்டமாக முழு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், தொற்று அதிகமாக இருந்த 11 மாவட்டங்களில் குறைவான தளர்வுகளும் மீதமுள்ள சென்னை உள்ளிட்ட 27 மாவட்டங்களில் அதிகமான தளர்வுகளும் அளிக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த ஜூன் 14-ம் தேதி முதல் நீட்டிக்கப்பட்ட கரோனா ஊரடங்கு ஜூன் 21-ம் தேதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து ஊரடங்கு நீட்டிப்பு, தளர்வுகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று மருத்துவ நிபுணர் குழுவினர், அரசு அதிகாரிகள், சிறப்பு பணிக்குழுவினருடன் ஆலோசனை நடைபெற்றது.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நிதித்துறை செயலர் ச.கிருஷ்ணன், சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள், உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன், தேசிய தொற்றுநோய் நிலைய துணை இயக்குநர் பிரப்திப் கவுர், உலக சுகாதார அமைப்பின் முதுநிலை மண்டல குழு தலைவர் கே.என். அருண்குமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

இந்த ஆலோசனையின் போது, தற்போது தொற்று அதிகமாக உள்ள கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களுக்கு தளர்வுகள் அதிகம் வேண்டாம். இதர 30 மாவட்டங்களில் மாவட்டங்களுக்குள் மட்டும் அரசு பேருந்துகளை 50 சதவீதம் பயணிகளுடன் தேவைப்படும் வழித்தடங்களில் இயக்கலாம். துணி, நகைக் கடைகளுக்கு அனுமதியளிக்கலாம் என்பது உள்ளிட்ட தளர்வுகளை பரிந்துரைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைகள் குறித்தும் ஊரடங்கு நீட்டிப்பு குறித்தும் தலைமைச் செயலர், நிதித்துறை செயலர், டிஜிபி, சென்னை மாநகர காவல் ஆணையர் உள்ளிட்டோருடன் முதல்வர் அடுத்தகட்டமாக ஆலோசனை நடத்தினார். இதில், ஊரடங்கை வரும் ஜூன் 28-ம் தேதி வரை நீட்டிக்கவும் பேருந்து போக்குவரத்து போன்ற சலுகைகளை எந்த அளவுக்கு அனுமதிப்பது குறித்தும் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும் இதுகுறித்த அறிவிப்பு நேற்று இரவு வரை வெளியாகாத நிலையில், இன்று வெளியாகும் என தெரிகிறது.

இந்தியாவை அடுத்த 6 முதல் 8 வாரங்களில்

## கரோனா 3-ம் அலை தாக்கக் கூடும்

● எய்ம்ஸ் இயக்குநர் எச்சரிக்கை

■ புதுடெல்லி

கரோனா வைரஸின் மூன்றாவது அலை இந்தியாவை 6 முதல் 8 வாரங்களில் தாக்கும் என்று டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் இயக்குநர் ரன்தீப் குலேரியா எச்சரித்துள்ளார். மேலும், ஏற்கெனவே நாம் எதிர்கொண்ட இரண்டு அலைகளை விட மூன்றாம் அலை மிக தீவிரமானதாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து கரோனா இரண்டாம் அலை வேகமெடுக்க தொடங்கியது. ஏப்ரல், மே மாதங்களில் உச்சத்தை எட்டிய வைரஸ் பரவல், தற்போது ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால், 4 லட்சத்துக்கும் அதிகமாக பதிவாகி வந்த தினசரி வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை, இப்போது 60 ஆயிரமாக குறைந்துள்ளது. அதேபோல, கரோனா பாதிப்பால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் கணிசமாக குறைய தொடங்கி இருக்கிறது.

இருந்தபோதிலும், கரோனா வைரஸின் மூன்றாம் அலை இந்தியாவை விரைவில் தாக்கும் என விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். எனவே, அதனை எதிர்கொள்ளும் விதமாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் ரன்தீப் குலேரியா நேற்று பேட்டியளித்தார். அதில் அவர் கூறியதாவது:

கரோனா இரண்டாம் அலையின் தீவிரம் படிப்படியாக குறைந்து வருகிறது. இதன் காரணமாக, நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் ஊரடங்கு போன்ற கட்டுப்பாடுகளில் பெரிய அளவில் தளர்வுகள் வழங்கப்படுவதை பார்க்க முடிகிறது. தளர்வுகள் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் மத்தியில் வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு பல மடங்கு குறைகிறது. முகக்கசவம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் போன்ற வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மக்கள் கைவிட்டு வருகின்றனர். இதனை உற்று நோக்கும் போது, பெருந்தொற்றின் முதல் அலை, இரண்டாம் அலையில் இருந்து நாம் பாடம் ஏதும் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை. ஆகவே, மிகக்குறுகிய காலத்தில் கரோனா மூன்றாம் அலையை நாம் எதிர்பார்க்கலாம்.

இந்தியாவை அடுத்த 6 முதல் 8 வாரங்களில் வைரஸின் மூன்றாம் அலை தாக்கக் கூடும். மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துதல், வைரஸ் தடுப்பு விதிமுறைகளை கடுமையாக்குதல் போன்ற நடவடிக்கைகளால் மூன்றாம் அலையை நாம் சிறிது வேண்டுமானால் தாமதப்படுத்தலாம். ஆனால், அதனை தவிர்க்க முடியாது. எனவே, மூன்றாம் அலையை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

வைரஸ் தடுப்பு விதிமுறைகளை மட்டும் பின்பற்றுவதில் எந்த பயனும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும். அதனுடன் கூடுதலாக, வைரஸ் உருமாற்றம் அடைவதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும். ஏனெனில், பிரிட்டனில் இருந்து வந்த புதிய வகை உருமாற்ற வைரஸால் தான், இந்தியாவில் கரோனா இரண்டாம் அலை தீவிரமடைந்தது. ஆதலால், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் போன்ற பகுதிகளை கடுமையான வைரஸ் சோதனைக்கு உட்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். அதேபோல, வைரஸ் பரவல் அதிகரிக்க தொடங்கும்போது, எந்தெந்த பகுதிகளில் தினசரி பாதிப்பு அதிகமாக பதிவாகிறதோ அங்கெல்லாம் சிறிய அளவிலான ஊரடங்கை அமல்படுத்த வேண்டும்.

அதே சமயத்தில், அனைவரும் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வதும் மிகவும் முக்கியம். தடுப்பூசி செலுத்திக் கொள்ளாவதவர்களே, வைரஸ் தாக்குதலுக்கு எளிதில் ஆளாவார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கரோனா முதல் அலையில், வைரஸ் பரவலின் வேகம் குறைவாக இருந்தது. ஆனால், இரண்டாம் அலையில் வைரஸ் பரவலின் வேகம் அதிகரித்ததுடன் அதன் வீரியமும் அதிகமாக இருந்தது. எனவே, மூன்றாம் அலையின்போது வைரஸ் பரவலும் அதன் வீரியமும் இன்னும் அதிகமாகவே இருக்கும்.

வைரஸ் பரவுவது அதிகரிக்கும் போது மருத்துவமனைகளில் படுக்கைகளுக்கு கடும் பற்றாக்குறை ஏற்படும். இதுபோன்ற அனைத்து பிரச்சினைகளையும் முன்கூட்டியே கணித்து, மூன்றாம் அலையை சமாளிக்க நாம் வியூகம் அமைப்பது அவசியம். இவ்வாறு ரன்தீப் குலேரியா கூறினார்.

### 'அச்சுறுத்தலை ஏற்படுத்தும் டெல்டா பிளஸ் கரோனா வைரஸ்'

"இந்தியாவை தாக்கவுள்ள கரோனா மூன்றாம் அலையின்போது டெல்டா பிளஸ் வகை தொற்றுகளே மிகவும் அச்சறுத்தலாக இருக்கிறது" என்று ரன்தீப் குலேரியா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது, "டெல்டா பிளஸ் வகை கரோனா வைரஸ்கள் மிக வேகமாக உருமாற்றம் அடைவதாக இருக்கின்றன. இதனை வைத்து பார்க்கும்போது, மூன்றாம் அலையில் இந்த வகை வைரஸ் தொற்றுகள்தான் மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. எனவே, இந்த வைரஸின் மரபணு வரிசையை தொடர்ந்து ஆராய்ச்சி செய்யவும், கண்காணிக்கவும் வேண்டும். அதேபோல, டெல்டா வகை வைரஸால் பாதிக்கப்பட்டவருக்கு செயற்கை புரதத்தை உட்செலுத்தும் ஆன்டி–பாடி சிகிச்சை முறை பலனளிக்குமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, இதுதொடர்பான தரவுகளை சேகரிக்கவும், ஆராயவும் தரமான ஆய்வகங்களை அமைக்க வேண்டியது முக்கியம்.

இது ஒருபுறம் இருக்க, கோவிஷீல்டு தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாம் தவணைகளுக்கு இடையே இருக்கும் இடைவெளியை குறைக்க வேண்டுமா என்ற கேள்வி அதிக அளவில் எழுப்பப்பட்டு வருகிறது. தரவுகள் மற்றும் ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் இதுகுறித்து முடிவெடுக்க வேண்டுமே தவிர, தடுப்பூசியின் கையிருப்பை பொறுத்து முடிவெடுக்க கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

ATTENTION CLASS XI, XII & REPEATERS BATCH STUDENTS
vblive
POWERED BY VELAMMAL
Your Online Tutor
ADMISSIONS OPEN
for
NEET 2022
Exclusive
ONLINE
COURSE FEE ₹ 50,000 +GST
For More Details & Registrations
96771 47777

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup




பி.எம்.சுதிர்



# டைசன் வளர்த்த புலி

பொதுவாக நாய், பூனை, மீன்கள் போன்றவற்றை மக்கள் செல்லப் பிராணிகளாக வளர்ப்பார்கள். ஆனால் குத்துச்சண்டை வீரரான மைக் டைசன், இதில் கொஞ்சம் வித்தியாசமானவர். செல்லப்பிராணியாக அவர் புலியை வளர்த்துள்ளார்.

1990-களில் புலியை வளர்க்கும் ஆசை மைக் டைசனுக்கு வந்துள்ளது. 71 ஆயிரம் டாலர் கொடுத்து வாங்கப்பட்ட அந்த புலிக்கு, ‘கென்யா’ என்று பெயரிட்டார். அந்த புலிக்காக மாதம் ரூ.4 ஆயிரம் டாலர்களை மைக் டைசன் செலவிட்டார். சில சமயங்களில், ஒரே கட்டிலில் அந்தப் புலியுடன் தூங்கியுள்ளார்.

பொழுது போகாத நேரங்களில் புலியுடன் விளையாடுவது, வாக்கிங் போவது என்று உற்சாகமாக இருந்துள்ளார். இதைப் பார்த்த அவரது பக்கத்து வீட்டுப் பெண்மணிக்கும், அந்தப் புலியுடன் ஆட ஆசை வந்துவிட்டது. ஒருநாள் டைசனின் வீட்டுக்குள் சுவர் மீது ஏறிக் குதித்து, அந்தப் புலிக்கு அருகில் சென்றுள்ளார்.

டைசனைத் தவிர மற்றவர்களிடம் நெருங்கிப் பழகாத அந்தப் புலிக்கு, தன்னை யாரோ சீண்டுவது கோபத்தை எற்படுத்தி உள்ளது. அந்தப் பெண்ணின் கன்னத்தில் ஓங்கி அறைந்துள்ளது. அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிய அந்தப் பெண், பிறகு இதுதொடர்பாக டைசன் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். ஆனால் பின்னர், டைசன் வீட்டுக்குள் அவர் அத்துமீறிச் சென்றது பற்றி கேள்வி எழ, அந்த வழக்கை வாபஸ் பெற்றுள்ளார்.

கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் ‘கென்யா’ என்ற புலியை வளர்த்த டைசன், மேலும் 2 புலிகளையும் பிற்காலத்தில் வளர்த்துள்ளார். பின்னர் ஒருமுறை அவை தன்னை தாக்கியதாலும், பொருளாதார நிலை காரணமாகவும் அவற்றை விற்றுவிட்டார்.

# நல்லதே நடக்கும்

● ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் ●

## 20-06-2021

பிலவ 6 ஆனி

ஞாயிற்றுக்கிழமை

**திதி** : தசமி நண்பகல் 12.46 வரை. அதன் பிறகு ஏகாதசி.
**நட்சத்திரம்** : சித்திரை பிற்பகல் 3.47 வரை. அதன் பிறகு சுவாதி.
**நாமயோகம்** : பரிகம் மாலை 6.26 மணி வரை. அதன் பிறகு சிவம்.
**நாமகரணம்** : கரசை நண்பகல் 12.46 வரை. அதன் பிறகு வணிசை.
**நல்ல நேரம்** : காலை 7.00-10.00, 11.00-12.00, மதியம் 2.00-4.00, மாலை 6.00-7.00, இரவு 9.00-11.00 மணி வரை.
**யோகம்** : சித்தயோகம்
**சூலம்** : மேற்கு, வடமேற்கு காலை 10.48 மணி வரை.
**பரிகாரம்** : வெல்லம்
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.44 **அஸ்தமனம்:** மாலை 6.36

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | மாலை 4.30-6.00 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | மதியம் 12.00-1.30 | அதிர்ஷ்ட எண் | 2, 4, 8 |
| குளிகை | மாலை 3.00-4.30 | சந்திராஷ்டமம் | உத்திரட்டாதி, ரேவதி |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
T.NAGAR LKS GOLD HOUSE (P) LTD SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
“LKS - GOLD” IS CASH IN HAND

**மேஷம்:** கணவன் - மனைவிக்குள் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். பூர்வீக சொத்தை விற்று சில பிரச்சினைகளிலிருந்து வெளிவருவீர்கள்.

**ரிஷபம்:** புதிய யோசனைகள் பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தடைகளைக் கடந்து சாதிப்பீர்கள். விஐபிகள் உதவுவார்கள். ஆன்மிக பயணம் செல்ல திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** திருமணப் பேச்சுவார்த்தை நம்பிக்கையைத் தரும். வீடு கட்ட வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு சாதகமான பதில் வரும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும்.

**கடகம்:** புது பொறுப்புகளும், வாய்ப்புகளும் தேடி வரும். வருமானம் உயரும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வீடு மாற நினைத்தவர்களுக்கு நல்ல வீடு அமையும்.

**சிம்மம்:** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் திறமைகளை ஊக்குவிப்பீர்கள். திடீர் பயணம் ஏற்படும்.

**கன்னி:** பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். பூர்வீக சொத்தை புதுப்பிக்க முயற்சிப்பீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். பணவரவு உண்டு.

**துலாம்:** பிள்ளைகளின் பயத்தை போக்குவீர்கள். நண்பர்கள், உறவினர்களின் பாசமான விசாரிப்புகள் ஆறுதலாக இருக்கும். முக்கிய விஷயங்களில் கூடுதல் கவனமும், நிதானமும் தேவை.

**விருச்சிகம்:** உங்களுடைய மாறுபட்ட அணுகுமுறை எல்லோரையும் கவர்ந்து இழுக்கும். விலகியிருந்த உறவினர், நண்பர்கள் தேடி வருவார்கள். வீடு பராமரிப்பை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. நவீன மின்சாதனங்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் வேலை விஷயமாக நல்ல தகவல் வரும்.

**மகரம்:** வெளிவட்டாரத்தில் முதல் மரியாதை கிடைக்கும். வேற்று மொழி பேசுபவர் உதவிகரமாக இருப்பார். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தொகை கைக்கு வரும்.

**கும்பம்:** எதையும் தாங்கும் மனவலிமை கிட்டும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். அடகு வைத்த நகையை மீட்பீர்கள்.

**மீனம்:** கடந்தகால கசப்பான அனுபவங்களை நினைத்து வருந்துவீர்கள். சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். பணப்பற்றாக்குறையை சமாளித்து விடுவீர்கள்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் விநியோகம்

# கல்வி தொலைக்காட்சியில் பாடங்கள் ஒளிபரப்பு தொடக்கம்

● முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

■ சென்னை

அரசுப்பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் விநியோகத்தையும், கல்வி தொலைக்காட்சியில் பாடங்கள் ஒளிபரப்பையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் கரோனா பரவல் காரணமாக பள்ளிகள் திறப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து நடப்பு கல்வியாண்டும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி தொலைக்காட்சி மற்றும் இணையவழியில் பாடங்களை நடத்த பள்ளிக்கல்வித் துறை முடிவு செய்தது.

## 2 முதல் 12-ம் வகுப்பு வரை

இதற்காக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 2 முதல் 12-ம் வகுப்பு வரையிலான பாடங்களின் புதிய காணொலிகள் வடிவமைக்கப்பட்டு தயார்நிலையில் இருந்தன. இந்நிலையில் புதிய கல்வியாண்டுக்கான பாடங்கள் ஒளிபரப்பை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு நடப்பு கல்வியாண்டுக்கான விலையில்லா பாடப் புத்தகங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். ரூ.292 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இத்திட்டம் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பள்ளிகளில் பயிலும் 69 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில் பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வி முதன்மைச் செயலர் காகர்லா உஷா மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## மாணவர்களுடன் கலந்துரையாடல்

நிகழ்ச்சியின் இறுதியில் முதல்வர் ஸ்டாலின், மாணவர்களுக்கு பேனா மற்றும் இனிப்புகள் வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார்.

கல்வி தொலைக்காட்சியில் பாடங்கள் ஒளிபரப்பு குறித்த கால அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என்றும், அரசுப்பள்ளிகளில் மாணவர்களுக்கு நாளை (ஜூன் 21) முதல் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்றும் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



▲ சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாடப் புத்தகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வி முதன்மைச் செயலர் காகர்லா உஷா.

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான

# ‘ஆளப் பிறந்தோம்’ இணையவழி வழிகாட்டு நிகழ்ச்சி

● இன்று காலை 11 மணிக்கு நடைபெறுகிறது

(C) KSL Media Ltd.

■ சென்னை



‘இந்து தமிழ் திசை’ நாளிதழ், ‘சங்கர் ஐஏஎஸ் அகாடமி’ இணைந்து வழங்கும் ‘ஆளப் பிறந்தோம்’ எனும் இணையவழி வழிகாட்டு நிகழ்ச்சி, இன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் வெற்றிபெற வேண்டுமென்ற ஆசைபலருக்கும் உண்டு. ஆனால், அதற்கான அடிப்படை கல்வித் தகுதி என்ன? எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும்? என்பது போன்ற கேள்விகளுடன் தயங்கி நிற்பவர்களே அதிகம். அந்தத் தயக்கத்தைப் போக்கி, தெளிவைத் தரும் நோக்கில் ‘ஆளப் பிறந்தோம்’ என்ற இணையவழி வழிகாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. பள்ளி, கல்லூரி மாணவ - மாணவிகளும், யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்குத் தயாராவோரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சியில், மாநில திட்டமிடல் மேம்பாட்டு கவுன்சில் உறுப்பினரும், பிரபல மண் உயிரியலாளர் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணருமான டாக்டர் சுல்தான் அகமது இஸ்மாயில், உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆக்ரா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.முனிராஜ் ஐபிஎஸ்., சங்கர் ஐஏஎஸ் அகாடமியின் இயக்குநர் டாக்டர் எஸ்.டி. வைஷ்ணவி ஆகியோர் பங்கேற்று கருத்துரையாற்ற உள்ளனர்.

இன்று காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை இந்த நிகழ்ச்சி நடைபெறும். பங்கேற்க விரும்புவோர் https://bit.ly/3pVDpGj என்ற லிங்க்கில் பதிவு செய்யலாம்.

## முகாமுக்கு வெளியே வாழும் 13,553 இலங்கை தமிழர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 ஆயிரம் நிவாரணம்

■ சென்னை

தமிழகத்தில் முகாமுக்கு வெளியில் வாழும் 13,553 இலங்கை தமிழர் குடும்பங்களுக்கு கரோனா நிவாரணமாக ரூ.4 ஆயிரம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் கரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4 ஆயிரம் நிவாரண நிதி வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை தமிழர்கள் பலர், முகாமுக்கு வெளியிலும் வசித்து வருகின்றனர். கரோனா பெருந்தொற்று காரணமாக இவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், முகாமுக்கு வெளியில் வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் வழங்கும் திட்டத்தை 5 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள 44 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களின் சொத்துகளை

# ‘ட்ரோன்’ உதவியுடன் துல்லியமாக அளவிடும் பணி விரைவில் முடிவடையும்

● உயர் நீதிமன்றத்தில் அறநிலையத் துறை அறிக்கை தாக்கல்

■ சென்னை

தமிழகம் முழுவதும் உள்ள கோயில் சொத்துகளை ‘ட்ரோன்’ கேமரா மூலமாக புவிசார்ந்த தகவல் அடிப்படையில் கண்டறிந்து துல்லியமாக அளவிடும் பணி விரைவில் முடிவடையும் என உயர் நீதிமன்றத்தில் அறநிலையத் துறை அறிக்கை அளித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை நுங்கம்பாக்கம் கோயில் வழிபாட்டாளர்கள் சங்கச் செயலாளர் ராதாராஜன், உயர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த மனுவில், “இந்து சமய அறநிலையத் துறையின் இணையதளத்தையும், தமிழகத்தில் உள்ள பிரசித்திபெற்ற கோயில்களின் தனிப்பட்ட இணையதளங்களையும் முறையாக பராமரிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்” என கோரியிருந்தார்.

## நீதிமன்றம் உத்தரவு

இந்த வழக்கை கடந்த ஆண்டு நவம்பரில் விசாரித்த நீதிபதி அனிதா சுமந்த், “தமிழகம் முழுவதும் உள்ள கோயில்கள், அவற்றின் சொத்துகள் குறித்த விவரங்கள், அந்த சொத்துகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா, வாடகை அடிப்படையில் விடப்பட்டுள்ளதா என்பது குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இதற்கு அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தகுந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என உத்தரவிட்டு இருந்தார்.

அதன்படி கடந்த ஜனவரி முதல் தொடர்ச்சியாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கில் அறநிலையத் துறை ஆணையர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

## அதிகாரி நியமனம்

தமிழகம் முழுவதும் உள்ள 44 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களின் விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கோயில் சொத்துகளைக் கண்டறிவது மற்றும் சரி பார்ப்பது உள்ளிட்ட பணிகளுக்காக மாவட்ட வருவாய் அதிகாரி அந்தஸ்தில் ஜெயபாரதி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். கரோனா பரவல் காரணமாக நில அளவையர்கள் மற்றும் விஏஓ-கள் அப்பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதால் கோயில் சொத்துகளை ஆய்வு செய்வதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழகம் முழுவதும் உள்ள கோயில் சொத்துகளை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, ‘ட்ரோன்’ கேமரா மூலமாக முப்பரிமாண அடிப்படையில் புகைப்படங்கள் எடுத்து, புவி சார்ந்த தகவல் அடிப்படையில் கண்டறிந்து அளவிடும் பணி விரைவில் முடிவடையும்.

ஜிபிஎஸ், ஜிஐஎஸ் போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் கோயில் சொத்துகள் மற்றும் நிலங்களின் நீளம், அகலம், உயரம் மிக துல்லியமாகக் கணக்கிடப்பட்டு, அதன் அடிப்படையில் சொத்து மதிப்பு கணக்கிடப்பட்டு வருகிறது. கோயில் சொத்து விவரங்கள், வாடகை, குத்தகை விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி அனிதா சுமந்த், வழக்கு விசாரணையை ஜூலை 21-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

உணவகங்களில் பார்சல் சேவையின்போது

# உறைகளை எச்சில் தொட்டு எடுக்கக் கூடாது

● சுகாதாரத் துறை செயலர் அறிவுறுத்தல்

■ சென்னை

உணவகங்களில் பார்சல் சேவையின்போது உறைகளை எச்சில் தொட்டு எடுப்பது, வாயில் ஊதிப் பிரிப்பது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்று சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. தவிர்க்க முடியாத காரணங்களால் ஊரடங்கு அறிவிக்கப்பட்டாலும் சில அத்தியாவசிய செயல்பாடுகளுக்கு தளர்வுகளும் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு வருகின்றன.

உணவுக் கூடங்களில் அமர்ந்து உண்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தளர்வுகளில் ஒன்றாக அனைத்து உணவகங்களிலும் பார்சல் சேவை வழங்க அனுமதிக்கப்பட்டது. உணவக பார்சல் சேவையில் உறைகளின் பயன்பாடு தவிர்க்க முடியாததாக உள்ளது. மளிகை, இறைச்சி மற்றும் மீன் கடைகளும் கட்டுப்பாடுகளுடன் செயல்பட அனுமதித்த நிலையில், அந்த கடைகளிலும் உறைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

உறைகளை எடுக்கும்போது, கடை ஊழியர்கள் எச்சில் தொட்டு அந்த உறைகளை எடுப்பது, பொருட்களை உள்ளே போடுவதற்காக வாயால் ஊதுவது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவது கரோனா தொற்று பரவுவதற்கு வழிவகுக்கும். அதனால், இதைத் தவிர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியம்.

## நீதிமன்றம் அறிவுறுத்தல்

சமீபத்தில் இது தொடர்பான ஒரு பொது நல வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், கடைகளின் ஊழியர்கள் உணவு பொருட்கள், மளிகை பொருட்கள், பேக்கரி பொருட்கள் ஆகியவற்றை பார்சல் செய்யும்போது உறைகளை கையால் எச்சில் தொட்டு பிரித்தல், வாயால் ஊதுதல் போன்ற செயல்களால் கரோனா வைரஸ் பரவும் ஆபத்து உள்ளது என்பது குறித்து கடை ஊழியர்களுக்கு அறிவுறுத்தவும், அவர்கள் அத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

கரோனா வைரஸ் தொற்றைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் வெற்றிபெற பொதுமக்களின் பங்களிப்பும் அவசியம். உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், பேக்கரி பொருட்கள் ஆகியவற்றை பார்சல் செய்யும் போது உறைகளை கையால் எச்சில் தொட்டு எடுத்தல், வாயால் ஊதிப் பிரித்தல் போன்ற செயல்களால் கரோனா தொற்று பரவும் அபாயம் உள்ளதை கடை உரிமையாளர்கள் கவனத்தில் கொண்டு, அவர்களுடைய ஊழியர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும்.

இவ்வாறு ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## அடுத்த 4 நாட்கள் மழைக்கு வாய்ப்பு

■ சென்னை

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு ஒருசில மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வெப்பச்சலனம் காரணமாக 20-ம் தேதி கடலோர மாவட்டங்கள், அவற்றை ஒட்டிய உள்மாவட்டங்கள் மற்றும் நீலகிரி, கோவை, தேனி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக் கூடும்.

21, 22, 23-ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழையும் பெய்யும்.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் 2,382 பேர் கருப்பு பூஞ்சையால் பாதிப்பு

● சுகாதாரத் துறை அமைச்சர் தகவல்

■ சென்னை

தமிழகத்தில் 2,382 பேர் கருப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் நிமிடத்துக்கு 500 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் மையத்தை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி எம்எல்ஏ உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தொடர்ந்து மருத்துவமனையில் நடைபெறும் கரோனா தடுப்பூசி முகாமை அவர் பார்வையிட்டார்.

தென்சென்னை எம்பி தமிழச்சி தங்கபாண்டியன், திருவிக நகர் எம்எல்ஏ தாயகம் கவி, மருத்துவக் கல்வி இயக்குநர் நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் குருநாதன், சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் தணிகாசலம் ஆகியோர் உடன் இருந்தனர்.

அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரோனா பரவலைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் பல இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. திருவல்லிக்கேணி - சேப்பாக்கம் தொகுதி எம்எல்ஏ உதயநிதி ஸ்டாலின் முயற்சியால் சில தினங்களுக்கு முன்பு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.1.50 கோடி மதிப்பில் 1,000 லிட்டர் ஆக்சிஜன் ஜெனரேட்டர் மையம் அமைக்கப்பட்டது. தற்போது, சைதாப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு ஆக்சிஜன் ஜெனரேட்டரை பெற்று தந்துள்ளார்.

தமிழக அரசின் தீவிர நடவடிக்கைகளால் 9 ஆயிரத்துக்கும் குறைவாக தொற்று குறைந்துள்ளது. இந்தியாவிலேயே அதிகமான தடுப்பூசி போடப்பட்ட மாநகரமாக சென்னை திகழ்கிறது. இதுவரை தமிழகத்துக்கு 1.22 கோடி தடுப்பூசிகள் வந்துள்ளன. இதில், 1.14 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 5.56 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. இன்று 3 லட்சம் தடுப்பூசிகள் வரவுள்ளன.

தமிழகத்துக்கு அதிகமான தடுப்பூசிகளை வழங்குமாறு பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை வைத்தார். அதன்படி, தினமும் தமிழகத்துக்கு தடுப்பூசிகள் வந்து கொண்டிருக்கின்றன. கரோனா தொற்று 3-வது அலை வந்தாலும், அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 1.79 லட்சம் படுக்கைகள் தயாராக உள்ளன. 3-வது அலை குழந்தைகளை தாக்கும் என்ற செய்திகள் வருவதால் குழந்தைகளுக்கான சிகிச்சை வார்டுகள் திறக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் இதுவரை 2,382 பேர் கருப்பு பூஞ்சை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 111 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இந்நோய்க்கு தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன. முதல்வரின் காப்பீட்டுத் திட்டத்தில் கருப்பு பூஞ்சை நோய்க்கு சிகிச்சை அளிப்பது தொடர்பான கோரிக்கை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதுகுறித்து முதல்வர் விரைவில் அறிவிப்பார்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

## சென்னையில் மாதந்தோறும்

# ஒரு வாரம் தீவிர தூய்மைப் பணி நடைபெறும்

● மாநகராட்சி ஆணையர் தகவல்

■ சென்னை

சென்னையில் மாதந்தோறும் ஒரு வார காலம் தீவிர தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் நாள்தோறும் சராசரியாக 5 ஆயிரம் டன் குப்பை சேகரிக்கப்படுகிறது. அதில் குறிப்பிட்ட அளவு குப்பை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக வகை பிரிக்கப்பட்டு இயற்கை உரமாகவும், உயிரி எரிவாயுவாகவும் மாற்றி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், உலர்கழிவுகள் வகை பிரிக்கப்பட்டு மறுபயன்பாட்டுக்கு அனுப்பப்படுகிறது.

சென்னையில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகளை மேலும் தீவிரப்படுத்த கடந்த மாதம் மாநகராட்சியின் சார்பில் தொடர்ந்து 10 நாட்கள் தீவிர தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு நீண்ட நாட்களாக தேங்கியிருந்த 3 ஆயிரத்து 260 டன் குப்பைகள் மற்றும் 10 ஆயிரத்து 85 டன் கட்டிடக் கழிவுகள் என மொத்தம் 13,345 டன் கழிவுகள் அகற்றப்பட்டு அவ்விடங்கள் தூய்மையாக பராமரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய தீவிர தூய்மைப் பணியை மாதந்தோறும் ஒரு வாரக் காலத்துக்கு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள 614 இடங்கள் கண்டறியப்பட்டு 21-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை ஒரு வாரம் தீவிர தூய்மைப் பணி நடைபெறவுள்ளது.

### 15 மண்டலங்களிலும்..

இந்த ஒரு வார தீவிர தூய்மைப் பணி மூலம் சுமார் 1,000 டன் குப்பைகள் மற்றும் 4 ஆயிரத்து 500 டன் கட்டிடக் கழிவுகளை அகற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, மாநகராட்சி சார்பில் தீவிர தூய்மைப் பணிகளை கண்காணிக்க 15 மண்டலங்களிலும் அனுபவம் வாய்ந்த பொறியாளர்கள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள தீவிர தூய்மைப் பணிகளை நாள்தோறும் கண்காணித்து அவ்விடங்களை தூய்மையாக பராமரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கோட்டூர்புரத்தில் சாலையோரம் காத்திருந்த

# பட்டதாரிகளை சந்தித்த முதல்வர் ஸ்டாலின்

● சமூக வலைதளங்களில் வரவேற்பு

■ சென்னை

சாலையோரம் காத்திருந்த பட்டதாரிகளை கவனித்து, தனது வாகனத்தை நிறுத்தி, முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை மனுவை பெற்றுக்கொண்டதற்கு சமூக வலைதளங்களில் வரவேற்பு கிடைத்துள்ளது.

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலந்துகொண்டார். நிகழ்ச்சி முடிந்தபின் தனது காரில் தலைமைச்செயலகத்துக்கு சென்றுகொண்டு இருந்தார். அப்போது பட்டதாரிகள் சிலர் கோரிக்கை மனுக்களுடன் காந்தி மண்டபம் சாலையில் காத்திருப்பதை பார்த்தார்.

இதையடுத்து தனது வாகனத்தை நிறுத்தச் சொன்ன முதல்வர் ஸ்டாலின், அவர்களிடம் நலம் விசாரித்தார். பின்னர் அவர்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். "இப்படி சாலையில் காத்திருக்க வேண்டாம். கோரிக்கை மனுவை தலைமைச் செயலகத்தில் வந்து தரவேண்டும்" எனக் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

அடுத்த சில நிமிடங்களில் முதல்வரிடம் கோரிக்கை மனு அளித்த பட்டதாரிகளை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்தார். அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். முதல்வர் ஸ்டாலினின் இந்த செயல்பாட்டுக்கு சமூக வலைத்தளங்களில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இதுகுறித்து கோரிக்கை மனு அளித்த பட்டதாரி அருள்செல்வி கூறும்போது, "2018-19-ம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் முதுநிலை பட்டதாரி ஆசிரியருக்கான போட்டித்தேர்வை நடத்தியது. இந்த தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் சரிபார்ப்பையும் முடித்திருந்தோம். அதில் ஒருபிரிவினர் பணியில் அமர்த்தப்பட்டனர். 2-ம் பட்டியலில் இருந்த சுமார் 1,500 பேர் தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

கரோனா பரவல், சட்டப்பேரவை தேர்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பணி வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, எங்களுக்கு பணிநியமன ஆணை வழங்க கோரிக்கை வைத்துள்ளோம். முதல்வர் எங்களை கவனித்து மனுக்களை பெற்றுக்கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.



▲ சென்னை கோட்டூர்புரத்தில், சாலையோரம் காத்திருந்த பட்டதாரிகளிடம் கோரிக்கை மனுவை பெற்றுக்கொள்ளும் முதல்வர் மு.க. ஸ்டாலின். படம்: பு.க.பிரவீன்

# சிவசங்கர் பாபா பள்ளி ஆசிரியை முன்ஜாமீன் மனு

■ சென்னை

பாலியல் வழக்கில் சிவசங்கர் பாபா கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரது பள்ளியின் ஆங்கில ஆசிரியை தீபா முன்ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள தனது பள்ளியில் படித்த மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக சிவசங்கர் பாபா கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கு உடந்தையாக செயல்பட்டதாக சிவசங்கர் பாபாவின் சீடரான சுஷ்மிதாவையும் சிபிசிஐடி போலீஸார் கைது செய்துள்ளனர். இந்நிலையில் சிவசங்கர் பாபா நடத்தி வந்த தனியார் பள்ளியில் ஆங்கில ஆசிரியையாக பணியாற்றி வந்த தீபா வெங்கட்ராமன் முன்ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், "கடந்த 2014-ம் ஆண்டு முதல் கேளம்பாக்கம் சுஷில் ஹரி இண்டர்நேஷனல் பள்ளியில் ஆங்கில ஆசிரியையாக பணியாற்றி வருகிறேன். பாலியல் வழக்கில் சிவசங்கர் பாபா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் எனக்கு எதிராக முன்னாள் மாணவிகள் சிலர் அளித்த புகாரில் சிபிசிஐடி போலீஸார் போக்ஸோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. எனக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. எனவே எனக்கு முன்ஜாமீன் வழங்க உத்தரவிட வேண்டும்" என அதில் கோரியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.240 குறைவு

■ சென்னை

கரோனா பாதிப்பு குறைந்துவருவதால், தொழில் மற்றும் உற்பத்தியில் முதலீட்டாளர்களின் கவனம் திரும்பியுள்ளது. இதனால் சர்வதேச அளவில் தங்கத்தின் விலை குறைந்து வருகிறது.

சென்னையில் 22 கேரட் தங்கம் நேற்று பவுனுக்கு ரூ.240 குறைந்து ரூ.35,440க்கு விற்கப்பட்டது. 22 கேரட் கொண்ட ஒரு கிராம் தங்கம் ரூ.4,430-க்கு விற்பனை ஆனது. இதுவே, நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.4,460-க்கு விற்கப்பட்டது.



▲ சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஆக்சிஜன் தயாரிக்கும் இயந்திரத்தை நேற்று தொடங்கிவைத்த உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ, அங்கு கரோனா தொற்று சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நலம் விசாரித்து, நிவாரணப் பொருட்களையும் அவர்களுக்கு வழங்கினார். படம் க.ஸ்ரீபரத்

# தந்தையை போலவே நீதிபதி சுப்பையாவும் முன்மாதிரி தீர்ப்புகளை வழங்கியுள்ளார்

● பிரிவு உபச்சார விழாவில் தலைமை வழக்கறிஞர் புகழாரம்

■ சென்னை



▲ ஆர்.சுப்பையா

தனது தந்தையைப் போலவே நீதிபதி ஆர்.சுப்பையாவும் பல சிறப்புமிக்க முன்மாதிரி தீர்ப்புகளை வழங்கியுள்ளார் என அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் புகழாரம் சூட்டினார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மூத்த நீதிபதியாக பணியாற்றிய நீதிபதி ஆர். சுப்பையா, பணி ஓய்வு பெற்றதையடுத்து தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி தலைமையில் அவருக்கு பிரிவு உபச்சார விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த நீதிபதிகள் என்.கிருபாகரன், எம்.எம்.சுந்தரேஷ், டி.எஸ்.சிவஞானம், எம்.துரைசாமி, டி.ராஜா, பி.என்.பிரகாஷ் உள்ளிட்ட சக நீதிபதிகள், அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஆர்.சங்கரநாராயணன், மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா, உயர் நீதிமன்ற மதுரை கிளை அரசு மூத்த வழக்கறிஞர் வீர கதிரவன், தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், மெட்ராஸ் பார் அசோசியேஷன் அட்ஹாக் கமிட்டி தலைவர் ரங்கபாஷ்யம், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் பேசியதாவது: நீதிபதி ஆர். சுப்பையா தனது தந்தையான மறைந்த உச்ச நீதிமன்ற நீதிபதி ரத்னவேல்பாண்டியனைப் போலவே சட்டத்தின் அனைத்து துறைகளையும் அலசி ஆராய்ந்து பல்வேறு சிறப்பு மிக்க முன்மாதிரி தீர்ப்புகளை வழங்கியுள்ளார். சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2008-ம் ஆண்டு நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், கடந்த 13 ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்தில் 63,420 வழக்குகள் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் 81,033 வழக்குகள் என மொத்தம் ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 453 வழக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளார். எளிமைக்கும், அமைதிக்கும் பெயர் போனவர் நீதிபதி ஆர்.சுப்பையா என்றார்.

நீதிபதி சுப்பையா ஏற்புரை நிகழ்த்தினார். உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் பி.தனபால் நன்றி கூறினார்.

## தி.நகர் முன்னாள் எம்எல்ஏ மீதான புகார்

# லஞ்ச ஒழிப்பு போலீஸார் பதில் அளிக்க உத்தரவு

■ சென்னை

தி.நகர் அதிமுக முன்னாள் எம்எல்ஏ சத்யநாராயணன் தொகுதி நிதியில் முறைகேடு செய்ததாக தொடரப்பட்ட வழக்கில், லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை ராயபுரத்தை சேர்ந்த அரவிந்தாக்ஷன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

சென்னை தி.நகர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மேற்கு மாம்பலம் பகுதியில் அம்மா உள்விளையாட்டு அரங்கம் கட்ட கடந்த 2016-17 நிதியாண்டில் 5 கட்டங்களாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த தொகை முறையாக செலவிடப்படவில்லை.

2017-18 நிதியாண்டில் எம்எல்ஏ தொகுதி நிதியில் அரசாணைக்கு புறம்பாக ரூ.2 கோடிக்கு சாலை அமைக்கும் பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல, கடந்த 2018-19 நிதியாண்டில் மேற்கு மாம்பலம் காசி குளம் பகுதியில் கட்டிடமே கட்டப்படாமல் ரூ.30 லட்சம் முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தி.நகர் அதிமுக முன்னாள் எம்எல்ஏ சத்யா என்ற சத்யநாராயணன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுதொடர்பாக வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.நிர்மல்குமார் இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் வரும் ஜூன் 27-ம் தேதிக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

## கரூர் வைஸ்யா வங்கி சார்பில் 108 அவசரகால சேவைக்கு

# ரூ.1.77 கோடி மதிப்பில் 10 ஆம்புலன்ஸ் வாகனங்கள்

● முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கிவைத்தார்

■ சென்னை

கரூர் வைஸ்யா வங்கி சார்பில் மலைவாழ் மக்கள் பயன்பாட்டுக்கு உட்பட ரூ.1.77 கோடி மதிப்புள்ள 10 ஆம்புலன்ஸ்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

108 இலவச ஆம்புலன்ஸ் சேவை திட்டம் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியால் கடந்த 2008 செப்டம்பர் 15-ம் தேதி தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டது.

இந்த சேவையில் தற்போது 1,303 அவசரகால ஊர்திகள் (ஆம்புலன்ஸ்கள்) உள்ளன. இந்நிலையில், கரூர் வைஸ்யா வங்கி சமூக பொறுப்புணர்வுடன், தமிழக அரசு செயல்படுத்தும் 108 இலவச அவசரகால ஊர்தி சேவை பயன்பாட்டுக்காக, ரூ.64.47 லட்சம் மதிப்பில் 2 மேம்படுத்தப்பட்ட உயிர்காக்கும் அவசரகால ஊர்திகள், மலைவாழ் மக்களின் சேவைக்காக ரூ.1.12 கோடி மதிப்பிலான 8 அவசரகால ஊர்திகள் என மொத்தம் ரூ.1. கோடியே 76 லட்சத்து 87,472 மதிப்பிலான 10 அவசரகால ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் சேவைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், உதயநிதி ஸ்டாலின் எம்எல்ஏ, சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்ட இயக்குநர் ச.உமா, கரூர் வைஸ்யா வங்கியின் பொது மேலாளர் சுதாகர், துணை பொது மேலாளர் கணேசன், உதவி பொது மேலாளர் கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, கடந்த மே 17-ம் தேதி கரோனா நிவாரணம் தொடர்பாக மாநில பேரிடர் நிவாரண நிதிக்காக ரூ.1 கோடியை கரூரில் அமைச்சர் செந்தில்பாலாஜியிடம், கரூர் வைஸ்யா வங்கியின் நிர்வாக இயக்குநர் பி.ரமேஷ்பாபு வழங்கினார்.



▲ கரூர் வைஸ்யா வங்கி சார்பில் ரூ.1.77 கோடியில் வழங்கப்பட்டுள்ள 10 புதிய ஆம்புலன்ஸ்களை சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், கரூர் வைஸ்யா வங்கியின் பொது மேலாளர் சுதாகர், துணை பொது மேலாளர் கணேசன், உதவி பொது மேலாளர் கிருஷ்ணன் உள்ளிட்டோர். படம்: ம.பிரபு






## தீவுத்திடலில் 365 நாட்களும் பொருட்காட்சி நடத்த நடவடிக்கை

### சுற்றுலா துறை அமைச்சர் அறிவுறுத்தல்

■ சென்னை

தமிழ்நாடு சுற்றுலா துறை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுற்றுலா துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நேற்று சென்னை தீவுத்திடலில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் தயாரிக்கப்படும் உணவுகளின் தரத்தை ஆய்வு செய்தார். இந்த உணவுகளை ஆன்லைன் மூலமாக ஆர்டர் செய்து சாப்பிடுவதற்கு ஒரு செல்போன் அப்ளிகேஷனை உருவாக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பொருட்காட்சி மைதானத்தை பார்வையிட்ட அமைச்சர், அங்கு 365 நாட்களும் பொருட்காட்சி மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்தி அதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு கூடுதல் வருவாய் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். தீவுத்திடலில் உள்ள இரண்டு மைதானத்துக்கும் செல்ல வசதியாக கூவம் நதிக்கரையின் நடுவில் ஒரு நிரந்தர பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

## சென்னையில் நாளைமுதல்

# 10 நாட்கள் பராமரிப்புப் பணிகள்

● குடிநீர் வாரியம் அறிவிப்பு

■ சென்னை

சென்னைக் குடிநீர் வாரியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால், பருவமழைக்கு முன்னதாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பகுதி 1 முதல் 15 வரை மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள தெருக்களில் கழிவுநீர் கட்டமைப்புகளை முழுமையாக தூர்வாருதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் நாளைமுதல் 30-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இப்பணியின்போது திருவொற்றியூர், ராயபுரம், அம்பத்தூர், அண்ணாநகர், கோடம்பாக்கம், அடையாறு, சோழிங்கநல்லூர் உட்பட 15 பகுதிகளில் உள்ள 801 தெருக்களில் பெருமளவில் கழிவுநீர் செல்லும் குழாய்களில் உள்ள கசடுகள் அகற்றப்படும்.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் அடைப்பு, வழிந்தோடுதல் தொடர்பான குறைகளை தொடர்புடைய பகுதி அலுவலகத்திலும் மற்றும் பணிமனையிலும் தொடர்பு கொண்டு தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 TNadu_01 S.VENKATACHALAM Time



பொன்மொழி: தான் விரும்புவதை செய்யக்கூடியவன் வல்லவன். தான் செய்யக்கூடியதை செய்ய விரும்புபவன் அறிவாளி.
- பிஸ்மார்க்

இணையம்: சில சமயங்களில் ஓர் இணையதளத்துக்கு செல்லமுடியாத நிலை ஏற்படும். அது நம் கணினியில் மட்டும் வரவில்லையா, அந்த இணையதளத்திலேயே பிரச்சினையா என அறிய https://downforeveryoneorjustme.com இணையதளம் உதவும். சம்பந்தப்பட்ட URL—ஐ இதில் உள்ளீடு செய்தால், பிரச்சினை என்ன என தெரிவித்துவிடும்.

பொதுஅறிவு: தேசியக் கொடி, தேசிய கீதம், சின்னம், பறவை, விலங்கு பட்டியலில் இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக லேக்டோபேசிலஸ் டெல்புரூக்கி (Lactobacillus Delbrueckii) என்ற பாக்டீரியா 2012—ல் அங்கீகரிக்கப்பட்டது. இது வேதிவினை புரிந்து பாலில் இருக்கும் புரதத்தை மாற்றுவதால் தயிர் கிடைக்கிறது.

# தமிழகத்தில் புதிதாக 8,183 பேருக்கு கரோனா தொற்று

**● சென்னையில் இதுவரை 8 ஆயிரம் பேர் உயிரிழப்பு**

**சென்னை**

தமிழகத்தில் புதிதாக 8,183 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டது. முதியவர்கள் உட்பட 180 பேர் உயிரிழந்தனர். சென்னையில் தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக சுகாதாரத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 4,620, பெண்கள் 3,563 என மொத்தம் 8,183 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக கோவையில் 1,014, ஈரோட்டில் 933, சென்னையில் 468 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 24 லட்சத்து 14,680 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை சென்னையில் 5 லட்சத்து 18,474 பேர் உட்பட தமிழகம் முழுவதும் 23 லட்சத்து 4,885 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று 18,232 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். கோவையில் 11,191, ஈரோட்டில் 8,928, சென்னையில் 2,262 பேர் உட்பட தமிழகம் முழுவதும் 78,780 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அரசு, தனியார் மருத்துவமனைகளில் நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 180 பேர் உயிரிழந்தனர். சென்னையில் 31 பேர் இறந்துள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் கரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31,015 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் 8,032 பேர் இறந்துள்ளனர்.

தமிழகத்தில் 273 அரசு, தனியார் ஆய்வகங்களில் இதுவரை 3 கோடியே 9 லட்சத்து 96,798 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்று மட்டும் 1 லட்சத்து 71,179 பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் கரோனா பரவல் ஆச்சரியம் அளிக்கும் வகையில் குறைந்து வருகிறது. 18-ம் தேதி நிலவரப்படி, நாளொன்றுக்கு தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை 500-க்கும் கீழ் குறைந்துள்ளது. இது மாநகராட்சி நிர்வாகத்துக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

சுமார் ஒன்றரை மாதத்தில் சுமார் 15 மடங்கு தொற்று குறைந்துள்ளது. அதே நேரத்தில் சிகிச்சை பலனின்றி கடந்த 18-ம் தேதி ஒரே நாளில் 48 பேர் உயிரிழந்தது கவலை அளிக்கும் விதமாக உள்ளது. கடந்த மே 6-ம் தேதி முதல் ஜூன் 18-ம் தேதி வரையிலான 44 நாட்களில் மட்டுமே 3,049 பேர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர்.

அதிகபட்சமாக சென்னையில் கரோனா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தோர் எண்ணிக்கை கடந்த மே 6-ம் தேதி 5 ஆயிரத்தை கடந்து 5,021 ஆக இருந்தது. மே 19-ம் தேதி 6 ஆயிரத்தை கடந்தது. மே 31-ம் தேதி 7 ஆயிரத்தை கடந்தது. ஜூன் 18-ம் தேதி 8 ஆயிரத்தை கடந்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 8,001 ஆனது. ஒரே மாதத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக அண்ணாநகர் மண்டலத்தில் 931 பேர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மண்டலங்களில் தலா 913 பேர் உயிரிழந்துள்ளனர்.

**இறப்பை குறைக்க நடவடிக்கை**

சென்னையில் இறப்பு எண்ணிக்கையை குறைக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

கரோனா அறிகுறி உள்ளதா என ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க 12 ஆயிரம் களப்பணியாளர்கள் தினமும் வீடு வீடாக சென்று ஆய்வு செய்து வருகின்றனர். அதில் காய்ச்சல் அறிகுறி இருந்தால், கரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. தொற்று உறுதியானால் அவர்களை பரிசோதிக்க, முதற்கட்ட உடற்பரிசோதனை மையங்கள் 21 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

வீட்டு தனிமையில் இருக்கும் கரோனா நோயாளிகளை தொலைபேசியில் தொடர்புகொண்டு உடல் நலம் விசாரிக்கவும், மருந்து உட்கொள்ளுதல், அந்த நோயாளிகளின் குடும்பத்துக்கு தேவையான அடிப்படை உதவிகள் களப்பணியாளர்கள் மூலம் கிடைக்கிறதா என்பதை உறுதி செய்ய பயிற்சி மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். வீடுகளில் தனிமைப்படுத்திக்கொண்ட நோயாளிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த கையேடுகளும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இறப்பு எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகிறது.

கரோனாவால் உயிரிழப்பவர் விவரங்கள்

# முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்

**● ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலர் உத்தரவு**

**சென்னை**

கரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் பெயர், முகவரி உள்ளிட்ட முழு விவரங்களையும் மருத்துவமனைகள் சரியாக பதிவேற்றம் செய்கிறதா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும் என்று தலைமைச் செயலர் வெ.இறையன்பு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ஆட்சியர்களுக்கு அவர் அனுப்பிய கடிதம்:

கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைந்து திரும்பினாலோ, உயிரிழந்தாலோ அவர்களது பெயர், முகவரி, வயது உள்ளிட்ட விவரங்களை மருத்துவமனைகள் சரியாக பதிவேற்றம் செய்வதில்லை என்றும், இதனால், இறப்பு தொடர்பான சான்றிதழ், வாரிசு சான்றிதழ் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படுவதாகவும் நோயாளிகளின் உறவினர்கள் அரசுக்கு புகார் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற விவரங்களை சரியாக பதிவு செய்வது குறித்து ஏற்கெனவே பலமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, மாவட்ட ஆட்சியர்கள் இதில் நேரடியாக தலையிட்டு, சரியான விவரங்களை பதிவு செய்யுமாறு மருத்துவமனை அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ்கள் போன்றவை தாமதமின்றி கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மில்கா சிங் மறைவுக்கு ஆளுநர், முதல்வர் இரங்கல்

**சென்னை**

பிரபல முன்னாள் தடகள வீரர் மில்கா சிங் மறைவுக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்:** தடகள சாதனையாளர் மில்கா சிங் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சிடையந்தேன். ஆசிய விளையாட்டு போட்டிகளில் 4 முறை தங்கப் பதக்கம் வென்று, 'பறக்கும் சீக்கியர்' என போற்றப்பட்டவர். வாழ்க்கையில் பல்வேறு போராட்டங்களை கடந்து வெற்றி பெற நினைக்கும் இந்தியர்களுக்கு அவரது போராட்ட குணம் பெரிய ஊக்கமாக இருந்தது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இந்தியாவின் தலைசிறந்த தடகள வீரர்களில் ஒருவரும், 'பறக்கும் சீக்கியர்' என்று அழைக்கப்படுபவருமான மில்கா சிங் மறைவுச் செய்தி அறிந்து வருத்தமுற்றேன். சோதனைகளை வென்று சாதனை படைத்த அவரது வாழ்வு மேலும் பல இளம் இந்தியர்களை சாதிக்கத் தூண்டட்டும்.



▲ தமிழகத்தில் கூடுதல் தளர்வுகளுடன் ஊரடங்கு நீட்டிக்கப்பட வாய்ப்பு உள்ள நிலையில், பேருந்து சேவை தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், சென்னை கோயம்பேடு பணிமனையில் பேருந்துகளை சுத்தம் செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். படம்: பு.க.பிரவீன்

# 'நீட்' தேர்வுக்கு முழு காரணம் திமுகதான்

**● அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு**

**சென்னை**

'நீட்' தேர்வுக்கு முழு காரணம் திமுகதான் என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

'நீட்' தேர்வு மற்றும் 'நீட்' தேர்வுக்கான பயிற்சிகள், அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டதாக, சுகாதாரத் துறை அமைச்சர் கூறியுள்ளது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் உள்ளது.

மருத்துவச் சேர்க்கைக்கு 'நீட்' தேர்வு நடத்துவதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்ட 2010-ம் ஆண்டில் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தது அதிமுக என்று அமைச்சர் தனது பேட்டியில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். 2006 முதல் 2011 வரை திமுகதான் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தது. மத்தியிலும் திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்றது. 'நீட்' தேர்வு திமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது என்பதற்கு வேறு ஆதாரம் தேவையில்லை.

மத்திய அரசுக்கு அதரவு அளித்ததன் மூலம் அந்த அறிவிக்கைக்கும் மறைமுகமாக ஆதரவு அளித்துவிட்டு, இப்போது அதிமுகதான் காரணம் என்று சொல்வதை ஏற்க முடியாது. இதை கடுமையாக கண்டிக்கிறேன். 'நீட்' தேர்வுக்கு முழு மூலக் காரணம் திமுகதான்.

இந்த ஆண்டைப் பொருத்தவரை, கரோனா காரணமாக மத்திய, மாநில அரசுகளால் நடத்தப்படும் பிளஸ் 2 தேர்வுகளே ரத்து செய்யப்பட்ட நிலையில், 'நீட்' தேர்வு நடக்க வாய்ப்பில்லை என மாணவர்கள் நினைத்திருந்தனர். இது குறித்து நான் அறிக்கை வெளியிட்டதையடுத்து, "இந்த நிமிடம் வரை நீட் தேர்வு உண்டு" என்று அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று அறிவித்துவிட்டு, தற்போது இவ்வாறு அறிவித்திருப்பது, சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்பதை எடுத்துக்காட்டுகிறது.

'நீட்' தேர்வுக்கு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது அதிமுக ஆட்சியில்தான் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

'நீட்' தேர்வுக்கு வித்திட்டுவிட்டு, தற்போது பயிற்சி அளிப்பதை குறை கூறுவது எவ்விதத்தில் நியாயம்? நீட் தேர்வால் கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவதை அறிந்துதான், அதிமுக அரசு, மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கியது. இதன்மூலம் ஏழை, கிராமப்புற மாணவர்களை பாதுகாத்தது அதிமுக அரசுதான். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாணவர்களுக்கும்

# கரோனா தடுப்பூசிக்காக ரூ.1,000 சாஸ்த்ரா பல்கலை. வழங்குகிறது

**சென்னை**

தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் பயிலும் அனைத்து மாணவர்களும் கரோனா தடுப்பூசி போட்டுக் கொள்வதற்காக அவர்களுக்கு தலா ரூ.1,000 வழங்கப்படுவதாக பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தஞ்சாவூரில் உள்ள சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகம் தனது மாணவர்கள் 2021-22 கல்வியாண்டில் வளாகத்துக்கு வர ஏதுவாக, அவர்கள் அனைவரும் கரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள தலா ரூ.1,000 வழங்க உள்ளது.

இத்திட்டம் அவர்கள் தடுப்பூசிக்கான செலவை ஈடுகட்ட உதவும். இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள 8 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

அரசு உத்தரவு வந்தவுடன் வகுப்புகள் தொடங்கப்படும்போது, அவர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொண்டு பாதுகாப்புடன் வர இயலும்.

சமீபத்தில் மாணவர்கள் இணையவழி தேர்வு எழுத உதவும் வகையில், இணைய வழி இணைப்பு செலவுக்காக சுமார் 12 ஆயிரம் மாணவர்களுக்கு தலா ரூ.500 வழங்கப்பட்டது.

**இலவச தடுப்பூசி முகாம்**

ஏப்ரல், மே மாதங்களில் சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக் கழக ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக இலவச தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. தமிழக அரசு உதவியுடன் நடத்தப்பட்ட இந்த முகாம்கள் மூலம் சுமார் 600 பேர் பயன்பெற்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேகேதாட்டு அணை விவகாரத்தில்

# உச்ச நீதிமன்றத்தை அரசு நாட வேண்டும்

**● ராமதாஸ், திருமாவளவன், விஜயகாந்த் வலியுறுத்தல்**

**சென்னை**

மேகேதாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், தேமுதிக தலைவர் விஜயகாந்த் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் கூறியுள்ளதாவது:

**ராமதாஸ்:** தமிழக எல்லையை ஒட்டிய மேகேதாட்டு பகுதியில் புதிய அணை கட்டுவதற்கான ஏற்பாடுகளை கர்நாடக அரசு அனுமதியின்றி மேற்கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்வதற்காக வல்லுநர் குழுவை அனுப்ப வேண்டும் என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு தீர்ப்பு அளித்திருந்தது. அந்த தீர்ப்பை அத்தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு ரத்து செய்துள்ளது. இது தமிழகத்துக்கு ஏற்பட்ட பின்னடைவு. எனவே முதன்மை அமர்வு அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திருமாவளவன்:** மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடக அரசையே மத்திய அரசு ஆதரிக்கிறது. காவிரி பிரச்சினை என்பது ஏதோ டெல்டா மாவட்ட விவசாயிகளின் பிரச்சினை அல்ல. தமிழகத்தின் உயிர்நாடியான உரிமை பிரச்சினையாக மாற்றவேண்டிய கடமை திமுக அரசுக்கு உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தாலும், இதை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள வேண்டிய தேவை தமிழகத்துக்கு உள்ளது. எனவே, தமிழகத்தில் உள்ள அனைவரும் காவிரிப் பிரச்சினையில் ஒன்றுபட்டு இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும் மேகேதாட்டுவில் அணை கட்டாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய்வதற்காகவும் உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் கூட்ட வேண்டும்.

**விஜயகாந்த்:** காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு என்ற இடத்தில் கர்நாடக அரசு 9 ஆயிரம் கோடி செலவில் அணை கட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அணை கட்டும் முடிவை கர்நாடக அரசு உடனடியாக கைவிட வேண்டும். தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அணை கட்ட கர்நாடகாவுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது. இந்த விவகாரம் தொடர்பாக ஆலோசிக்க, அனைத்துக் கட்சி கூட்டத்தை தமிழக அரசு உடனடியாக கூட்ட வேண்டும். மேகேதாட்டுவில் அணை கட்டும் பணியை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவை கலைத்து தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மீதான

# அவதூறு வழக்குகள் வாபஸா?

**● நிலுவை வழக்கு விவரம் கோரியது அரசு**

**சென்னை**

தமிழகம் முழுவதும் பல்வேறு தருணங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மீது அரசால் தொடரப்பட்ட அவதூறு வழக்குகளின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை தமிழக அரசு கோரியுள்ளது. இதன் மூலம் அந்த வழக்குகள் விரைவில் வாபஸ் பெறப்படலாம் என தெரிகிறது.

கடந்த 2011 முதல் 2021 வரை, 10 ஆண்டுகளில் அப்போதைய தமிழக அரசு, முதல்வர் மற்றும் அமைச்சர்கள் மீதான விமர்சனங்கள் அடிப்படையில், அதிக அளவில் அவதூறு வழக்குகள் அரசாலும், முதல்வர், அமைச்சர்கள் தரப்பிலும் தொடரப்பட்டன.

இந்த வழக்குகளில் சில தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. சில வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. மற்ற வழக்குகள் அந்தந்த மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இதேபோல, எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான பல்வேறு வழக்குகள் அதற்கான சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன.

தற்போது புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், கடந்த 2011-2021-க்கு இடைப்பட்ட 10 ஆண்டுகளில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட பேச்சாளர்கள், பத்திரிகையாளர்கள் மீது தொடரப்பட்டுள்ள அவதூறு வழக்குகள் நிலுவை மற்றும் அவற்றின் தற்போதைய நிலை மற்றும் எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் மீது சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் குற்றவியல் வழக்கு நிலுவை விவரங்களை அரசுக்கு உடனடியாக அனுப்பும்படி சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதன்மூலம், தன்மையைப் பொருத்து அவை வாபஸ் பெறப்படலாம் எனத் தெரிகிறது.

# 'பப்ஜி' மதனால் பாதிக்கப்பட்டோர் புகார் கொடுக்கலாம்

**● மத்திய குற்றப்பிரிவு போலீஸார் அறிவிப்பு**

**சென்னை**

'பப்ஜி' மதனால் பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுக்கலாம் என்று மத்திய குற்றப்பிரிவு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

'பப்ஜி' விளையாட்டின்போது ஆபாசமாக பேசியதாக மதன் மற்றும் அவரது மனைவி கிருத்திகா ஆகியோரை சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மத்திய குற்றப்பிரிவு போலீஸார் நடத்திய விசாரணையில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூகுள் பே மூலமாக மதன் பலரிடம் பணம் பெற்றிருக்கிறார். யூ-டியூப் சேனல்கள் மூலமாக கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்த மதன், அதற்கு வருமான வரி கட்டவில்லை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

**ஆடி கார், ரூ.4 கோடி பணம்**

மதனின் மனைவி கிருத்திகாவின் வங்கிக் கணக்கில் மட்டும் ரூ.4 கோடி உள்ளது. தாம்பரம் அருகே பெருங்களத்தூரில் ரூ.45 லட்சம் மதிப்பில் ஒரு வீடு, ஆடி மற்றும் பிஎம்டபிள்யூ என 2 சொகுசு கார்கள், பல லட்ச ரூபாய் மதிப்பில் தங்க, வைர நகைகள் மதனிடம் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.



▲ சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்துக்கு நேற்று அழைத்து வரப்பட்ட பப்ஜி மதன். படம் க.ஸ்ரீபரத்

**வருமான வரி ஏய்ப்பு**

இந்த சொத்துகளுக்கு மதன் வருமான வரி கட்டவில்லை என்றும் தெரியவந்துள்ளது. எனவே, மதனின் சொத்துகள் குறித்து வருமான வரித் துறைக்கு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் தகவல் கொடுத்துள்ளனர்.

"மதனை நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்கள் காவல் துறையில் புகார் அளிக்கலாம். dcpccbi@gmail.com என்ற முகவரி மூலமாகவும் புகார் அளிக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிக்கும் பட்சத்தில் அவர்களது பணம் திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மத்திய குற்றப்பிரிவு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் மாநில நலனுக்கு ஆபத்தானது

# 'நீட்' பாதிப்பு குறித்து ஏ.கே.ராஜன் குழுவுக்கு கடிதம் அனுப்புங்கள்

**● மாணவர்கள், பெற்றோருக்கு நடிகர் சூர்யா, இயக்குநர் தங்கர் பச்சான் வேண்டுகோள்**

**சென்னை**

மாணவர் நலனுக்கும், மாநில நலனுக்கும் நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் ஆபத்தானவை. நீட் தேர்வு எதிர்ப்புக்கான காரணங்களை நீதிபதி ஏ.கே.ராஜன் குழுவுக்கு மாணவர்கள், பெற்றோர் அனுப்ப வேண்டும் என்று நடிகர் சூர்யா, இயக்குநர் தங்கர் பச்சான் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

**நடிகர் சூர்யா:** ஏழைகளுக்கு ஒரு விதமான கல்வி வாய்ப்பும் பணம் படைத்தவர்களுக்கு ஒருவிதமான கல்வி வாய்ப்பும் இருக்கிற சூழலில், தகுதியை தீர்மானிக்க ஒரே தேர்வு முறை என்பது சமூக நீதிக்கு எதிரானது. 12 ஆண்டுகள் பள்ளிக்கல்வி படித்த பிறகும் நுழைவுத் தேர்வு மூலமாகவே உயர்கல்வி செல்ல முடியும் என்பது கல்வித் தளத்தில் அவர்களை பின்னுக்குத் தள்ளும் சமூக அநீதி. அது ஏற்படுத்திய காயத்தின் வடுக்கள் காலத்துக்கும் மறையாது. மாணவர் நலனுக்கும் மாநில நலனுக்கும் நீட் போன்ற தேர்வுகள் ஆபத்தானவை.

தமிழக அரசு நியமித்துள்ள நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழு, நீட் தேர்வின் பாதிப்புகள் பற்றி மக்கள் கருத்து தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறது. அகரம் பவுண்டேஷன், மாணவர்களுக்கான பாதிப்புகளை முறையாக அக்குழுவிடம் பதிவு செய்கிறது. நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிய நீட் தேர்வின் பாதிப்பின் தீவிரத்தை உரியவர்களுக்கு உணர்த்த வேண்டும். மாணவர்களும் அவர்தம் குடும்பங்களும் அனுபவிக்கிற துயரங்களை தவறாமல் நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவிடம் neetimpact2021@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு வரும் ஜூன் 23-ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்.

**இயக்குநர் தங்கர் பச்சான்:** மருத்துவப் படிப்புகளில் சேர நீட் தேர்வை மத்திய அரசு அமல்படுத்தியது. வசதி படைத்தவர்கள் பணம் கொடுத்து மருத்துவப் படிப்புகளில் சேர்வதை தடுக்கவே நீட் தேர்வை நடைமுறைப்படுத்தியதாக காரணம் தெரிவித்தனர். ஆனால், நீட் தேர்வால் கிராமப்புற ஏழை மாணவர்கள்தான் மருத்துவக் கல்வி வாய்ப்பை இழந்துவருகின்றனர்.

அனைவருக்கும் சமமான கல்வியை வழங்காமல் நீட் தேர்வை நடத்துவது ஏற்புடையது அல்ல.

எனவே, பெற்றோர், மாணவர்கள் என அனைவரும் நீட் தேர்வை எதிர்ப்பதற்கான காரணங்களை உடனே எழுதி மின்னஞ்சல் அல்லது 'ஏ.கே.ராஜன் ஆணையம், மருத்துவக் கல்வி இயக்குநரகம், கீழ்ப்பாக்கம், சென்னை- 600010' என்ற முகவரிக்கு ஜூன் 23-ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அனைவருக்கும் ஒரேமாதிரியான தரமான கல்வியை வழங்கிவிட்டு நீட் தேர்வை நடத்த மத்திய அரசு முன்வர வேண்டும். அதுவரை நீட் தேர்வு நடத்துவது அநீதியாகும் என்பதை அனைவரும் 50 பைசா அஞ்சல் அட்டை வாங்கி எழுதி அனுப்புங்கள்.

நமது எதிர்ப்பை பதிவு செய்து, நீதி கிடைக்க விரைந்து செயல்படுங்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

# பாரிவாக்கத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

● பால்வளத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்

■ திருவள்ளூர்

பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், பாரிவாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் நேற்று திறந்து வைத்தார்.



▲ பாரிவாக்கம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் நேற்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ்.

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், பாரிவாக்கம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் நேற்று திறந்து வைத்தனர். பின்னர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினர்.

விழாவில் பேசிய அமைச்சர் நாசர், "திருவள்ளூர் மாவட்டத்தில் கரோனா நோய் தொற்று பரவல் படிப்படியாக குறைந்து வருகிறது. பூந்தமல்லி வட்டத்தில் சுமார் 1.24 லட்சம் மக்கள் தொகையின் மருத்துவ தேவைகளுக்காக பூந்தமல்லி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கிராமப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்ற அரசின் ஆணையின்படி, பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், பாரிவாக்கம் ஊராட்சியில் உள்ள 3 கிராமங்களில் வசிக்கும் 57 ஆயிரம் மக்களின் மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்ய 18 மருத்துவர்கள் உட்பட மருத்துவ பணியாளர்களை நியமித்து மகப்பேறு, குழந்தைகள் நலன், வளர் இளம் பருவ பெண்கள் நலன், நாய்க்கடி சிகிச்சைகள், விபத்து சிகிச்சைகள், இசிஜி பரிசோதனை வசதிகளுடன் கூடிய அனைத்து சிகிச்சைகளையும் மேற்கொள்ள ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது" என்றார்.

விழாவில், 79 பயனாளிகளுக்கு ரூ.20.87 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிகளில், பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, துணைத் தலைவர் தேசிங்கு, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஜெயக்குமார், ஒன்றியக் குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) செ.ராஜராஜேஸ்வரி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மருத்துவர் பிரபாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.



▲ திருத்தணி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி ஆய்வு செய்தார். அப்போது, திருத்தணி சார்பு நீதிபதி காயத்ரிதேவி, மாவட்ட உரிமையியல் நீதிபதி கவிப்பிரியா, நீதித்துறை நடுவர் லோகநாதன் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

திருவள்ளூர், திருத்தணி நீதிமன்றங்களில்

# உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஆய்வு

■ திருவள்ளூர்

திருவள்ளூர் மற்றும் திருத்தணியில் உள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், சென்னை உயர் நீதிமன்றம் தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி ஆய்வு செய்து, நீதிபதிகளுடன் வழக்குகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை உயர் நீதிமன்றம் தலைமை நீதிபதியாக சஞ்ஜிப் பானர்ஜி பொறுப்பேற்றவுடன் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நீதி மன்றங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், நேற்று திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தலைமை நீதிபதி ஆய்வு மேற்கொண்டார். பின்னர், நீதிபதிகளுடன் கரோனா காலத்தில் நடத்தப்பட்டு வரும் வழக்குப் பணிகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து வழக்கறிஞர்கள் குடும்பத்தினர் அனைவரும் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் தலைமை நீதிபதியிடம், நீதிமன்ற வளாகத்தில் தொழிலாளர் நீதிமன்றம், வங்கி, அஞ்சல் நிலைய அலுவலகம், கேன்டீன் போன்ற வசதிகளை செய்து தரவேண்டும் என்று மனு அளிக்கப்பட்டது.

இதேபோல், சஞ்ஜிப் பானர்ஜி திருத்தணிக்குச் சென்று அங்குள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

(C) KSL Media Ltd.

பாதுகாப்புத் துறை தொழிற்சாலைகள் தனியார்மயமாவதை கண்டித்து

# ஆவடியில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ திருவள்ளூர்

பாதுகாப்புத் துறை தொழிற்சாலைகளை தனியார்மயமாக்கும் மத்திய அரசின் நடவடிக்கையைக் கண்டித்து, ஆவடியில் ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



▲ பாதுகாப்புத் துறை தொழிற்சாலைகள் தனியார்மயமாவதை கண்டித்து ஆவடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது உருவ பொம்மையை எரித்து, மத்திய அரசுக்கு எதிராக ஊழியர்கள் கோஷமிட்டனர்.

நாடு முழுவதும் 41 பாதுகாப்புத் துறை தளவாட உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. இதில், நிரந்தர ஊழியர்கள் 82 ஆயிரம் பேரும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் 45 ஆயிரம் பேரும் பணியாற்றி வருகின்றனர். இத்தொழிற்சாலைகளை பொதுத்துறை நிறுவனங்களாக மாற்றி, தனியார்மயமாக்குவதற்கு மத்திய அரசு முயற்சித்தது. இதை எதிர்த்து நாடு முழுவதும் ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மத்திய அரசு கடந்த 16-ம் தேதி 41 பாதுகாப்புத் தொழிற்சாலைகளை, 7 பொதுத் துறை நிறுவனங்களாகப் பிரித்து மாற்றியுள்ளது. இதைக் கண்டித்து, நேற்று நாடு தழுவிய அளவில் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்படி, திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் உள்ள படைத்துறை உடைத் தொழிற்சாலை (ஓசிஎஃப்), இன்ஜின் தொழிற்சாலை முன்பாக ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அகில இந்திய பாதுகாப்புத் துறை ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது, அவர்கள் மத்திய அரசுக்கு எதிராக கோஷமிட்டதோடு, உருவ பொம்மையையும் எரித்தனர். அடுத்தகட்டமாக காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் போராட்டக் குழு தெரிவித்துள்ளது. இப்போராட்டத்தில், போராட்டக் குழு தலைவர் முரளிதரன், கஜேந்திரன் மற்றும் சத்தியசீலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கரோனாவை தடுக்க வட்டார அளவில் கட்டுப்பாட்டு அறை

■ காஞ்சிபுரம்

காஞ்சி ஆட்சியர் மா.ஆர்த்தி வெளியிட்ட அறிக்கை: காஞ்சியில் கரோனா தொற்று பரவலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வட்டார அளவில் கண்காணிப்பு அலுவலர்களை நியமித்து, தடுப்பு பணிகளைமேற்கொள்ள ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**கட்டுப்பாட்டு அறை எண்கள்:**

**ஒன்றியங்கள்:** காஞ்சிபுரம் - 74029 02110, வாலாஜாபாத் - 044-27256031, உத்திரமேரூர் - 044-27272233, ஸ்ரீபெரும்புதூர் - 044-27162235, குன்றத்தூர் - 044-27174152.

**பேரூராட்சிகள்:** வாலாஜாபாத் - 044-27256034, உத்திரமேரூர் - 044-27272530, ஸ்ரீபெரும்புதூர் - 044-27162440, குன்றத்தூர் - 044-24780024, மாங்காடு - 2679 2592. நகராட்சிகள் - 1800 4252 801.

பொதுமக்கள் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

செங்கல்பட்டு கிழக்கு, மேற்கு மாவட்ட அதிமுக சார்பில்

# சசிகலாவை கண்டித்து தீர்மானம்

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் அதிமுக தொண்டர்களை தொலைபேசி வாயிலாக திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடும் சசிகலாவைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



▲ செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசனை வழங்கும் மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம்.

செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் ஏற்பாட்டில், திருக்கழுக்குன்றம் அருகே வடகடும்பாடியில், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதேபோல் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வண்டலூர் அருகே ரத்தினமங்கலத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.என்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராஜேந்திரன், அனைத்துலக எம்ஜிஆர் மன்றத் தலைவர் டி.கே.எம்.சின்னையா, ஒன்றிய செயலாளர்கள் என்.சி.கிருஷ்ணன், எம்.கஜா (எ) கஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவராக பொறுப்பேற்றிருக்கும் எடப்பாடி பழனிசாமி, துணைத் தலைவராக பொறுப்பேற்றிருக்கும் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

அதிமுக தொண்டர்களை திசை திருப்பும் முயற்சியில், சசிகலா ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் சிலருடன் பேசுவதும், அதை ஊர் அறிய தொலைகாட்சிகளில் ஒளிபரப்புவதுமாக வினோதமான ஒரு நாடகத்தை அரங்கேற்றி வரும் செயலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரோனா பேரிடர் காலத்தில் உயிரிழந்த நிர்வாகிகளுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றால் அதை எதிர்கொள்ள நிர்வாகிகள் தயாராக இருக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# முதுநிலை பட்டியல் அடிப்படையில் கலந்தாய்வு

● தமிழ்நாடு விஏஓ சங்கத்தினர் வலியுறுத்தல்

■ செங்கல்பட்டு

முதுநிலை பட்டியலை அடிப்படையாகக் கொண்டு கிராம நிர்வாக அலுவலருக்கு கலந்தாய்வு நடத்த வேண்டுமென தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சங்கத்தின் சார்பில் கிராம நிர்வாக அலுவலர்கள் புதிதாக பொறுப்பேற்ற செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர. ராகுல் நாத் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து சங்கத்தின் சார்பில் கோரிக்கை மனு வழங்கினர்.

ஆட்சியரிடம் வழங்கப்பட்ட மனுவில், "தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்காளர்கள் வசதிக்காக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கிராம நிர்வாக அலுவலர்கள் சொந்த செலவில் பந்தல் அமைத்துள்ளனர். அந்தத் தொகையை வழங்க வேண்டும். மேலும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ரூ.1,300 ஒதுக்கப்பட்டது. தேர்தல் ஆணையம் அனுமதித்து முன்பணமாக ரூ.650 மட்டும் வழங்கப்பட்டது. மீதம் உள்ள தொகையை விரைவாக வழங்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்தாய்வின் மாவட்ட முதுநிலை பட்டியலை அடிப்படையாக கொண்டு மட்டுமே கலந்தாய்வு நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்த திருக்கழுக்குன்றம் வட்டம், வசுவ சமுத்திரம் கிராமத்தில் பணிபுரிந்து வந்த கிராம நிர்வாக அலுவலர் ஞான பிரகாசத்துக்கு அரசு சார்பில் பணப் பலன்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ராகுல்காந்தியின் 50-வது பிறந்த நாள்

# தமிழக காங்கிரஸ் சார்பில் கொண்டாட்டம், நலத்திட்ட உதவிகள்

● முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

■ சென்னை

அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி எம்.பி. நேற்று தனது 50-வது பிறந்த நாளைக் கொண்டாடினார். அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் ராகுல்காந்தியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். மேலும் தனது சமூக ஊடகப் பக்கங்களிலும் ராகுல்காந்திக்கு வாழ்த்து தெரிவித்து பதிவிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:

எனது ஆருயிர் இளவல் ராகுல்காந்திக்கு பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் அடிப்படைப் பண்புகளின் மேல் அவருக்கு உள்ள ஈடுபாடு மற்றவருக்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்கது ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் நேற்று வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "இந்திய அரசியலின் நம்பிக்கையூட்டும் இளவல் ராகுல்காந்திக்கு என் மனமார்ந்த பிறந்த நாள் நல்வாழ்த்துகள்" என்று தெரிவித்துள்ளார்.



▲ அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தியின் 50-வது பிறந்த நாளை ஒட்டி சென்னை சத்தியமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். உடன் கட்சி நிர்வாகிகள். படம் க.ஸ்ரீபரத்

ராகுல்காந்தி பிறந்தநாள் விழா தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்றது. இதையொட்டி ஏழை எளிய மக்கள் 100 பேருக்கு உணவு பொருட்கள் மற்றும் நிதியுதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில், தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் கே.வீ.தங்கபாலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் மருத்துவர் அணித் தலைவர் கலீல் ரகுமான் ஏற்பாட்டில் 100 பேருக்கு கரோனா உயிர் காக்கும் மருந்து தொகுப்பு வழங்கப்பட்டது. மாநில செயலாளர் கே.எம்.இக்பால் அகமது, மாவட்டத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் ஆகியோரின் ஏற்பாட்டில் ஆக்சிஜன் செறிவூட்டிகள், டிஜிட்டல் தெர்மாமீட்டர், பல்ஸ் ஆக்சிமீட்டர், முகக்கவசங்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் தொகுப்பு, தமிழ்நாடு மருத்துவ இயக்கத்திடம் வழங்குவதற்காக, கே.எஸ். அழகிரியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தமிழக காங்கிரஸ் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை அடையாறில் தென்சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ், சென்னை புதூர் அசோக் நகரில் தென்சென்னை மத்திய மாவட்ட காங்கிரஸ் சார்பிலும், சென்னையின் பல்வேறு இடங்களிலும் ராகுல்காந்தி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

# கொள்முதல் மையங்களில் தேங்கி கிடக்கும் நெற்குவியல்கள்

● விரைந்து நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை

■ மதுராந்தகம்

மதுராந்தகம் அருகே உள்ள கிளார் ஊராட்சி ஏரிவாக்கம் பகுதியில் உள்ள நெல் கொள்முதல் மையத்தில் விவசாயிகள் அறுவடை செய்த நெல், குவியல் குவியலாக கடந்த இரு மாதத்துக்கும் மேலாக தேங்கிக் கிடக்கின்றன. மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.



▲ கொள்முதல் செய்யப்படாததால் மதுராந்தகம் அருகே ஏரிவாக்கம் நெல் கொள்முதல் மையத்தில் தேங்கி கிடக்கும் நெற்குவியல்கள்.

மதுராந்தகம் அருகே உள்ளது ஏரிவாக்கம் ஊராட்சி. இந்த ஊராட்சியில் கடந்த இரு மாதங்களுக்கு முன் நேரடி நெல் கொள்முதல் மையம் தொடங்கப்பட்டது. இந்த நெல் கொள்முதல் மையத்துக்கு, அருகாமையில் உள்ள கிராமங்களில் இருந்து அறுவடை செய்த நெல்லை, விவசாயிகள் கொண்டு வந்தனர். இந்த நெல் கொள்முதல் மையம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரம் மட்டும், நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் பிறகு நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் அவதியுற்று வருகின்றனர். இதற்கிடையில் வியாபாரிகளும் சிலர் இந்த நெல் கொள்முதல் மையத்துக்கு, நெல்லை கொண்டு வந்து இறக்கியுள்ளதாகத் தெரிகிறது. இதனால் எப்போது தங்கள் நெல் கொள்முதல் செய்யப்படுமோ என்ற அச்சம் விவசாயிகளுக்கு எழுந்துள்ளது.

இதுகுறித்து பழமத்தூர் பகுதியைச் சேர்ந்த விவசாயி அருள்பரமானந்தம் கூறும்போது, "நான் எனது விவசாய நிலத்தில் விளைந்த நெல்லை இந்த கொள்முதல் மையத்துக்கு கொண்டு வந்துஇருமாதங்கள்ஆகிறது. இதுவரை நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. கோணிப்பை வரவில்லை என்பதைக் காரணமாக கூறுகின்றனர். மழை பெய்தால் விவசாயிகள் நெல் குவியல்கள் சேதமடைய வாய்ப்பு இருப்பதால் உடனடியாக நெல் கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

## வரி விளம்பரங்கள்



### திருமணசேவை மையம்

1000 DAYS Validity+ Free Benefits One Time Regn. Fees Rs.1000. www.brahminkalyanam.com, hindusmatri.com. 89397 02500

### மணமகள் தேவை

தமிழ்

பிள்ளை, 47, திருமணமாகாதவர், பிரைவேட், எளிய வாழ்க்கை, பூசம், 168 செ.மீ., எளிய நபரை திருமணத்திற்கு சிறந்தவராக எதிர்பார்க்கிறார். கோவிலில் திருமணம் நடைபெற உள்ளது. சேமிப்பு அல்லது சொத்து இல்லை. நல்ல நபர், அல்லது வீட்டோட மாப்பிள்ளைக்கும் தொடர்பு ஓம்பிரகாஷ், 5, காமராஜ் தெரு, ஆனந்தபுரம், சென்னை -59, mob:8220041174

### ஆட்கள் தேவை

#### ஓட்டுநர்கள் தேவை

Powered by Parveen Travels

துபாயில் வேலைவாய்ப்பு

இருசக்கர வாகன ஓட்டுநர்கள் தேவை (BIKE RIDERS - WANTED)

சம்பளம் AED 3,000 (ரூ.60,000/-) + ஊக்க தொகை

துபாயில் உள்ள பிரபல தனியார் நிறுவனத்திற்கு Bike Riders தேவை!

சலுகைகள்: உணவு (1 மாதம் இலவசம்) தங்குமிடமும் முற்றிலும் இலவசம்

வயது வரம்பு : 21 & 38

கல்வி தகுதி : +2 & above

தேவைபடும் ஆவணங்கள்:
1. கல்வி சான்றிதழ்
2. பாஸ்போர்ட்
3. இந்திய ஓட்டுநர் உரிமம்

மேலும் விவரங்களுக்கு:

நெ.813, நிஷாரா பொனான்ஸா காம்ப்ளக்ஸ், 2வது தளம், அண்ணா சாலை, சென்னை-600 002.

9789956007 / 9840664929

#### பொது

துபாயில் வேலை வாய்ப்பு. வேலையின் பெயர்: பைக்ரைடர்ஸ் (Bike Riders). சம்பளம்: 3000 AED, உணவு 1 மாதம் இலவசம், தங்குமிடம் முழுமையாக இலவசம். தொடர்புக்கு: 9789956007,9840664929.

### வீடு / நிலம்

#### காலி மனை விற்பனைக்கு

காஞ்சிபுரம் மாமல்லன் பள்ளி அருகில் அப்ரூவ்ட் வீட்டு மனை 9042020757, 6381164044

### கல்வி

#### தொழில்நுட்ப கல்வி

10TH &12TH PASS, ADMISSIONS OPEN FOR DIPLOMA IN AUTOMOBILE TECH & DIPLOMA IN MONTESSORI & PRIMARY TEACHING Ct -9499941069/49 Chennai Anna Nagar Job Assistance Assured.




எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

# கோயில்களில் தமிழ் அர்ச்சனை

## ‘தி இந்து’வுடன் அரை நூற்றாண்டுப் பயணம்!

**கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக உள்ளது. அவ்வப்போது இந்த விஷயம் மக்களிடம் கவனம் பெற்றுப் பேசுபொருளாகும். இப்போது, இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு சமீபத்தில் கூறியிருப்பதன் மூலம் இது மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது. ‘கோயில்களில் தமிழில் அர்ச்சனை’ என்ற விவகாரத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் பாரபட்சமற்ற வகையில் செய்திகளை வெளியிட்டிருக்கிறது. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைக் கோவையாகத் தொகுத்து வாசகர்களுக்கு அளிக்கிறோம். ‘தமிழ் அர்ச்சனை’ கோரிக்கையும் அதற்கான எதிர்வினைகள், தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் ஆகியவை கடந்த அரை நூற்றாண்டில் எந்த வகையில் மாற்றம் அடைந்துள்ளன என்பதை அறிய இந்தத் தொகுப்பு உதவும்.**

(C) KSL Media Ltd.

தொகுப்பு: ஸ்ரீதர் சுவாமிநாதன்

வானவில் அரங்கம்



1955–ல் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று போராட்டங்கள் நடந்துள்ளன. அதற்குத் தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதுபற்றி அப்போது ‘தி இந்து’வில் வெளியான செய்தி. “சென்னையில் தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்கத்தின் உயர் நிலைக்குழு கூட்டம் நடந்தது. இதில் கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கோரி நடத்தப்படும் போராட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதுவரை இருப்பதுபோலத் தொடர்ந்து சம்ஸ்கிருதத்திலேயே அர்ச்சனைகள் நடத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.” (‘தி இந்து’ – 10.05.1955)

அகோபில மடத்தின் அப்போதைய ஜீயர் அழகிய சிங்கர் சுவாமிகள் தமிழ் வழி அர்ச்சனைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ...“குடவாசல் அருகே கண்கொடுத்தவனிதம் கிராமத்தில் பக்தர்களிடம் உரையாற்றிய அழகிய சிங்கர் சுவாமிகள், நமது முன்னோர்கள் ஆகம முறைப்படி மந்திரங்களை உருவாக்கியுள்ளனர். அவற்றை மொழிபெயர்க்கத் தேவையில்லை. பஞ்சாக்ஷசரம் (சிவாயநம), அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) போன்றவற்றைப் புரிந்துகொள்வதற்கு ஒருவருக்குப் பெரிய புத்திசாலித்தனம் தேவையில்லை. மந்திரங்களை மொழிபெயர்த்தால் அதன் முக்கியத்துவமும் சக்தியும் போய்விடும்” (‘தி இந்து’ – 05.05.1955)

அர்ச்சகர்கள், மடாதிபதிகள் மட்டுமின்றி காமராஜர் தலைமையிலான அப்போதைய தமிழக அரசின் பார்வையும் தமிழ் அர்ச்சனைக்கு எதிராகவே இருந்துள்ளது. 1961–ல் முதல்வராக காமராஜர் இருந்தபோது, அவரது அமைச்சரவையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த எம்.பக்தவத்சலம் இப்படிக் கூறுகிறார்…

“கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை அர்த்தமற்றது. அர்ச்சனை என்பது இறைவனின் பல்வேறு பெயர்களைக் கூறிப் போற்றுவது. ஒருசிலரின் விருப்பத்துக்காக இந்தப் பெயர்களை மொழிபெயர்க்க முடியாது. அவர்களது நோக்கம் பாரம்பரியமாக இப்போது இருக்கும் நடைமுறைகளுக்கு எதிராகவோ, பழிவாங்கும் நோக்கத்துடனோ இருக்கக் கூடாது. மக்களிடம் பிரிவையும் குழு விரோதத்தையும் ஏற்படுத்தும் முயற்சி வருந்தத்தக்கது. தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கூச்சலிடுவதால் தமிழ் மொழிக்கு எந்த சேவையும் செய்ய முடியாது.” (‘தி இந்து’ – 05.07.1961)

இதனிடையே, 1955–ல் குன்றக்குடி மடத்தின் அப்போதைய ஆதீனம் தெய்வசிகாமணி அருணாசல தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஆதரவாக இருந்துள்ளார். திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதற்கான காரணத்தையும் அவர் கூறியுள்ளார். “கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்ப்பவர்கள் அதன் விளைவுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்த்தால், மக்களிடம் சம்ஸ்கிருத மொழிக்கு எதிரான உணர்வு ஏற்படும். அதனால், தமிழகக் கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழும்.” (‘தி இந்து’ 14.05.1955)

பின்னர், 1969–ல் லால்குடியில் பூவாளூரில் உள்ள திருமூலநாத சுவாமி கோயிலில் தமிழ் அர்ச்சனை தொடங்கப்பட்டது. இதற்கான விழா அப்போதைய திருச்சி மாவட்ட திமுக செயலாளரும் இப்போதைய தமிழகக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியின் தாத்தாவுமான அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடந்துள்ளது. இந்தத் தமிழ் அர்ச்சனை தொடக்க விழாவில், அப்போதைய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கே.வி.சுப்பையா கலந்துகொண்டார். அவர் கூறுகையில், “தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று பக்தர்கள் விரும்பினால், அதற்கு அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவிக்கக் கூடாது. பக்தர்கள் கோரிக்கை வைத்தால், மற்ற கோயில்களிலும் தமிழ் அர்ச்சனை முறை விரிவுபடுத்தப்படும்.” (‘தி இந்து’ – 08.12.1969)

இந்நிலையில், 1971–ல் அனைத்துக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை முறை அறிமுகப்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் அப்போதைய இந்து அறநிலையத் துறை அமைச்சர் எம்.கண்ணப்பன் தெரிவித்தார். சட்டமன்றத்தில் அமைச்சர் கண்ணப்பன் கூறுகையில், “1971 ஆகஸ்ட் 15–க்குள் தமிழ் அர்ச்சனையை அறிமுகப்படுத்த அனைத்துக் கோயில்களுக்கும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அறிவுறுத்தியுள்ளார். இந்த நடைமுறையில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணிக்குமாறு துணை மற்றும் உதவி ஆணையர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்” என்றார். (‘தி இந்து’ – 13.07.1971)

கோயில்களில் தமிழ் அர்ச்சனை அறிமுகப்படுத்தப்பட்டது குறித்து சட்டமன்றத்தில் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய அப்போதைய முதல்வர் கருணாநிதி, கோயில்களில் தமிழில் அர்ச்சனை அறிமுகம் செய்யப்பட்டதை ஆதரித்துப் பேசினார். முதல்வர் கருணாநிதி பேசுகையில், “கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுவதை விமர்சிக்கும் சிலர், சம்ஸ்கிருதம் தெய்வீக மொழி. அதனால், அர்ச்சனை செய்வதற்கு சம்ஸ்கிருத மொழியே ஏற்றது என்று கூறுகின்றனர். இதை ஏற்க முடியாது. தமிழும் தெய்வீக மொழிதான். பழங்காலத்திலேயே தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாராயணங்கள் தமிழில்தான் இயற்றப்பட்டன. நாடு முழுவதும் ஒரே மாதிரியான கோயில் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் பின்பற்றப்பட்டன என்ற வாதத்தையும் ஏற்க முடியாது” என்றார், (‘தி இந்து’–28.07.1971)

இந்நிலையில், கோயில்களில் தமிழ் அர்ச்சனை அறிமுகம் செய்யும் இந்து சமய அறநிலையத் துறையின் சுற்றறிக்கையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மடாதிபதிகள் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஸ்ரீபெரும்புதூர் எதிராஜ ராமானுஜ ஜீயர் சுவாமிகள், காஞ்சிபுரம் ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மனு தாக்கல் செய்தனர். எதிராஜ ராமானுஜ ஜீயர் சுவாமிகள் தனது மனுவில், “கோயில்களில் வழிபாடு தொடர்பான விஷயங்கள் ஆகம மற்றும் சாஸ்திரங்களின் அடிப்படையில் முறைப்படுத்தப்பட்டுள்ளன. சம்ஸ்கிருத மந்திரங்களும் ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களும் கோயில்களில் ஓதப்படுகின்றன. குறைந்தது 2,000 ஆண்டுகளாகக் கோயில்களில் சம்ஸ்கிருத மந்திரங்கள் ஓதப்படுகின்றன. இப்போது அறநிலையத் துறை அதிகாரிகள் அழுத்தத்தின் பேரில் சம்ஸ்கிருத மந்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அது சம்ஸ்கிருத மந்திரங்களின் அதே அர்த்தத்துடனும் ஒலி அமைப்புடனும் இருக்க முடியாது. பக்தர்கள் தங்கள் நலனுக்காக இறைவனுக்குச் செய்யும் அர்ச்சனை சம்ஸ்கிருதத்தில் இல்லாமல் இருந்தால் அந்த மந்திரங்கள் பலன் தராது” என்று கூறியிருந்தார். (‘தி இந்து’ - 25.09.1971)

இவ்வழக்கில் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.வீராசாமி, நீதிபதி வரதராஜன் ஆகியோர் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பில், “மத நடைமுறைப் பழக்கங்களில் சட்ட விரோதமாக தமிழ் அர்ச்சனை அறிமுகம் செய்யப்பட்டதாக யாரும் புகார் அளிக்கவில்லை. அர்ச்சனை என்பது மத நடைமுறைகளில் ஒன்றுதான். ஆனால், மொழி என்பது மதத்தின் ஒரு பகுதியல்ல. மேலும் சுற்றறிக்கையில் சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யக் கூடாது என்று கூறப்படவில்லை” என்று கூறப்பட்டது (‘தி இந்து’ - 12.01.1974)

இந்தத் தீர்ப்பு வந்த 3 மாதங்களில் புதிய திருப்பமாக இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கோயில்களுக்கு மற்றொரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதில் கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. அந்தச் சுற்றறிக்கையில், ‘சில கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுவதில்லை என்பது கவனத்துக்கு வந்துள்ளது. கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட வேண்டும். தமிழில் அர்ச்சனை செய்வதற்கு அர்ச்சகர்கள் ஆர்வம் காட்டாமல் இருந்தால், அந்த அர்ச்சகருக்குப் பதிலாக ஓதுவார்களை நியமித்துத் தமிழ் அர்ச்சனை செய்ய வேண்டும். அப்படிச் செய்யப்படும்போது ஓதுவார்கள் பாராயணம் சொல்லச் சொல்ல அர்ச்சகர்கள் பூ மற்றும் குங்குமத்தைக் கடவுள் உருவத்துக்குச் சேர்க்கலாம். அதுபோன்ற சமயங்களில் அர்ச்சகருக்குக் கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை ஓதுவாருக்கு அளிக்க வேண்டும்.” என்று கூறப்பட்டது. இந்தச் செய்தி 20.04.1974 ‘தி இந்து’ நாளிதழில் வெளியானது.

மேலும் அந்தச் செய்தியில், ‘தி இந்து’ தன் கருத்தாக, ‘பாரம்பரியமாகக் கோயில்களில் சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்படும். பின்னர், தமிழில் அர்ச்சனை செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு, தமிழில்தான் அர்ச்சனை செய்யப்படும் என்றும் பக்தர்கள் விரும்பினால் சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யலாம் என்றும் அரசு வலியுறுத்தியது. தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற அரசின் இப்போதைய சுற்றறிக்கையும் தமிழில் அர்ச்சனை செய்யாத அர்ச்சகர்களுக்குப் பதில் ஓதுவார்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலும் சம்ஸ்கிருதத்தை ஒழிப்பதற்கான மேலும் ஒரு நடவடிக்கையாகத் தெரிகிறது’ என்று தெரிவித்திருந்தது.

கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்ற இந்து சமய அறநிலையத் துறையின் சுற்றறிக்கையை எதிர்த்து ராமேஸ்வரம் மகான் துளசிபாபா மடத்தின் மடாதிபதி கல்யாண் தாஸ் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த உத்தரவுக்குத் தடைவிதிக்க வேண்டும்’ என்று கூறப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற விடுமுறைக் கால நீதிபதி டி.ஜி.பலேகர், கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை அமல்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார். (‘தி இந்து’ - 22.06.1974)

இந்த இடைக்காலத் தடை உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், அரசின் கொள்கையை அறநிலையத் துறை அதிகாரிகள் தவறாகப் புரிந்துகொண்டனர் என்று விளக்கம் அளிக்கப்பட்டது. (‘தி இந்து’ - 01.08.1974)

மேலும், அறநிலையத் துறை அதிகாரிகளின் சுற்றறிக்கையை ரத்துசெய்ய உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் கோவிந்த் சுவாமிநாதன் கூடுதல் மனு தாக்கல் செய்தார். சுற்றறிக்கையை ரத்துசெய்ய அரசு திட்டமிட்டுள்ள அந்த உத்தரவின் நகலை அடுத்த விசாரணையின்போது தாக்கல் செய்ய தமிழக அரசின் அட்வகேட் ஜெனரலுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற சுற்றறிக்கையை அமல்படுத்த விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை தொடரும் என்று அறிவித்து விசாரணையை ஒத்திவைத்தனர். (‘தி இந்து’ - 07.08.1974)

இதனிடையே, டெல்லியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.சோந்தி மற்றும் உத்தர பிரதேசம், ஆந்திரம், மஹாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பக்தர்கள், தமிழில் மட்டுமே அர்ச்சனை என்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். (‘தி இந்து’– 24.08.1974)

இந்நிலையில், தமிழில் மட்டுமே அர்ச்சனை என்ற உத்தரவுக்கு எதிராக நிலுவையில் உள்ள மனுக்கள் விசாரித்து முடிக்கப்படும் வரை தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் பாரம்பரியமாகச் செய்யப்பட்டுவந்த அர்ச்சனை முறையைப் பின்பற்றலாம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழில் மட்டுமே அர்ச்சனை என்ற இந்து சமய அறநிலையத் துறையின் சுற்றறிக்கை திரும்பப் பெறப்படும் என்று தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் கோவிந்த் சுவாமிநாதன் நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்ததையடுத்து, நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர். (‘தி இந்து’ - 27.08.1974).

பின்னர், எம்.ஜி.ஆர். தலைமையிலான அதிமுக ஆட்சியில் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த ஆர்.எம்.வீரப்பன், கோயில்களில் தமிழ் அர்ச்சனையை வலியுறுத்தினார். சென்னையில் ராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில் நடந்த வள்ளலார் - மகாத்மா காந்தி விழாவில் பேசிய ஆர்.எம்.வீரப்பன், “தமிழில் மட்டுமே அர்ச்சனை செய்யுமாறு அர்ச்சகர்களை அரசு வலியுறுத்த முடியாது. இருந்தாலும், இப்போதுள்ள சூழ்நிலையில் தமிழிலேயே அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கோர பக்தர்களுக்கு உரிமை உள்ளது. தமிழில் அர்ச்சனை முறையைப் பிரபலமாக்க முயற்சிகள் செய்யப்படாதது வருத்தமளிக்கிறது” என்றார். (‘தி இந்து’ 03.10.1980)

இந்தச் சூழலில் முக்கிய மைல்கல்லாக தமிழ் அர்ச்சனையை எதிர்க்கவில்லை என்று 1982–ல் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அர்ச்சகர்கள் அறிவித்தனர். மீனாட்சி அம்மன் கோயிலில் 1982 ஜூன் 16–ம் தேதி முதல் தமிழிலேயே அர்ச்சனைகள் செய்யப்படும் என்று அறங்காவலர் குழு அறிவித்தது. புதிய விதிகளின்படி சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்ய விரும்பும் பக்தர்கள் அதற்கெனத் தனியான அர்ச்சனை டிக்கெட்டுகளை வாங்க வேண்டும் என்றும் அறிவித்தது. தமிழில் அர்ச்சனை செய்வது என்ற முடிவை அர்ச்சகர்கள் ஒருமனதாக ஒப்புதல் அளித்த பிறகே எடுக்கப்பட்டதாகவும் அறங்காவலர் குழு தெரிவித்தது. தமிழிலேயே அர்ச்சனை என்ற அறங்காவலர் குழுவின் முடிவுக்கு அர்ச்சகர்களிடம் எந்த எதிர்ப்பும் இல்லை என்றும் பக்தர்கள் எந்த மொழியில் விரும்புகிறார்களோ அந்த மொழியில் அர்ச்சனை செய்கிறோம் என்றும் மீனாட்சி அம்மன் கோயில் அர்ச்சகர் சங்கமான ஆதிசைவ சிவாச்சாரிய சங்கம் அறிவித்தது. தமிழ் அர்ச்சனையை அர்ச்சகர்கள் எதிர்ப்பதாகச் சில பத்திரிகைகளில் வெளியான செய்தி தவறு என்றும் தமிழ் அர்ச்சனையை அர்ச்சகர்கள் ஆதரிப்பதாகவும் அறங்காவலர் குழுவிடம் கடிதமும் அளித்தது.

ஆண்டுகள் உருண்டோட, 1998–ல் அப்போது மீண்டும் முதல்வராக இருந்த கருணாநிதி ‘சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்படுவதை நாங்கள் எதிர்க்கவில்லை’ என்று தெரிவித்தார். சட்டமன்றத்தில் தமிழ் அர்ச்சனை தொடர்பாக நடந்த சுவாரஸியமான விவாதத்தில் கருணாநிதி இதைத் தெரிவித்தார். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ்.பாலகிருஷ்ணன், “கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே இந்த விவாதத்தில் பங்குபெற வேண்டும்” என்று கூறினார். இதற்குப் பதிலளித்த கருணாநிதி, “பெரியாரின் கொள்கைகளில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள். ஆனால், தமிழ் வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்ல எங்களுக்கு உரிமை உண்டு” என்றார். அவர் மேலும் கூறுகையில், “தமிழ் வழிபாட்டு மொழியாக இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். வேறு மொழிகளில் கடவுளை வழிபடக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை” என்றார். (‘தி இந்து’ - 27.11.1998)

இப்படியாக, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக கோயில்களில் தமிழ் அர்ச்சனை தொடர்பான அரசின் முடிவுகள், சட்டங்கள், உத்தரவுகள், வழக்குகள், வாதப் பிரதிவாதங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், மக்களின் கருத்துக்கள் என்று சென்றுகொண்டிருக்கும் இந்த நீண்ட பயணத்தில் இப்போது, தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைந்துள்ள நிலையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு, ‘தமிழில் அர்ச்சனை செய்ய அர்ச்சகர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது’ என்று தெரிவித்துள்ளார். (‘தி இந்து’ - 13.06.2021)

இந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலகட்டத்தில் கோயில்களில் தமிழ் அர்ச்சனை குறித்து 1955–ல் அப்போது குன்றக்குடி மடத்தின் மடாதிபதியாக இருந்த தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முக்கியமான கருத்தைப் பதிவுசெய்துள்ளார். 1955–ம் ஆண்டு மே மாதம் திருநெல்வேலி நகராட்சி மன்ற அரங்கில் அனைத்திலும் தமிழை வலியுறுத்திய ‘தமிழ்த் தென்றல்’ திரு.வி.க.வின் உருவப் படத்தை குன்றக்குடி மடாதிபதி திறந்து வைத்துள்ளார். நிகழ்ச்சியில் அவர் இப்படிப் பேசுகிறார்…

“கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யக் கூடாது என்று கூறவில்லை…. நான் சம்ஸ்கிருதத்தையோ அதன் பண்பட்ட இலக்கியத்தையோ வெறுக்கவில்லை. ஆனால், தமிழகத்தில் உலகில் மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். நியாயமான இந்தக் கோரிக்கையை நிராகரிக்கவோ தவறாகப் புரிந்துகொள்ளவோ கூடாது. சைவ சமயத்தின் மிகச் சிறந்த சீர்திருத்தவாதிகளில் ஒருவராக திரு.வி.க. விளங்கினார். அவரது செய்தியைக் கடந்த தலைமுறையின் தலைவர்களும் மடாதிபதிகளும் கேட்டிருந்தால் தி.க., திமுகவால் ஊக்குவிக்கப்படும் மதத்துக்கு எதிரான, கடவுளுக்கு எதிரான விதத்தில் செயல்படும் இயக்கங்கள் அநேகமாக இருந்திருக்காது. திரு.வி.க.வின் குரலைக் கேட்காததால், அதன் விளைவுகள் என்ன என்பது அனைவரும் அறிந்ததே!” (‘தி இந்து’ 25.05.1955).

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

## மீட்டர் பேசுது

| | | | | |
|---|---|---|---|---|
| 37.4°C | 36.0°C | 36.8°C | 37.3°C | 31.8°C |
| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
| 34.7°C | 35.6°C | 17.5°C | 19.1°C | |
| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் | |

தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை பெய்யக் கூடும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 28 முதல் 37 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக்கூடும்.

புதுச்சேரியில் எம்எல்ஏ ஆதரவாளர்கள் ஆவேசம்

# அமைச்சர் பதவி கேட்டு பாஜக அலுவலகம் முற்றுகை

● கட்சிப் பெயர் பலகை கிழிப்பு; சாலை மறியல்

**புதுச்சேரி**

புதுச்சேரியில் அமைச்சர்கள் யாரும் இன்னும் பதவியேற்காத நிலையில், பாஜக எம்எல்ஏ ஜான்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்கக் கோரி அவரது ஆதரவாளர்கள், கட்சித் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி பெரும்பான்மை இடங்களில் வென்று ஆட்சியை பிடித்திருக்கிறது. என்.ஆர்.காங். தலைவர் ரங்கசாமி முதல்வர் பொறுப்பை ஏற்றிருக்கிறார். பாஜகவுக்கு சட்டப்பேரவைத் தலைவர் பதவி மற்றும் 2 அமைச்சர்கள், என்.ஆர்.காங்கிரஸுக்கு பேரவை துணைத் தலைவர் மற்றும் 3 அமைச்சர்கள் என முடிவு செய்யப்பட்டுள்ளது. பேரவைத் தலைவர் பொறுப்பு ஏற்றுள்ள நிலையில் அமைச்சரவை பட்டியலை முதல்வர் ரங்கசாமி ஆளுநரிடம் இதுவரை அளிக்கவில்லை. இதனால் அமைச்சரவை பதவியேற்பு தாமதமாகி வருகிறது.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி பாஜகவில் சேர்ந்து, காமராஜ்நகர் தொகுதியில் எம்எல்ஏவாகி இருக்கும் ஜான்குமார் அமைச்சராக தீவிர முயற்சி எடுத்து வருகிறார். இவரது மகன் ரிச்சர்ட் என்பவரும் பாஜக சார்பில் போட்டியிட்டு நெல்லித்தோப்பு தொகுதி எம்எல்ஏவாக ஆகியிருக்கிறார்.



▲ புதுச்சேரியில் பாஜக கட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்எல்ஏவின் ஆதரவாளர்கள். படம்: எம்.சாம்ராஜ்

இந்நிலையில் ஜான்குமாருக்கு பதிலாக மாற்று நபருக்கு அமைச்சர் பதவி வழங்க உள்ளதாக தகவல் வெளியானது. இதை அறிந்த ஜான்குமார் எம்எல்ஏவின் ஆதரவாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று சித்தானந்தா நகர் பகுதியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

அவர்கள், ஜான்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டுமென வலியுறுத்தி கோஷமிட்டனர்.

திடீரென பாஜக அலுவலகம் முன்பு வைக்கப்பட்டிருந்த பெயர் பலகையை கிழித்தெறிந்தனர். தகவல் அறிந்து அங்கு வந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் காவல் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சமாதானப்படுத்தினர். 'உங்களது உணர்வுகளை மேலிடத்துக்குத் தெரியப்படுத்துவோம்' எனக் கூறி, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இதற்கிடையே ஜான்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்க வலியுறுத்தி அவரது ஆதரவாளர்கள் நெல்லித்தோப்பு சிக்னலில் சாலை மறியலிலும் ஈடுபட்டனர். காவல் துறையினர் அவர்களை சமாதானம் செய்தனர்.

இதற்கிடையே, பாஜக எம்எல்ஏக்கள் ஜான்குமார், அவரது மகன் ரிச்சர்ட், கல்யாணசுந்தரம் ஆகியோர் டெல்லி விரைந்தனர். அங்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் கிஷண் ரெட்டி, அகில இந்திய பொதுச்செயலாளர் சந்தோஷ் ஆகியோரை சந்தித்து பேசினர். அப்போது "சுழற்சி முறையில் அமைச்சர் பதவியை வழங்கலாம்" என்று பாஜக மேலிடம் கூறியதாக தெரிகிறது.

# ரூ.10 கோடி மதிப்பிலான கோயில் நிலம் மீட்பு

● சிவகங்கையில் அறநிலையத் துறை நடவடிக்கை

**சிவகங்கை**

சிவகங்கையில் ரூ.10 கோடி மதிப்பிலான கோயில் நிலத்தை அறநிலையத் துறை அதிகாரிகள் மீட்டனர். மேலும், அங்கு கட்டப்பட்டு வந்த வணிக வளாகத்துக்கு சீல் வைத்தனர்.

சிவகங்கையில் அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கவுரி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான 142 ஏக்கர் நிலம் மேலூர் சாலையில் உள்ளது.

இதில் ரூ.10 கோடி மதிப்பிலான 9.58 ஏக்கர் நிலத்தை அதிமுக முன்னாள் அமைச்சர் ஜி.பாஸ்கரனின் உறவினர்கள் ஆக்கிரமித்துள்ளதாக திமுக நகரச் செயலாளர் துரை ஆனந்த் முதல்வரின் தனிப்பிரிவு, அறநிலையத்துறை அமைச்சருக்கு புகார் மனு அனுப்பி இருந்தார். இதையடுத்து வருவாய்த் துறை, அறநிலையத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் அறநிலையத் துறை உதவி ஆணையர் செல்வி, செயல் அலுவலர் நாகராஜ், வட்டாட்சியர் தர்மலிங்கம், சிவகங்கை நகர் காவல் ஆய்வாளர் சுரேஷ் குமார் ஆகியோர், சம்பந்தப்பட்ட 9.58 ஏக்கர் நிலத்தை நேற்று மீட்டனர். அந்த இடத்தில், 'இந்த நிலம் கவுரி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமானது' என அறிவிப்பு பலகை வைத்தனர். மேலும், அங்கு கட்டப்பட்டு வந்த வணிக வளாகத்துக்கு சீல் வைத்தனர்.



▲ சிவகங்கையில் கவுரி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டு, அறிவிப்பு பலகை வைத்த அறநிலையத் துறை அதிகாரிகள்.

### முன்னாள் அமைச்சர் மறுப்பு

இந்த விவகாரம் தொடர்பாக அதிமுக முன்னாள் அமைச்சர் ஜி.பாஸ்கரன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த 5 ஆண்டுகளாக நேர்மையான அமைச்சராக செயல்பட்டுள்ளேன். நான் அமைச்சராக இருந்தபோது, எந்தப் பிரச்சினையிலும் சிக்காமல் இருந்தேன். தற்போது எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும் சிலர், கோயில் நிலப் பிரச்சினையில் என்னை தொடர்புபடுத்துகின்றனர். அந்த நிலத்தை ஏராளமானோர் ஆக்கிரமித்துள்ளனர். ஆனால், அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என் மீது ஆக்கிரமிப்பு புகார் கூறுவதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியே காரணம். என் மீதான குற்றச்சாட்டை சட்டப்படி எதிர்கொள்வேன் என்று கூறினார்.

# கூடங்குளத்தில் 1,000 மெ.வா. உற்பத்தி நிறுத்தம்

**திருநெல்வேலி**

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் 2-வது அணு உலையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது.

இங்குள்ள, 2 அணு உலைகளிலும் தலா ஆயிரம் மெகாவாட் மின்உற்பத்தி நடைபெற்று வந்த நிலையில், 2-வது அணுஉலையில் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் டர்பைனில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதனால், ஆயிரம் மெகாவாட் மின்உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய 465 மெகாவாட் மின்சாரம் தடைபட்டுள்ளது. ஓரிரு நாட்களில் கோளாறு சரி செய்யப்பட்டு மின் உற்பத்தி மீண்டும் தொடங்கும் என அணுமின் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

2-வது அணுஉலையில் பராமரிப்பு பணிகளுக்குப் பின்பு கடந்த 27.5.2021-ம் தேதிதான் மின்உற்பத்தி தொடங்கியது. அதற்குள், நேற்று மீண்டும் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

# திருவாரூரில் வணிக வளாக உரிமையாளர் கொலை

● ஏடிஎம் கொள்ளையை தடுக்க முயன்றபோது சம்பவம்; 4 கொள்ளையர்கள் கைது

**திருவாரூர்**

திருவாரூர் அருகே உள்ள கூடூரைச் சேர்ந்தவர் தமிழரசன் (60). அங்கு அவருக்குச் சொந்தமான வணிக வளாகம் உள்ளது. அந்த வளாகத்திலேயே தமிழரசனின் வீடும் உள்ளது. இந்த வணிக வளாகத்தில் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் ஏடிஎம் மையம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த ஏடிஎம் மையத்தில் இருந்து சத்தம் வந்ததால், தமிழரசன் வெளியே வந்து பார்த்தார். அப்போது, வெல்டிங் வைக்க பயன்படுத்தப்படும் காஸ் சிலிண்டர், கடப்பாறை உள்ளிட்ட பொருட்களைப் பயன்படுத்தி ஏடிஎம் இயந்திரத்தை 4 பேர் உடைத்து, கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களை தமிழரசன் தடுக்க முயன்றார். அப்போது 4 பேரும் தமிழரசனை தாக்கி, திருப்புளியால் குத்திக் கொலை செய்தனர். தமிழரசனின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு வந்தனர். இதனால், கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். அவர்களில் ஒருவரை பொதுமக்கள் விரட்டிப் பிடித்து வைத்துக் கொண்டு, போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.



▲ தமிழரசன்



▲ மதன்

உடனடியாக, அங்கு விரைந்து சென்ற ரோந்து போலீஸார், இரு சக்கர வாகனங்களில் தப்பிச் சென்ற மற்ற 3 பேரையும் விரட்டிச் சென்று பிடித்தனர். இதில், இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து கொள்ளையர்கள் 3 பேரும் காயமடைந்தனர்.

பின்னர், போலீஸார் நடத்திய விசாரணையில், அவர்கள் லட்சுமாங்குடி அண்ணா காலனியைச் சேர்ந்த மதன் (22), வடபாதிமங்கலம் அருகேயுள்ள புள்ளமங்கலம் ஆகாஷ்(22), இளமங்கலம் பிரதாப் (24), ஊட்டியாணி விஜய் (20) ஆகியோர் என்பதும், குறுக்கு வழியில் பணக்காரர்களாகும் ஆசையில் அவர்கள் ஏடிஎம் மையத்தில் கொள்ளையடிக்க முயன்றதும் தெரிய வந்தது.

இதையடுத்து, திருவாரூர் தாலுகா போலீஸார் கொலை மற்றும் கொள்ளை முயற்சி வழக்குப் பதிவு செய்து 4 பேரையும் கைது செய்து, காயமடைந்த 3 பேரையும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். தமிழரசனின் உடல் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொள்ளை சம்பவம் நிகழ்ந்த இடத்தின் எதிரேயுள்ள வெல்டிங் பட்டறையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு காஸ் சிலிண்டர் ஒன்று காணாமல் போனதாக, அதன் உரிமையாளர் தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அந்த காஸ் சிலிண்டரைப் பயன்படுத்தித்தான் இந்தக் கொள்ளை முயற்சி நடந்துள்ளது.

# மின் தடையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்காமல் அதிமுக ஆட்சியை குறை கூறுவதா?

● அமைச்சர் செந்தில் பாலாஜி மீது முன்னாள் அமைச்சர் குற்றச்சாட்டு

**நாமக்கல்**

மின்சாரத் துறை முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி எம்எல்ஏ நாமக்கல்லில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சி நடைபெற்றபோது தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றினோம். இது மத்திய அரசின் அறிவிப்பிலும் இடம்பெற்றது. தமிழகம் முழுவதும் ஒரு நிமிடம் கூட மின்தடை ஏற்படாத வகையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டோம்.

தமிழகத்தில் மே மாதம் 2-ம் தேதி வரை மின்சார விநியோகம் சீராக நடைபெற்று வந்தது. அப்போது தமிழகத்தின் உச்சபட்ச மின்சாரத் தேவை 17,121 மெகாவாட் ஆக இருந்தது. மத்திய அரசின் தொகுப்பில் இருந்து 3,300 மெகாவாட் பெறப்பட்டதுபோக, மீதி மின்சாரத்தை தமிழகத்திலேயே உற்பத்தி செய்தோம். தற்போது மீண்டும் முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் மின்சாரத் தேவை குறைந்து சுமார் 14 ஆயிரத்து 500 மெகாவாட் மட்டுமே மின்தேவை உள்ளது. காற்றாலை மூலம் 3 முதல் 4 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது.



▲ தங்கமணி

தமிழகத்தில் தற்போது 31 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் அளவுக்கு திறன் உள்ளது. அதை முழுமையாக பயன்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக அரசு பதவியேற்று 10 நாட்களில் மின்சார விநியோகத்தை சீரமைப்போம் என்று கூறினர். ஆனால், ஒரு மாதத்தை கடந்த நிலையில் மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளாததால் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது.

தற்போதைய மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தனது துறையை முழுமையாக கவனிக்காமல், மின் தடையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்காமல் ஏற்கெனவே இருந்த அதிமுக அரசு சரியாக பராமரிக்கவில்லை, அதனால் தான் மின்தடை ஏற்படுகிறது என காரணம் கண்டுபிடித்து, தவறான தகவலை தெரிவிக்கிறார்.

### மின் கட்டணம்

கடந்த ஆண்டு ஊரடங்கு அமல்படுத்தியபோது மின்சாரக் கட்டணம் கணக்கெடுப்பதில் சிரமம் ஏற்பட்டதால், 2 மாதங்களுக்கு முன்பு கட்டிய மின் கட்டணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது, கடந்த ஆண்டு மே மாதம் எடுத்த கணக்கின்படி மின்சார கட்டணத்தை செலுத்தக் கூறுகின்றனர்.

மே மாதம் கோடைக் காலம் என்பதால் பலருக்கும் அதிகப்படியான கட்டணம் வந்திருக்கும். அந்த தொகையை தற்போது செலுத்தச் சொல்வதால், கூடுதலான கட்டணத்தை செலுத்த முடியாமல் பலரும் தினசரி மின்வாரிய அலுவலகங்களுக்கு நடந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

'இரட்டை வேடத்தில்' எம்ஜிஆர் நடித்ததுபோல இரட்டை தலைமையின்கீழ்

# அதிமுகவும் வெற்றிகரமாக செயல்படும்: செல்லூர் ராஜு உறுதி

**மதுரை**

எம்ஜிஆர் இரட்டை வேடத்தில் நடித்த படங்கள் வெற்றிபெற்றது போல் இரட்டைத் தலைமையின்கீழ் அதிமுக வெற்றிநடை போடுகிறது என செல்லூர் கே.ராஜு கூறினார்.

இதுகுறித்து மதுரையில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆட்சிக்கு வந்தவுடன் 'நீட்' தேர்வை ரத்து செய்வேன் என்றார். ஆனால், தற்போது 'நீட்' தேர்வுக்கு தயாராகும்படி சொல்கின்றனர். மக்களிடம் பொய் சொல்லியே ஆட்சிக்கு வந்த ஒரே கட்சி திமுக மட்டும்தான்.

அடிமை அரசு என்று விமர்சித்த ஸ்டாலின் டெல்லி சென்று சாதித்தது என்ன? 'கோ பேக் மோடி' என்று திமுகவினர் சொன்னாலும், ஸ்டாலினை மரியாதையுடன் நடத்தியிருக்கிறார் மோடி. காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையைக் கட்ட அதிமுக ஆட்சியில் இருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. எம்ஜிஆர் இரட்டை வேடத்தில் நடித்த படங்கள் பெரிய வெற்றி பெற்றன. அதேபோல, 2 தலைவர்களின் ஆளுமையின்கீழ் அதிமுக வெற்றிநடை போடுகிறது.

அதிமுகவில் பிளவுபடுத்தும் வேலைகளை சிலர் செய்து வருகிறார்கள். அது நடக்காது. உள்ளாட்சி தேர்தல் வரைக்கும்தான் திமுக கூட்டணி நீடிக்கும். அதன் பிறகு மதிமுக, கம்யூனிஸ்ட் எல்லோரும் பிரிந்து சென்றுவிடுவர் என்றார்.

## 'பஞ்ச்'சோந்தி பராக்!

அதிமுக அரசு பொறுப்பேற்ற பிறகே 'நீட்' தேர்வு தமிழகத்தில் நுழைந்தது!
– அமைச்சர் மா.சுப்பிரமணியன்




– நா.கி.பிரசாத், கோயம்புத்தூர்.

● செய்தி: புதிய வேளாண் சட்டங்கள் ரத்துக்கு வாய்ப்பு இல்லை!
– மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர்

பஞ்ச்: மத்திய அரசின் கெத்துக்கும் குறைச்சலே இல்லை!
– பா.சக்திவேல், கோயம்புத்தூர்.

● செய்தி: விவசாய சங்க தலைவர்கள் நள்ளிரவில் வந்தால் கூட நானே வரவேற்பேன்!
– மத்திய அமைச்சர் தோமர்

பஞ்ச்: ஆனா அவங்களோட கோரிக்கைகளைத்தான் குப்பைத் தொட்டியில வீசுவீங்களோ?
– க.கீராசந்த், விருதுநகர்.

▲ வாசகர்களே...
கருத்துச் சித்திரம் போலவே, இதுவும் உங்கள் களம்தான். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கே 'நறுக்' செய்தி வரிகளோடு சேர்த்து அனுப்புங்கள். பிரசுரமாகும் உங்கள் 'பஞ்ச்'களுக்குப் பரிசு ரூ.100.

கரோனா பரவலுக்கு நடுவில் களப்பணியாற்றும்

# அங்கன்வாடிப் பணியாளர் முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்படுவார்களா?

ந.முருகவேல்

**கள்ளக்குறிச்சி**

கரோனா தொற்று வேகமாக பரவி வரும் சூழலிலும் வீடு வீடாகச் சென்று உலர் உணவுப் பொருட்களை வழங்கி வரும் தங்களை முன்களப் பணியாளர்கள் பட்டியலில் இருந்து விடுவித்ததற்கு, அங்கன்வாடிப் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரோனா 2-ம் அலை பரவல் காரணமாக தமிழக அரசு முழு ஊரடங்கை அறிவித்துள்ளது. இந்நிலையில் சுகாதாரத் துறை, காவல் துறை, செய்தியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்டோரை முன்களப் பணியாளர்களாக அரசு அறிவித்து அவர்களுக்கு பல்வேறு சலுகைகளை அரசு வழங்கி வருகிறது. நோய்த் தொற்று காரணமாக அவர்கள் உயிரிழக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்தருணத்தில், அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் சுமார் 92 ஆயிரம் அங்கன்வாடிப் பணியாளர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். அங்கன்வாடிக்கு வந்து சென்ற சிறார்களின் வீடுகளை கண்டறிந்து அவர்களுக்கு வீட்டிலேயே உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றனர். இதுதவிர சுகாதாரத் துறையினருடன் இணைந்து வீடு வீடாக கரோனா தொற்றாளர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணியிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

ஆனால், இவர்கள் முன்களப் பணியாளர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. கரோனா தொற்றுப் பரவலை தடுக்கும் உபகரணங்களும் அவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

"கரோனா தொற்றுப் பரவலாக இருக்கிறது. நாங்கள் செல்லும் இடங்களில் தொற்றாளர்கள் பலர் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதை காண முடிகிறது. எங்களுக்கும் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே அரசு எங்களையும் முன்களப் பணியாளர்களாக அறிவித்து, அதற்கான சலுகைகளை வழங்க வேண்டும்" என அங்கன்வாடிப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



▲ அங்கன்வாடி குழந்தையின் வீட்டுக்கே சென்று உலர் உணவுப் பொருட்களை வழங்கும் அங்கன்வாடிப் பணியாளர்.

"கடந்த ஆட்சியில் அங்கன்வாடிப் பணியாளர்கள் முன்களப் பணியாளர்களாக கருதப்பட்டனர். ஆனாலும், அவர்களுக்கான சலுகைகள் அப்போது வழங்கப்படவில்லை. தற்போது, முன்களப் பணியாளர்கள் என்ற நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கான காரணம் தெரியவில்லை. இத்துறையில் அதிக பணியாளர்கள் இருப்பதால் நிதி நெருக்கடி காரணமாக அரசு அவர்களைத் தவிர்த்திருக்கலாம்" என இவர்களை ஒருங்கிணைக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்ட அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து அங்கன்வாடிப் பணியாளர்கள் நலச் சங்க மாநில பொதுச்செயலாளர் டெய்ஸி கூறும்போது, "ஏறக்குறைய 1 லட்சம் பணியாளர்கள் இருக்கிறோம். கரோனா காலம் மட்டுமின்றி பொதுவாக அரசின் உதவிகளை வீடு வீடாகச் சென்று அளித்து வருகிறோம்.

பணியாளர் நலனைக் கருத்தில் கொண்டு முதல்வர் தற்போது பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். தற்போதுள்ள அசாதாரண நிலையில், எங்களையும் முன்களப் பணியாளர்களாக அறிவித்து அதற்கான சலுகைகளை வழங்க முன்வர வேண்டும்" என்றார்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

இந்து தமிழ் திசை
# பெண் இன்று
உலகம் இவள் வசம்
ஞாயிறு, ஜூன் 20, 2021 penindru@hindutamil.co.in



குழந்தைகளிடையே கரோனா தொற்று விகிதம் குறைவாக இருக்கும். தொற்று ஏற்பட்டாலும் பெரியவர்களைப் பாதித்த அளவுக்கு வீரியமாக இருக்காது. ஆனால், அவர்களிடமிருந்து பிறருக்கு மிக எளிதில் தொற்று பரவக்கூடும்.

# மூன்றாம் அலை குழந்தைகளைப் பாதிக்குமா?

■ ப்ரதிமா ■

**இந்தியாவில் கரோனாவின் முதல் அலையின்போது ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இறப்பு விகிதம் குறைவு. தற்போது இரண்டாம் அலையில் 18 வயதுக்கு மேற்பட்ட 40 வயதுக்குக் குறைவான இளையோர் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். முதல் அலையுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் அலையில் இறப்புவிகிதம் அதிகம். காரணம், இரண்டாம் அலையின்போது கரோனா வைரஸ் வேற்றுருவம் கொண்டுவிட்டது. இதன் அறிகுறிகள் சட்டெனத் தெரியாத நிலையில் நேரடியாக நுரையீரலுக்குள் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது.**

தொடர்ச்சியான ஊரடங்கால் தமிழகத்தில் இரண்டாம் அலையின் தொற்று விகிதம் குறையத் தொடங்கியுள்ளது. ஆனால், மூன்றாம் அலைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அதில் குழந்தைகளே பரவலாகப் பாதிப்புக்குள்ளாவார்கள் என்றும் மருத்துவத் துறையினர் சிலர் சொல்கின்றனர். அதற்கு ஏற்றாற்போல், தமிழக மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான சிறப்பு கரோனா பிரிவுகளை அமைக்கும் பணியும் நடந்துவருகிறது. மூன்றாம் அலையில் குழந்தைகள் பாதிப்புக்குள்ளாவார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது என்றும் சிலர் சொல்கின்றனர். முதல் அலையின்போது 45 வயதுக்கு மேற்பட்டோரும் இரண்டாம் அலையில் 18 வயதுக்கு மேற்பட்டோரும் தடுப்பூசி செலுத்திக்கொண்ட நிலையில் குழந்தைகள் மட்டுமே தடுப்பூசிக் கவசமின்றி உள்ளனர். அதனால், மூன்றாம் அலை ஏற்படும்பட்சத்தில் அவர்கள் எளிதில் தொற்றுக்கு ஆளாகக்கூடும் என்கின்றனர்.



### குழந்தைகள் மூலம் தொற்று

குழந்தைகளுக்குத் தொற்று ஏற்பட்டால் அவர்கள் மூலம் பிறருக்கு எளிதாகத் தொற்று பரவும் ஆபத்து உள்ளது என்கிறார் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையின் டீன் தேரணிராஜன். குழந்தைகள் நல நிபுணரான இவர், "கரோனா வைரஸின் கூர்ப்புரதங்கள் நம் உடலில் உள்ள ACE2 புரத ஏற்பிகளின் மூலம் நம் செல்களுக்குள் நுழையும். இந்தப் புரத ஏற்பிகள் குழந்தைகளுக்கு முழுமையாக வளர்ச்சி பெற்றிருக்காது. பெரியவர்களுடன் ஒப்பிடுகையில் குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம் என்பதாலும் குழந்தைகளிடையே கரோனா தொற்று விகிதம் குறைவாக இருக்கும். தொற்று ஏற்பட்டாலும் பெரியவர்களைப் பாதித்த அளவுக்கு வீரியமாக இருக்காது. ஆனால், தொற்று ஏற்பட்டால் குழந்தைகள் பெருங்கடத்துநர்களாக (சூப்பர் ஸ்ப்ரெட்டர்) மாறும் ஆபத்து உள்ளது. அவர்களிடமிருந்து பிறருக்கு மிக எளிதில் தொற்று பரவக்கூடும். அதனால், கரோனா தொற்றுத்தடுப்பு வழிமுறைகளைக் குழந்தைகளும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். கூடுமானவரை குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்லக் கூடாது. குடும்ப விழாக்கள், மக்கள் நெரிசல் அதிகமுள்ள இடங்களுக்குச் செல்வதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். குழந்தைகளுக்குக் காய்ச்சல், தலைவலி, உடல்சோர்வு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்" என்கிறார்.

தற்போது பள்ளி, கல்லூரிகளில் சேர்க்கை நடைபெற்றுவரும் நிலையில் குழந்தைகள் வெளியே செல்லத் தொடங்கியுள்ளனர். நுழைவுத்தேர்வு பயிற்சி மையங்களுக்கும் விளையாட்டுப் பயிற்சிக்கும் செல்கின்றனர். மருத்துவர்கள் இது வரவேற்கத்தக்கதல்ல என்கின்றனர். குழந்தைகளுக்கான தடுப்பூசி குறித்த ஆய்வுகள் நடைபெற்று வரும் நிலையிலும் இந்தியாவில் கரோனா தொற்று முற்றாக விலகாத நிலையிலும் குழந்தைகள் வெளியே செல்வது ஆபத்தானது.

### தொற்று ஏற்பட்டால் தாய்ப்பால் தரலாமா?

பாலூட்டும் அன்னையர் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம் என்பதைத் தொடர்ந்து தற்போது கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மகப்பேறு முடிந்த நிலையில் பெண்கள் சிலர் தொற்றுக்கு ஆளாகின்றனர். தங்கள் பச்சிளங்குழந்தைகளும் தொற்றுக்கு ஆளாகுமோ என்கிற அச்சத்தில் குழந்தைகளுக்குப் பாலூட்டவும் தயங்குகின்றனர். இந்தத் தயக்கம் தேவையில்லாதது. காரணம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் பாலூட்டுவதன் மூலம் தொற்றுக்கு ஆளான தாயிடமிருந்து குழந்தைக்கு கரோனா வைரஸ் பரவாது. பாலூட்டுவதற்கு முன் கைகளை நன்றாகச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். முகக்கவசம் அணிந்து, காற்றோட்டமான அறையில் அமர்ந்து குழந்தைக்குப் பாலூட்டலாம். தாய்க்கு மிதமான தொற்று இருந்தால் குழந்தையைத் தன்னுடனே வைத்துக்கொள்ளலாம். தாய்க்குத் தீவிர தொற்றோ வேறு பிரச்சினைகளோ இருந்தாலும் அல்லது பாலூட்ட முடியாத அளவுக்குப் பாதிப்பு இருந்தாலும் பாலூட்டத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, சுகாதாரமான முறையில் பாலைச் சேகரித்துக் குழந்தைக்குப் புகட்டலாம். நோயின் தீவிரம் குறைந்த பிறகு பாலூட்டுவதைத் தொடரலாம். பாலைச் சேகரித்துத் தரும் நிலையில் இல்லாதவர்கள், தாய்ப்பால் தானம் பெற்றோ வேறொரு தாயிடம் குழந்தையைக் கொடுத்தோ பால் அருந்தச் செய்யலாம். பேறுகாலத்தில் தொற்றுக்கு ஆளாகும் பெண்கள் உடலளவில் மட்டுமல்லாமல் மனதளவிலும் சோர்வடைவார்கள். அதனால், அவர்களுக்குக் குடும்பத்தினரின் அரவணைப்பு அவசியம். தேவைப்பட்டால் மனநல ஆலோசனை பெறலாம்.






# அவனுக்குப் பதில் அவர்

இது புதுசு

ஒரு பதவி வகிப்பவரையோ, தொழில் செய்கிறவரையோ கலைஞரையோ குறிப்பிடும் ஆங்கிலச்சொற்கள் பெரும்பாலும் ஆணைக் குறிப்பதாகவோ ஆணை மையப்படுத்தியதாகவோதான் இருக்கின்றன. சமூகத்தில் பாலினப் பாகுபாடும் ஆணாதிக்கமும் மேலோங்க இப்படியான சொற்களின் பயன்பாடும் காரணமாக அமைந்துவிடுகிறது. அதை மாற்றி, அதற்கு மாற்றாகப் பாலின அடையாளமற்ற சொற்களை மக்கள் மத்தியில் பரவலாக்கும் முயற்சியில் கூகுள் நிறுவனம் இறங்கியுள்ளது.

கூகுள் டாக்குமென்ட்டில் நாம் Chairman என்று டைப் செய்தால் அதற்குப் பதிலாக chair person என்கிற சொல்லை கூகுள் நமக்குப் பரிந்துரைக்கும். அதேபோல் Policeman என்று டைப் செய்தால் Police officer என்கிற சொல்லைப் பயன்படுத்துமாறு அறிவிப்பு வரும்.

Mankind - Humankind
Man hours - Human hours
Mailman - Mail person

இப்படிச் சொற்களில் குடியிருக்கும் ஆணாதிக்கத்தை ஒழிப்பதன் மூலம் மக்கள் மத்தியில் பாலினப் பாகுபாட்டைக் களைவதுடன் சமத்துவச் சிந்தனையை வளர்க்க முடியும் என்று கூகுள் நம்புகிறது. தொழில்நுட்பத்துடன் சேர்ந்து அதைப் பயன்படுத்துவோரும் மாறினால் நல்லது.

# ஆபத்தை விலைகொடுத்து வாங்கினேன்

என் பாதையில்



புதிய கரோனா வைரஸ் தொற்றுக்குப் பிறகு என் எட்டு வயது மகனையும் ஆறு வயது மகளையும் வீட்டிலேயே வைத்துச் சமாளிப்பது சிக்கலாக இருக்கிறது. அவர்களை எங்கேயும் வெளியே அனுப்ப மனம் வருவதில்லை. அவர்களால் நண்பர்களைப் பார்க்க முடியாது. பள்ளிக்கும் போக வாய்ப்பில்லை. இந்த நிலையில் அவர்களும் எவ்வளவு நேரம்தான் குறிப்பிட்ட சில விளையாட்டுகளை மட்டுமே விளையாடிக்கொண்டிருக்க முடியும்?

காணொலிகளைப் பார்க்கக் கைபேசியும் கணினியும் தேவை எனச் சண்டைபோடத் தொடங்கிவிடுகிறார்கள். இதற்கு மாற்றாக ஏதாவது யோசிக்க வேண்டுமென நினைத்தபோதுதான், இணையம்வழியாகக் குழந்தைகளே கதைசொல்வது, இணையதளங்களில் அவர்களுடைய கதை–ஓவியத்தை வெளியிடுவது, குழந்தைகளின் படைப்புகளைப் புத்தகங்களாகப் பதிப்பிப்பது போன்றவற்றை நடத்தும் சில குழுக்களைப் பற்றி அறிந்தேன். இப்படி ஒரு குழுவின் நிகழ்ச்சிகளில் அவர்களைச் சேர்த்துவிட்டேன். இதுபோன்று செய்வதற்கு அந்தக் குழுவினர் பணமும் வசூலிக்கிறார்கள்.

அது ஒருபுறம் என்றால், குழந்தைகளுக்காக நான் மேற்கொண்ட செயல்பாடு இன்றைக்குப் பிரச்சினைக்குக் காரணமாகிவிட்டது. குழந்தைகளின் படைப்புகளை வெளியிடுவது, புத்தகமாக்குவது போன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைக்க வாட்ஸ்–அப் வழியாகவும், பெற்றோருடனான உரையாடலுக்குப் பிறகுமே செய்கிறார்கள். குழந்தைகளுக்காகத்தானே செய்கிறோம் என்று நானும் இது தொடர்பாகக் குழு ஒருங்கிணைப்பாளருடன் தொடர்புகொண்டுவந்தேன். அவர் என்னுடைய தோழிகளின் குழந்தைகள், உறவினர்களின் குழந்தைகளையும் தனக்கு அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

எல்லாம் நல்லதுக்குத்தானே என நானும் தொடர்ச்சியாகப் பகிர்ந்துவந்தேன். குழந்தைகள் நிகழ்வுக்காக, குழந்தைகளின் படைப்பு வெளியீட்டுக்காக என்கிற பெயரில் என்னுடன் அடிக்கடி அந்த நபர் தொடர்புகொள்ளத் தொடங்கினார். தொடக்கத்தில் குழந்தைகளின் படைப்பு குறித்துப் பேசிவந்த அவர், சமீபகாலமாக என்னுடைய பிரச்சினைகள், நான் அறிமுகப்படுத்திய தோழிகளின் பிரச்சினைகள் குறித்தெல்லாம் கேட்கத் தொடங்கினார். தான் ஒரு மனநல ஆலோசகர் எனவும், அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்றும் கூறினார். அதற்காகச் சில விஷயங்களை அவரிடம் பகிர்ந்துகொண்டதுடன் ஆலோசனைக்குக் கட்டணமும் செலுத்தினேன்.

நாளுக்கு நாள் அவருடைய பேச்சும் செயல்பாடுகளும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தவே, அவரிடம் போனில் பேசுவதையும் வாட்ஸ் அப் வழியே தொடர்புகொள்வதையும் தவிர்க்கத் தொடங்கினேன். இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், நானும் தோழிகளும் ஏற்கெனவே பேசியதைக் கைபேசியில் அவர் பதிவுசெய்து வைத்திருப்பதாகவும், நாங்கள் யாராவது அவருக்கு எதிராக ஏதாவது பேசினாலோ குழுவிலிருந்து விலகினாலோ தன்னிடமுள்ள ஆதாரங்களை வெளியிட்டுப் பகிரங்கப்படுத்திவிடுவேன் எனவும் மிரட்டி வருகிறார். இதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை.

நாவல் கரோனா வைரஸ் தொற்று பரவிவரும் நெருக்கடியான காலத்தில் குழந்தைகளின் நலனுக்காக என்கிற ஆர்வத்தில் வாட்ஸ் அப் குழுக்கள், ஸூம் கூட்டங்கள் என்று கிடைக்கும் வழிகளில் நம்மையும் குழந்தைகளையும் ஈடுபடுத்திக்கொள்ள முயல்கிறோம். ஆனால், அந்தச் செயல்பாடுகள் இதுபோல் சில நெறிதவறிய நபர்களுக்குத் துணைபோவதாக அமைந்துவிடுகின்றன. இதுபோன்ற சிக்கல் வேறு பல இல்லத்தரசிகளுக்கும் நேரலாம். இதுபோன்று நேரடி அறிமுகம் இல்லாத புதிய குழுக்களின் பின்னணி, செயல்பாடுகள் குறித்து எதுவும் அறியாமல் நாமாகப் போய் சிக்கிக்கொள்வது நல்லதல்ல என்கிற நோக்கத்துடனேயே இதை இங்கே பதிவுசெய்கிறேன்.

- இவாஞ்சலின், மாதவரம், சென்னை.

### நீங்களும் சொல்லுங்களேன்...

தோழிகளே, இந்தப் பகுதியில் நீங்களும் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். காய்கறி வாங்கிய அனுபவத்தில் இருந்து கடைசியாகப் படித்த புத்தகம் வரை எதுவாக இருந்தாலும் எங்களுக்கு எழுதுங்கள். நம் அனுபவம் அடுத்தவருக்குப் பாடமாக அமையலாம். குழம்பியிருக்கும் மனதுக்குத் தெளிவைத் தரலாம். தயங்காமல் எழுதுங்கள். மின்னஞ்சல் முகவரி: penindru@hindutamil.co.in

## பெண்கள் 360°

n தொகுப்பு: கோபால் n

### வன்முறையை அம்பலப்படுத்திய பெண்களுக்கு புலிட்சர் பரிசு

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இதழாளர் மேகா ராஜகோபாலன் சர்வதேச செய்திவழங்கலுக்கான புலிட்சர் பரிசை வென்றிருக்கிறார். அமெரிக்காவில் இயங்கும் பஸ்ஃபீட் நியூஸ் என்னும் இணைய ஊடகத்தில் தன்னுடன் பணியாற்றும் ஆலிசன் கிங், கிறிஸ்டோ புஷ்செக் ஆகியோருடன் இணைந்து இந்தப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தமிழகத்தைப் பூர்விகமாகக் கொண்டவரான மேகா, அமெரிக்காவின் மேரிலேண்டில் பிறந்து வளர்ந்தவர். மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ஃபிலிப் மெர்ரில் இதழியல் கல்லூரியில் பட்டம்பெற்றவர். பஸ்ஃபீட் இணைய ஊடகத்தில் பணிக்குச் சேர்ந்த பிறகு சீனாவில் சிறிது காலம் பணியாற்றினார். சீனாவின் ஜிங்ஜாங் மாகாணத்தில் சீன அரசின் பிரம்மாண்ட தடுப்பு முகாம் ரகசியமாக இயங்கிவந்தது. அங்கே ஆயிரக்கணக்கான உய்குர் இஸ்லாமியர்களும் வேறு சில சிறுபான்மை இனத்தவர்களும் சிறைவைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சிறைக் கட்டிடத்தையும் அங்கே நிகழ்ந்த மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தும் வகையில் தொடர்ந்து முக்கியமான பல கட்டுரைகளை மேகா எழுதினார். அந்தச் சிறையில் அடைக்கப் பட்டிருந்த முன்னாள் சிறைவாசிகளில் இருபதுக்கு மேற்பட்டோரை நேர்காணல் கண்டு வெளி யிட்டார். செயற்கைக்கோள் படங்கள், கட்டிடக் கலை குறித்த நிபுணத்துவம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த ரகசிய சிறைச்சாலை குறித்த உண்மைகளைக் கண்டறிந்தார். இதற்காகவே அவர் சர்வதேச இதழியலுக்கான புலிட்சர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



▲ மேகா



▲ டார்னெல்லா ஃப்ரேசியர்

அமெரிக்கக் காவல்துறையால் ஜார்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டதை உலகுக்கு அம்பலப்படுத்திய டார்னெல்லா ஃப்ரேசியர் என்னும் 18 வயதுப் பெண்ணுக்கு புலிட்சர் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மினசோட்டா மாகாணத்தில் மினியோபோலிஸ் நகரைச் சேர்ந்த ஆப்பிரிக்க–அமெரிக்கரான ஜார்ஜ் ஃபிளாய்ட் விசாரணையின்போது அந்தச் சாலையிலேயே காவல்துறை அதிகாரி ஒருவரால் கழுத்தில் மிதிக்கப்பட்டுக் கொல்லப் பட்டார். இதைத் தனது செல்போனில் காணொலியாகப் பதிவுசெய்து முதலில் வெளியிட்டார் டார்னெல்லா. ஜார்ஜ் ஃபிளாய்ட் கொலையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்காக இந்தக் காணொலி தவிர்க்க முடியாத ஆதாரமாகப் பயன்பட்டது. உலகம் முழுவதும் காவல்துறை வன்முறைக்கு எதிரான போராட்டங்களுக்கும் வழிவகுத்தது.

### கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி: அவசியத்தை உறுதிப்படுத்தும் ஆய்வு



இந்தியாவில் மே 1 முதல் கர்ப்பிணிகளைத் தவிர 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட்–19–க்கான தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது, தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் தடுப்பூசி செலுத்த சில வாரங்களுக்கு முன்பு அனுமதி அளிக்கப்பட்டது. சௌம்யா சுவாமிநாதன் உள்ளிட்ட அறிவியல் வல்லுநர்களும் பல்வேறு மகப்பேறு மருத்துவ நிபுணர்களும் கர்ப்பிணிகளுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திவருகின்றனர். ஆனால், இந்தியாவில் செலுத்தப்படும் கோவிஷீல்டு, கோவேக்ஸின் தடுப்பூசிகள் கர்ப்பிணிகளிடம் என்ன மாதிரியான விளைவை ஏற்படுத்தும் என்பதற்கான பரிசோதனை முடிவுகள் இல்லாத நிலையில் அவர்களுக்குத் தடுப்பூசி செலுத்த அனுமதிக்கவில்லை. கர்ப்பிணிகளில் கரோனா வைரஸ் தொற்றைப் பெறுவதற்கான அதிக ஆபத்தில் இருப்பவர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தலாம் என்னும் வழிகாட்டலை உலக சுகாதார மையம் கடந்த வாரம் வெளியிட்டது. தற்போது கர்ப்பிணிகளுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தி ஆக வேண்டும் என்பதற்கான ஆதாரபூர்வ தரவுகளும் வெளியாகிவிட்டன.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (ஐசிஎம்ஆர்) இந்தியாவில் கரோனா முதல் அலை, இரண்டாம் அலை காலகட்டங்களில் கர்ப்பிணிகள், முதன்முறை கருவுற்ற பெண்களுக்கு ஏற்பட்ட கோவிட் பாதிப்புகளைக் குறித்து நடத்திய ஆய்வின் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அதன்படி முதல் அலையின்போது கோவிட் தாக்குதலுக்குள்ளான இந்தப் பிரிவைச் சேர்ந்த பெண்களில் 14.2 சதவீதத்தினருக்கு அறிகுறிகள் தென்பட்டுள்ள நிலையில் இரண்டாம் அலையின்போது அது இரண்டு மடங்கு அதிகமாகி 28.7 சதவீத மாகியுள்ளது. முதல் அலையில் கரோனா தொற்று ஏற்பட்ட பெண்களில் 0.7 சதவீதத்தினர் மட்டுமே மரணமடைந்த நிலையில் இரண்டாம் அலையில் 5.7 சதவீதக் கர்ப்பிணிகளும் கருவுற்ற தாய்மாரும் மரணித்துள்ளனர். பொதுவாக அனைவரிடமுமே முதல் அலையைக் காட்டிலும் இரண்டாம் அலை கரோனா தொற்றின் தாக்கம் வெகு தீவிரமாக இருந்தது என்றாலும் கர்ப்பிணிகளும் சமமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையே இந்த ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே, கர்ப்பிணிகளுக்கும் கோவிட்–19 தடுப்பூசி போடப்படும் பணி உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா உள்பட உலக நாடுகள் பலவற்றில் கர்ப்பிணிகளுக்குத் தடுப்பூசி போடத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்காவில் செலுத்தப்படும் ஃபைஸர், மாடர்னா தடுப்பூசிகளின் விளைவுகள் கர்ப்பிணிகளிடமும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. எனவே, அவை இந்தியர்களுக்குக் கிடைக்கச் செய்யும் பணி விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவருகின்றனர்.

### பிஞ்சு மனத்தின் பிரபஞ்ச நேசம்

அரசுகளும் தனியார் நிறுவனங்களும் பெருந்தொகையைச் செலவழித்துச் செய்யும் விளம்பரங்களையும் பிரச்சாரங்களையும்விட எளிய மக்களின் சமூக அக்கறையால் விளையும் பிரச்சாரங்கள் பரவலான கவனத்தை ஈர்த்து அந்தப் பிரச்சாரத்தின் நோக்கத்திலும் வெற்றியடைந்துவிடுவதுண்டு. உத்தரப்பிரதேசத்தின் சீதாபூர் மாவட்டத்தில் உள்ள ராம்கோட் கிராமத்தில் 11 வயதுச் சிறுமியின் செயலும் அத்தகையதுதான். இளஞ்சிவப்பு நிறச் சேலையும் அதே நிறத்தில் ஸ்கேட்டிங் காலணியும் அணிந்து கிராமத்து வீதிகளில் ஸ்கேட்டிங் பயணம் மேற்கொண்டார் அந்தச் சிறுமி. இந்த ஸ்கேட்டிங் பயணத்தின்போது கோவிட்–19 தொடர்பான பிரச்சாரங்களை மேற்கொண்டிருக்கிறார். முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவற்றுடன் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கிறார்.



தடுப்பூசி குறித்த தயக்கத்திலிருந்து விடுபடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருகிறார். அந்தக் கிராமத்தின் கரடுமுரடான சாலைகள் ஸ்கேட்டிங்குக்குத் தோதானவை அல்ல. ஆனாலும், சேலை அணிந்தபடி ஸ்கேட்டிங் செய்யும் தன் விருப்பத்தை அவர் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். அதனுடன் கோவிட்–19 விழிப்புணர்வு என்னும் சமூகத் தொண்டையும் இணைத்துக்கொண்டது பிஞ்சு மனத்தில் வெளிப்பட்ட பிரபஞ்ச நேசம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தச் சிறுமியின் ஸ்கேட்டிங் காணொலி ஆங்கிலச் செய்தித் தொலைக்காட்சி ஊடகங்களில் முதலில் வெளியானது. சீதாபூரைச் சேர்ந்த மகிளா காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஷமீனா ஷாஃபிக் இந்தச் சிறுமியின் காணொலியைத் தன் ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து பாராட்டியுள்ளார்.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup



உ.பி. முதல்வர் ஆதித்யநாத் நேர்மையானவர். அவரது ஆட்சியில் ஊழல் ஒழிந்துள்ளது. வளர்ச்சி திட்டங்கள் வேகம் பெற்றுள்ளன. வரும் 2022 சட்டப்பேரவைத் தேர்தலை அவரது தலைமையில் எதிர்கொள்வோம்.

● **சுதந்திர தேவ் சிங்,** பாஜக மாநில தலைவர் ●





சுவிட்சர்லாந்து வங்கிகளில் இந்தியர்கள் ரூ.20,700 கோடி முதலீடு செய்துள்ளனர். கறுப்பு பணத்தை மீட்போம் என்ற பாஜக வாக்குறுதி என்ன ஆனது? பணத்தை மீட்பதில் மத்திய அரசுக்கு தோல்விதான்.

● **கவுரவ் வல்லபா,** காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ●



| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| **97** ஆயிரம் பேர் குணமடைந்தனர் | **2.86** கோடி பேர் குணமடைந்தனர் |
| **33** லட்சம் பேருக்கு தடுப்பூசி | **27.23** கோடி பேருக்கு தடுப்பூசி |
| **19.02** லட்சம் பரிசோதனை | **38.92** கோடி பரிசோதனை |

# இந்தியாவில் கரோனா தொற்று 60,753 ஆக குறைந்தது

■ **புதுடெல்லி**

இந்தியாவில் கடந்த 74 நாட்களுக்குப் பிறகு தினசரி கரோனா வைரஸ் தொற்று, 60,752 ஆக குறைந்துள்ளது. உயிரிழப்பும் கடந்த 2 நாட்களாக 2 ஆயிரத்துக்கு குறைவாகவே உள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் நேற்று காலை வெளியிட்ட புள்ளி விவரத்தில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் கரோனா வைரஸ் பரவல் 2-வது அலை கணிசமாக குறைந்துவிட்டது. தினசரி கரோனா தொற்று கடந்த 74 நாட்களுக்குப் பிறகு 60,753 ஆக கடந்த 24 மணி நேரத்தில் பதிவாகி உள்ளது.

இதன்மூலம் நாட்டில் மொத்தம் கரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2 கோடியே 98 லட்சத்து 23,546 ஆனது.

**97 ஆயிரம் பேர்**

அதேபோல் 24 மணி நேரத்தில் உயிரிழப்பும் 1,647 ஆக குறைந்துள்ளது. கடந்த 2 நாட்களாகவே உயிரிழப்பு 2 ஆயிரத்துக்குக் கீழ் பதிவாகி உள்ளது. அதே போல் ஒரே நாளில் 97,743 பேர் குணமடைந்துள்ளனர். இதன் மூலம் நாட்டில் கரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 2 கோடியே 86 லட்சத்து 78,390 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் தற்போது நாட்டில் கரோனா தொற்றுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 7 லட்சத்து 60,019 ஆக குறைந்துள்ளது.

இவ்வாறு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் கூறியுள்ளது. - பிடிஐ

**கருத்துச் சித்திரம்** கருத்து: **வெ கார்த்திக்,** புத்தூர்.




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

## சின்னச் சின்னதாய்...



▲ சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு மேற்கு வங்க மாநிலம் நடியா மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் பங்கேற்று ஆசனங்களை செய்து காட்டிய மாணவர்கள். படம்: பிடிஐ

### உ.பி. பாஜக துணைத் தலைவராக முன்னாள் ஐஏஎஸ் ஏ.கே.சர்மா நியமனம்

**புதுடெல்லி:** உத்தரபிரதேசத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் பாஜக ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனிடையே, ஆதித்யநாத் மீது அதிருப்தியில் உள்ள சொந்த கட்சி எம்எல்ஏக்கள், அவரை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கக் கூடாது என வலியுறுத்தி வந்தனர். எனினும், ஆதித்யநாத்தையே மீண்டும் முதல்வர் வேட்பாளராக பாஜக தலைமை அறிவித்துள்ளது.

இதையடுத்து, கட்சியை அமைப்பு ரீதியாக பலப்படுத்தும் நடவடிக்கையில் ஆதித்யநாத் தீவிரம் காட்டி வருகிறார். அதன் ஒரு பகுதியாக, பாஜகவில் இணைந்த குஜராத் மாநில முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி ஏ.கே.சர்மாவை அமைச்சரவையில் சேர்க்க முயற்சிகள் நடப்பதாக செய்திகள் வந்தன.

ஆனால், யாரும் எதிர்பாராத வகையில் ஏ.கே. சர்மாவை உத்தரபிரதேச பாஜக துணைத் தலைவராக கட்சித் தலைமை நேற்று நியமித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமானவராக அறியப்படும் ஏ.கே.சர்மா, தற்போது உத்தர பிரதேச எம்எல்சியாக பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

### ராகுல் காந்தியின் பிறந்த நாளில் ஏழைகளுக்கு உதவி செய்த காங்கிரஸார்

**புதுடெல்லி:** காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் பிறந்த நாளை ஒட்டி, நாடு முழுவதும் உள்ள காங்கிரஸ் நிர்வாகிகள் ஏழைகளுக்கு உதவிப் பொருட்களை வழங்கினர்.

ராகுல் காந்தி தனது 51-வது பிறந்த நாளை நேற்று கொண்டாடினார். கடந்த ஆண்டு கரோனா வைரஸ் பரவல் இருந்ததால், தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தை ரத்து செய்த ராகுல் காந்தி, அன்றைய தினம் ஏழைகளுக்கு உதவி செய்யுமாறு கட்சி நிர்வாகிகளை அறிவுறுத்தியிருந்தார். அதன்படி, வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு காங்கிரஸார் உதவி செய்தனர்.

நடப்பாண்டும் கரோனா பாதிப்பு தொடர்வதால் தனது பிறந்த நாளை கொண்டாடுவதில்லை என ராகுல் காந்தி நேற்று முன்தினம் அறிவித்தார். மேலும், தமது பிறந்த நாளை சேவை தினமாக கடைபிடிக்க கட்சியினருக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்து, ராகுல் காந்தியின் பிறந்த நாளான நேற்று, டெல்லி, உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் நிர்வாகிகள் ஏழைகளுக்கு உணவுப்பொருட்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கினர். மேலும், கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துப்பொருட்களும் கட்சி சார்பில் வழங்கப்பட்டதாக காங்கிரஸ் தலைமை தெரிவித்துள்ளது.

# மேற்கு வங்கத்தில் வன்முறை குறித்து விசாரிக்க குழு

● **மனித உரிமைகள் ஆணையத்துக்கு கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவு**

■ **கொல்கத்தா**

மேற்கு வங்க மாநிலத்தில் தேர்தலுக்குப் பின்னர் நடந்த வன்முறை தொடர்பாக குழு அமைத்து விசாரிக்கவேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்துக்கு கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் கடந்த மார்ச் 27-ம் தேதி முதல் ஏப்ரல் 29-ம் தேதி வரை 8 கட்டங்களாக நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றது. முதல்வராக மம்தா பானர்ஜி பொறுப்பேற்றார். கடந்த மாதம் 2-ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, மேற்கு வங்கத்தில் வன்முறை வெடித்தது.

குறிப்பாக பாஜக.வுக்கு தேர்தலில் ஆதரவு திரட்டியவர்கள், தாழ்த்தப்பட்டோர், பெண்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பலர் உயிரிழந்தனர். பலர் உயிருக்கு பயந்து ஊரை காலி செய்து விட்டு சென்றுள்ளனர்.

திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்கள்தான் இந்த தாக்குதலில் ஈடுபட்டனர் என்று பாஜக குற்றம் சாட்டியது. இதற்கிடையில், வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று மாநில ஆளுநர் ஜெகதீப் தன்கர் கண்டித்தார்.

இந்நிலையில், மேற்கு வங்க வன்முறை குறித்து விசாரணை நடத்த தேசிய மனித உரிமைகள் ஆணையம், தாழ்த்தப்பட்டோர் ஆணையம், மகளிர் ஆணையத்துக்கு, நாடு முழுவதும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களை சேர்ந்த துணை வேந்தர்கள், பேராசிரியர்கள், இயக்குநர்கள், டீன்கள் என 600 பேர் இணைந்து கையெழுத்திட்டு கடிதம் அனுப்பி இருந்தனர்.

இதனிடையே தேர்தலுக்குப் பிந்தைய வன்முறை தொடர்பாக விசாரிக்கக் கோரி கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் பல்வேறு பொது நல மனுக்கள் (பிஐஎல்) தாக்கல் செய்யப்பட்டு இருந்தன.

இந்த மனுக்கள் அனைத்தும் தலைமை நீதிபதி ராஜேஷ் பிந்தால் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து வருகிறது. நேற்று முன்தினம் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தபோது தேர்தலுக்குப் பிறகு நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும் மேற்கு வங்க மாநில சட்டச் சேவை ஆணைய உறுப்பினர் - செயலர், இந்தக் குழுவில் உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்றும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தைச் சேர்ந்த ஒருவரும் இந்தக் குழுவில் இடம் பெற வேண்டும் என்றும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் கூறியுள்ளனர். - பிடிஐ

### மத்திய அமைச்சர் அமித் ஷாவுடன் ஆளுநர் மீண்டும் சந்திப்பு

மேற்கு வங்கத்தில் பல்வேறு விவகாரங்களில் முதல்வர் மம்தாவுக்கும் ஆளுநர் ஜெகதீப் தன்கருக்கும் இடையே மோதல் போக்கு நிலவுகிறது. மேற்கு வங்கத்தில் தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகள் குறித்து ஆளுநர் தன்கர் கவலை தெரிவித்து வருகிறார். இந்த வன்முறைகள் குறித்து அவர் மத்திய அரசுக்கு ஏற்கெனவே அறிக்கை அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் தன்கர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் டெல்லியில் இருந்து வருகிறார். அவர் இந்தப் பயணத்தில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், மத்திய அமைச்சர்கள் பிரகலாத் ஜோஷி, பிரகலாத் சிங் படேல் உள்ளிட்டோரை சந்தித்தார். கடந்த வியாழக்கிழமை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை ஆளுநர் தன்கர் சந்தித்தார். இந்த சந்திப்பில் மேற்கு வங்க சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்து அமைச்சரிடம் எடுத்துரைத்ததாக அவர் கூறினார்.

இந்நிலையில் நேற்று இரண்டாவது முறையாக மத்திய அமைச்சர் அமித் ஷாவை ஆளுநர் தன்கர் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்புக்குப் பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "ஜனநாயகம், அரசியலமைப்பு சட்டம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைப்பதற்கான தருணம் இது. மேற்கு வங்க அதிகாரிகளும் காவல் துறையினரும் தங்கள் நடத்தை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, மிக மோசமான 'தேர்தலுக்குப் பிந்தையை வன்முறை' மேற்கு வங்கத்தில் நடந்துள்ளது" என்றார்.



▲ மத்திய பிரதேசத்தின் ஜபல்பூர் நகரில் தும்னா வனப்பகுதியில் விளையாட்டு நகரத்தை உருவாக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இதை எதிர்த்து இளைஞர் காங்கிரஸார் சார்பில் ஜபல்பூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அவர்களை போலீஸார் தடுத்து தண்ணீரை பீய்ச்சி அடித்து விரட்டினர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். படம்: பிடிஐ

# தெலங்கானா மாநிலத்தில் ஊரடங்கு முற்றிலும் வாபஸ்

■ **ஹைதராபாத்**

தெலங்கானா அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் கே.சந்திரசேகர ராவ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில் அண்டை மாநிலங்களை விட தெலங்கானாவில் கரோனா தொற்று குறைந்துள்ளதாலும் அதிக எண்ணிக்கையில் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாலும் ஊரடங்கை முற்றிலும் நீக்கலாம் என அமைச்சர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதையடுத்து தெலங்கானாவில் இன்று முதல் ஊரடங்கு முற்றிலும் விலக்கிக் கொள்ளப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இதனால் பஸ் போக்குவரத்து, மெட்ரோ ரயில் போக்குவரத்து 100 சதவீதம் இயங்க உள்ளது. ஆட்டோக்கள், டாக்ஸிக்களும் இயங்கலாம், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் 100 சதவீத ஊழியர்களுடன் செயல்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் இன்று முதல் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புகின்றனர்.

பள்ளி, கல்லூரிகள் ஜூலை 1-ம் தேதி திறக்கப்பட உள்ளன. ஊரடங்கு நீக்கப்பட்டாலும் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது உள்ளிட்ட பாதுகாப்பு விதிமுறைகளை மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும், அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

தெலங்கானாவில் கரோனா பரிசோதனையில் பாசிட்டிவ் விகிதம் நேற்று முன்தினம் 1.4 சதவீதமாக இருந்தது. புதிய நோயாளிகள் எண்ணிக்கை சுமார் 1,400 ஆகவும், உயிரிழப்பு 12 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

# 500 ஏழுமலையான் கோயில்கள் கட்டப்படும்

● **திருப்பதி அறங்காவலர் குழு தலைவர் தகவல்**

**என்.மகேஷ்குமார்**

■ **திருமலை**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஒய்.வி.சுப்பாரெட்டி தலைமையிலான அறங்காவலர் குழுவின் 2 ஆண்டு காலம் நாளை 21-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதனையொட்டி, ஒய்.வி.சுப்பா ரெட்டி தலைமையிலான கடைசி அறங்காவலர் குழு கூட்டம் நேற்று திருமலையில் உள்ள அன்னமைய்யா பவனில் நடைபெற்றது. இதில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் ஒய்.வி. சுப்பாரெட்டி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஏழுமலையானின் கோயில் நாடு முழுவதும் இருக்கவேண்டுமெனும் எண்ணத்தில் சமீபத்தில் காஷ்மீரில் ஏழுமலையான் கோயில் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இக்கோயில் 18 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படும். மேலும், மும்பை, வாரணாசி உட்பட பல நகரங்களில் நாடு முழுவதும் 500 ஏழுமலையான் கோயில்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோயிலுக்கோர் கோமாதா திட்டம் தற்போது சுமார் 100 கோயில்களில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் இத்திட்டத்தை அனைத்து முக்கிய கோயில்களிலும் அமல் படுத்துவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். ஏழுமலையானுக்கு முந்தைய காலத்தை போன்று இயற்கை விவசாய முறையில் தயாரிக்கப்பட்ட பொருட்களை கொண்டே நைவேத்தியம் சமர்ப்பிக்கப்படுகிறது. இது தொடர்ந்து அமல்படுத்தப்படும்.

**நிரந்தர பணி**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் பணியாற்றும் ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவரும் விரைவில் நிரந்தர பணியாளர்களாக மாற்றப்படுவர். இது குறித்து 90 நாட்களுக்குள் அட்டவணை தயாரிக்கப்படும்.

திருமலையில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, பேட்டரி பஸ்களை இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி ஒப்புதல் வழங்கியதால், விரைவில் 100 பேட்டரி பஸ்கள் திருப்பதி-திருமலை இடையே இயக்கப்படும். இதேபோன்று, தனியார் டாக்ஸிகளும் பேட்டரி வாகனங்களாக இயக்க வேண்டுமென்பதே எங்களது குறிக்கோள்.

ஆதலால், தேவைப்படுவோருக்கு வங்கி கடன் மூலம் பேட்டரி கார்கள் வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும். ஆந்திராவில் கரோனா தொற்று படிப்படியாக குறைந்து வருவதால், இனி தரிசன டோக்கனும் அதிகரிக்கப்படும். இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

இவ்வாறு ஒய்.வி. சுப்பா ரெட்டி தெரிவித்தார். இக்கூட்டத்தில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், தேவஸ்தான உயர் அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

உத்தரபிரதேச காவல் துறையில் திரைப்பட பாணியில் மோசடி

# சகலையின் காவல் பணியில் 5 வருடமாக தொடர்ந்தவர் கைது

**ஆர்.ஷபிமுன்னா**

■ **புதுடெல்லி**

உத்தரபிரதேசம் காவல்துறையில் திரைப்பட பாணியில் மோசடி நடைபெற்றுள்ளது. தனது சகலையின் காவல் பணியில் ஆள் மாறாட்டம் செய்து தொடர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழில் லிங்குசாமி இயக்கத்தில் 'வேட்டை' எனும் திரைப்படம் வெளியானது. இதில், பயந்த சுபாவம் கொண்ட மூத்த சகோதரர் மாதவனுக்கு காவல் பணி கிடைக்கும். ஆனால், இவருக்கு அடிதடி மோதல் வரும் சூழலில் அவரது தம்பியான ஆர்யா வந்து வில்லன்களுடன் மோதி கைது செய்ய உதவுவார். சட்ட விரோதமான இச்செய்கையை இறுதியில் நியாயப்படுத்தி ஆர்யா தண்டிக்கப்படுவதும் இல்லை. இதே வகையில் ஒரு ருசிகர மோசடி உ.பி.யின் முராதாபாத்தின் காவல் துறையில் நடைபெற்றுள்ளது.

உபியின் முசாபர்நகரை சேர்ந்த அணில்குமார் என்பவருக்கு அம்மாநிலக் காவல்துறையில் கடந்த 2011-ல் கான்ஸ்டபிள் பணி கிடைத்துள்ளது. பரேலியில் இதற்கானப் பயிற்சியில் அணில்குமாரால் தேர்ச்சி பெறமுடியவில்லை. இதன்பின்னர் கோரக்பூரில் இரண்டு முறை பயிற்சிக்கு பின் தேறியவரை பரேலியில் பிலாரி காவல்நிலையத்தில் பணிக்கு அமர்த்தினர். அங்கு கடுமையான பணியை அணில்குமாரால் செய்வது சிரமமாக இருந்துள்ளது.

இதனால், தனக்கு பதிலாக தன் சகலையான சுனில்குமாரை ஆள்மாறாட்டம் செய்து காவலர் பணிக்கு அனுப்பியுள்ளார். இதற்காக அவருக்கு உயர் அதிகாரிகளுக்கு 'சல்யூட்' அடிப்பது உள்ளிட்ட பெரும்பாலான பயிற்சிகளையும் தனிப்பட்ட முறையில் அளித்துள்ளார். தனது உயர் அதிகாரிகளுடனும், காவல்நிலையத்திலும் இருப்பதை தவிர்க்கும்படியும் யோசனை கூறியுள்ளார்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன் அவர் தனது கைப்பேசியின் வாட்ஸ்அப்பில் மாற்றிய சுயவிளம்பரப் படம் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. அதில் சுனில் அரசு கைத்துப்பாக்கியை பாலிவுட் நாயகர்கள் பாணியில் தூக்கிப் பிடித்துஎடுத்தபடங்களைபதிவிட்டிருந்தார். இதனால், அவர் மீது முராதாபாத் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளருக்கு சகக்காவலர்கள் புகார் செய்துள்ளனர். இதன் மீது நடத்தப்பட்ட விசாரணையில் சுனில்குமார் போலியான காவலர் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து 'இந்து தமிழ்' நாளேட்டிடம் முராதாபாத் மாவட்ட எஸ்எஸ்பியான பவண் குமார் கூறும்போது, 'போலீஸ் பயிற்சியை தன் சகலையிடம் நன்கு கற்ற சுனில்குமார் மீது எவருக்கும் சந்தேகம் எழவில்லை. அணில் குமாரின் பெயரில் ஆள்மாறாட்டம் செய்து கடந்த நவம்பர் 2016ல் பணியில் இணைந்துள்ளார். பணி மாற்றல் உத்தரவில் புகைப்படம் பயன்படுத்தாததன் பலன், இக்குற்றத்திற்கு சாதகமாக இருந்துள்ளது. தனக்கு கிடைத்த ரூ.35,000 ஊதியத்தில் சகலையான அணிலுக்கு மாதம் ரூ.8.000 அளித்து வந்துள்ளார்' எனத் தெரிவித்தார்.

தனது சகலை அணில் குமாரின் இடத்தில் பணியாற்றியதையும் ஏற்றுக்கொண்ட நிலையில் சுனில்குமார் நேற்று கைது செய்யப்பட்டார். இவரது சகலையான அணில் குமாரையும் முராதாபாத் போலீஸார் கைது செய்தனர். பி.எட் கல்வி முடித்த அணில் குமார் முசாபர்நகரின் ஒரு அரசு பள்ளியில் ஆசிரியர் பணி செய்து வந்திருப்பதும் தெரிந்துள்ளது. நாட்டின் எந்த மாநிலங்களிலும் நடைபெறாத இதுபோன்ற மோசடியால் உபி காவல்துறை விமர்சனங்களுக்கு உள்ளாகி விட்டது.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup

TAMILTH ALL 1 Back_Pg A.M.PRABHAKARAN Time





▲ உத்தராகண்ட் மாநிலம் ஹரித்துவாரில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருவதால் கங்கை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. ஹரித்துவாரின் கங்கை படித்துறையில் நேற்று கரையைத் தொட்டபடி செல்லும் புதுவெள்ளம். படம்: பிடிஐ

# சீனாவின் சவாலை எதிர்கொள்ள தயார்

● விமானப்படை தளபதி ஆர்.கே.எஸ்.பதாரியா உறுதி

■ ஹைதராபாத்

சீனாவின் சவாலை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளோம் என்று விமானப்படை தளபதி ஆர்.கே.எஸ்.பதாரியா உறுதிபட தெரிவித்துள்ளார்.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் அமைந்துள்ள விமானப் படை தளத்தில், பயிற்சி முடித்த வீரர்களின் அணிவகுப்பு நேற்று நடைபெற்றது. இதில் விமானப்படை தளபதி ஆர்.கே.எஸ். பதாரியா பங்கேற்று அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த ஆண்டு கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் இந்தியா, சீனா இடையே போர் பதற்றம் எழுந்தது. அப்போதே எதையும் எதிர்கொள்ள முப்படைகளும் தயார் நிலையில் இருந்தன. இப்போது விமானப்படையின் பலம் பல மடங்கு உயர்ந்துள்ளது. சீனாவின் சவாலை எதிர்கொள்ள எப்போதும் தயார் நிலையில் உள்ளோம். லடாக் எல்லையில் நிலை நிறுத்தப்பட்டுள்ள படைகள் குறைக்கப்படாது.

முப்படைகளின் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தை அமைப்பது தொடர்பாக ஆலோசனை நடைபெற்று வருகிறது. இந்திய விமானப்படையில் மிக முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் மிகவும் பழைமையான போர் விமானங்கள் படையில் இருந்து விலக்கப்படும். அதற்குப் பதிலாக புதிய போர் விமானங்கள் படையில் சேர்க்கப்படும். பிரான்ஸின் ரஃபேல் போர் விமானங்கள், விமானப் படையில் சேர்க்கப்பட்டு வருகின்றன. வரும் 2022-ம் ஆண்டுக்குள் 36 ரஃபேல் போர் விமானங்களும் படையில் இணையும்.

உள்நாட்டு தயாரிப்பான தேஜாஸ் போர் விமானங்கள் படையில் சேர்க்கப்பட்டு வருகின்றன. இவை 4-ம் தலைமுறை போர் விமானங்கள் ஆகும். அடுத்து 5-ம் தலைமுறையைச் சேர்ந்த போர் விமானங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை டிஆர்டிஓ மேற்கொள்ளும்.

கரோனா காலத்தில் மருத்துவ உபகரணங்கள், ஆக்சிஜன் டேங்கர், சிலிண்டர்களை நாடு முழுவதும் கொண்டு செல்லும் பணியில் விமானப் படை உறுதுணையாக இருந்தது. கடந்த 2 மாதங்களில் விமானப் படை விமானங்கள் 3,800 மணி நேரம் பறந்து மக்களுக்கு சேவையாற்றின. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்திய கடற்படையின் துணைத் தலைவர் அசோக் குமார் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

இலங்கை திட்டங்களில் சீனா பங்கேற்றிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்த விவகாரத்தை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். இந்திய கடல் எல்லைகள் மிகவும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. சீனாவுடன் பதற்றம் நிலவுவதால் அமெரிக்காவின் பிரிடேட்டர் வகை ஆளில்லா உளவு விமானங்களை பயன்படுத்தி வருகிறோம். எங்களது கண்களில் இருந்து யாரும் தப்ப முடியாது.

பிரிடேட்டர் வகை விமானங்கள் 50,000 அடி உயரத்தில் 2,900 கி.மீ. தொலைவு வரை பறக்கும் திறன் கொண்டது. இந்த ஆளில்லா விமானங்களில் ஏவுகணைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் எதிரி போர்க்கப்பல்களை தாக்கி அழிக்க முடியும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(C) KSL Media Ltd.

# வறுமையால் குழந்தையை ரூ.3,000-க்கு விற்ற தாய்

● மனம் மாறி மீட்டுத் தர போலீஸில் புகார்

என்.மகேஷ்குமார்

■ ஹைதராபாத்

குடும்ப வறுமை காரணமாக பச்சிளம் குழந்தையை ரூ.3 ஆயிரத்துக்கு விற்ற தாய் ஒருவர், பிரிவை தாங்க முடியாமல் பிறகு குழந்தையை மீட்டுத் தரக் கோரி காவல் நிலையத்தில் புகார் அளித்த சம்பவம் ஹைதராபாத்தில் நடந்துள்ளது.

ஹைதராபாத் பூச்சிபள்ளி பகுதியைச் சேர்ந்தவர் ராதா. இவருக்கு கடந்த சில வாரங்களுக்கு முன்பு அரசு மருத்துவமனையில் அழகான பெண் குழந்தை பிறந்தது. கரோனாவால் ஏற்கெனவே பொருளாதார பிரச்சினையை எதிர்கொண்டிருந்த இக்குடும்பத்தால் குழந்தைக்கு போதிய பால் கூட வாங்க முடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் குழந்தையை விற்றுவிட முடிவு செய்துள்ளனர்.

இதன்படி, 21 நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை அதே பகுதியைச் சேர்ந்த சாந்தம்மா என்பவருக்கு ரூ.3 ஆயிரத்திற்கு ராதா கொடுத்துள்ளார். பிறகு வீட்டுக்கு வந்ததும் குழந்தையின் நினைவாகவே ராதா இருந்துள்ளார். எவ்வளவு முயன்றும் அவரால் குழந்தையை மறக்க முடியவில்லை. இதையடுத்து ரூ.3 ஆயிரம் பணத்துடன் சாந்தம்மா வீட்டுக்குச் சென்று குழந்தையை திரும்பத் தரும்படி கேட்டுள்ளார். ஆனால் இதனை சாந்தம்மா ஏற்கவில்லை. இறுதியாக ரூ.10 ஆயிரம் கொடுத்தால் குழந்தையை தருகிறேன் என அவர் கூறியுள்ளார்.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த ராதா, இதுகுறித்து பூச்சி பள்ளி காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் புகார் அளித்தார். இதன் பேரில் போலீஸார், சாந்தம்மாவின் வீட்டுக்குச் சென்று குழந்தையை மீட்டு தாயிடம் ஒப்படைத்தனர்.

கரோனா தொற்று குறைந்து ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும்

# விதிமுறைகளை கடைப்பிடிக்க அறிவுறுத்துங்கள்

● மாநில அரசுகளுக்கு மத்திய அரசு கடிதம்

■ புதுடெல்லி

கரோனா தொற்று குறைந்து ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் பொதுமக்கள் விதிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிக்க அறிவுறுத்த வேண்டும் என மாநில அரசுகளுக்கு மத்திய அரசு கடிதம் எழுதி உள்ளது.

நாடு முழுவதும் வேகமாக பரவிய கரோனா 2-வது அலை படிப்படியாக குறைந்து வருவதால் ஊரடங்கு கட்டுப்பாடுகளை மாநில அரசுகள் படிப்படியாக தளர்த்தி வருகின்றன.

இந்த சூழ்நிலையில், மத்திய உள் துறை செயலாளர் அஜய் குமார் பல்லா அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர்களுக்கும் ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

கரோனாவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதால் ஊரடங்கு கட்டுப்பாடுகளை மாநில அரசுகள் தளர்த்தி வருகின்றன. கள நிலவரங்களை நன்றாக ஆய்வு செய்து அதன் அடிப்படையில் கட்டுப்பாடுகளை அமல்படுத்துவது அல்லது தளர்த்துவது குறித்து முடிவு செய்ய வேண்டும். கரோனா பாதிப்பு குறைந்து வரும் பகுதியில் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டியது அவசியம் என்றால், அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட சில மாநிலங்களில், முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் பொதுமக்கள் உலவுவதைப் பார்க்க முடிகிறது. பொதுமக்கள் மத்தியில் கரோனா முடிவுக்கு வந்து விட்டது என்ற மனநிறைவு ஏற்படுவதை அனுமதிக்கக் கூடாது. தளர்வுகளை அறிவிக்கும்போது, கரோனா பரவல் தடுப்பு விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என மாநில அரசுகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

எந்தப் பகுதியிலாவது கரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கிறதா என்பதை மாநில அரசுகள் உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும். எந்தப் பகுதியிலாவது கரோனா பாதிப்பு அதிகரிப்பது தெரியவந்தால், சுகாதார அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படி, அங்கேயே பரிசோதனை மேற்கொண்டு அப்பகுதியை தனிமைப்படுத்த வேண்டும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் விரைவாக தடுப்பூசி செலுத்த மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மத்திய அரசின் உத்தரவுகளை அமல்படுத்த வேண்டும் என அனைத்து மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அதிகாரிகளுக்கு உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. - பிடிஐ

# பிராங்க்ளின் நிறுவனத்துக்கு ரூ.5 கோடி அபராதம்

● ரூ.512 கோடியை திருப்பித் தர 'செபி' உத்தரவு

■ புதுடெல்லி

பங்குச் சந்தையில் பரஸ்பர நிதித் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தும் சர்வதேச நிறுவனமான பிராங்க்ளின் டெம்பிள்டன் நிறுவனத்துக்கு ரூ.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

புதிய பரஸ்பர நிதித் திட்டங்கள் எதையும் 2 ஆண்டுகளுக்கு அறிமுகம் செய்யக் கூடாது என்றும் பங்குச் சந்தை பரிவர்த்தனை ஒழுங்குமுறை ஆணையம் (செபி) தடை விதித்துள்ளது.

2020-ம் ஆண்டு 6 நிதித் திட்டங்களிலிருந்து வெளியேறுவதாக பிராங்க்ளின் டெம்பிள்டன் நிறுவனம் அறிவித்தது. இது செபி விதிமுறைகளுக்கு எதிரானது என்று கூறி ரூ.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த 6 திட்டங்கள் மூலம் முதலீட்டு நிர்வாகம் மற்றும் ஆலோசனைக் கட்டணமாக திரட்டிய ரூ.512 கோடியை திரும்ப செலுத்த வேண்டும் என்றும் செபி உத்தரவிட்டுள்ளது.

செபி-யின் இந்த உத்தரவு பல சிறு முதலீட்டாளர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமையும் என்று பங்கு பரிவர்த்தனை ஆலோசனை நிறுவனமான ஃபையர்ஸ் தலைவர் கோபால் காவலி ரெட்டி தெரிவித்துள்ளார்.

டெப்ட் பண்ட் திட்டங்கள்தான் பாதுகாப்பான முதலீட்டு திட்டங்களாக கருதப்பட்டது. அதிக லாபத்தை எதிர்பார்க்காத அதே சமயம் சீரான வட்டியை எதிர்நோக்கும் முதலீட்டாளர்கள் பலரது தேர்வும் இத்தகைய முதலீட்டுத் திட்டங்கள்தான்.

ஆனால் முதலீடு செய்த நிறுவனங்கள் நஷ்டமடைவது உள்ளிட்ட காரணங்கள் மற்றும் தர நிறுவனங்கள் மதிப்பெண்ணை குறைப்பது போன்றவையும் இம்முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வதை கேள்விக் குறியாக்கியுள்ளது என்று கவாலி ரெட்டி தெரிவித்துள்ளார்.

யூரோ கால்பந்து தொடர்

# பிரான்ஸ் ஆட்டத்தை டிரா செய்தது ஹங்கேரி

■ புடாபெஸ்ட்

யூரோ கால்பந்து தொடரில் உலக சாம்பியனான பிரான்ஸ் - ஹங்கரி அணிகள் மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

யூரோ கால்பந்து தொடரில் நேற்று புடாபெஸ்ட் நகரில் 'எஃப்' பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் பிரான்ஸ் - ஹங்கேரி அணிகள் மோதின. 14-வது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கரீம் பென்சீமா இலக்கை நோக்கி அடித்த பந்து கோல்கீப்பரால் தடுக்கப்பட்டது.

31- வது நிமிடத்தில் ஹங்கேரி அணியின் இரு டிபன்டர்களுக்கு இடையே பந்தை அற்புதமாக கரீம் பென்சீமாவுக்கு தட்டிவிட்டார் பிரான்ஸின் கிளியான் பாப்பே. அந்த சமயத்தில் கோல்கீப்பர் மட்டுமே நேருக்கு நேர் இருந்த நிலையில் கரீம் பென்சீமா பந்தை கோலாக மாற்றத் தவறினார்.

முதல் பாதியில் காயங்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட நேரத்தில் ரோலண்ட் சல்லாயிடம் இருந்து பந்தை பெற்ற ஹங்கேரியின் அட்டிலா ஃபியோலா விரைவாக கடத்திச் சென்று கோல் அடித்து அசத்தினார். இதனால் முதல் பாதியில் ஹங்கேரி 1-0 என முன்னிலை பெற்றது.

66-வது நிமிடத்தில் பிரான்ஸ் அணி தாக்குதல் ஆட்டம் தொடுத்தது. இதன் விளைவாக கிளியான் பாப்பே இலக்குக்கு மிக அருகில் இருந்து பந்தை பாக்ஸின் மையப்பகுதிக்குள் தட்டிவிட்டார்.

அப்போது அதை ஹங்கேரி டிபன்டர் வில்லி ஆர்பன் சரியாக தடுக்கத் தவறினார். இதை சரியாக பயன்படுத்திக் கொண்ட அன்டோனி கிரீஸ்மான் பந்தை கோல் வலைக்குள் திணிக்க ஆட்டம் 1-1 என்ற சமநிலையை எட்டியது.

90 நிமிடங்கள் முடிவடைந்த நிலையில் காயங்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட கூடுதல் நேரத்தின் 5-வது நிமிடத்தில் தாஸ் லெமரின் உதவியுடன் பந்தை பெற்ற ரபேல் வரேன், பாக்ஸின் மையப்பகுதியில் இருந்து தலையால் முட்டி கோல் வலைக்குள் தள்ள முயன்றார். ஆனால் பந்து வலது புறம் விலகிச் செல்ல ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

**இங்கிலாந்து ஆட்டம் டிரா..**

முன்னதாக லண்டனில் உள்ள வெம்பிலி மைதானத்தில் 'டி' பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து - ஸ்காட்லாந்து அணிகள் மோதின. இந்த ஆட்டம் கோல்களின்றி டிராவில் முடிவடைந்தது. இந்த ஆட்டத்தை கோல்களின்றி டிராவில் முடித்ததன் மூலம் நாக்-அவுட் சுற்றுக்கு முன்னேறுவதில் இங்கிலாந்து அணிக்கு சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

**இன்றைய ஆட்டம்**

இத்தாலி - வேல்ஸ்
நேரம்: இரவு 9.30

சுவிட்சர்லாந்து - துருக்கி
நேரம்: இரவு 9.30

நேரலை: சோனி சிக்ஸ்

# கோபா அமெரிக்கா கால்பந்து தொடர்: அர்ஜென்டினா வெற்றி

■ பிரேசிலியா

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் நேற்று பிரேசிலியா நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் அர்ஜென்டினா - உருகுவே அணிகள் மோதின.

இதில் 7-வது நிமிடத்தில் லயோனல் மெஸ்ஸி வலது பக்கத்தில் இருந்து இலக்கை நோக்கி துல்லியமாக உதைத்த பந்து கோல்கீப்பரால் தடுக்கப்பட்டது. எனினும் திரும்பி வந்த பந்தை கோன்சலஸ் கோலாக மாற்றத் தவறினார். 13-வது நிமிடத்தில் கார்னரில் இருந்து மெஸ்ஸி பந்தை கடத்திச் சென்று கோல் கம்பத்துக்கு நெருக்கமாக நின்ற கைடோ ரோட்ரிக்ஸுக்கு உதைக்க, அவர் தலையால் முட்டி கோலாக மாற்றினார்.

இதனால் அர்ஜென்டினா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதற்கு பதில் கோல் அடிக்க உருகுவே அணியின் வீரர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பலன் கிடைக்காமல் போனது. முடிவில் அர்ஜென்டினா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கோவிஷீல்டு கரோனா தடுப்பூசி 2-வது தவணைக்கு

# 16 வார இடைவெளி சரியான நடவடிக்கைதான்

● அஸ்ட்ராஜெனிகா தலைவர் டாக்டர் ஆண்ட்ரூ பொலார்டு கருத்து

■ லண்டன்

கரோனா தடுப்பூசி கோவிஷீல்டு மருந்தின் முதல் தவணைக்கும் இரண்டாவது தவணைக்கும் இடையிலான கால அவகாசம் 12 முதல் 16 வாரம் வரை இருப்பது சரியான நடவடிக்கை தான் என்று அஸ்ட்ராஜெனிகா நிறுவன தலைவர், டாக்டரும் பேராசிரியருமான ஆண்ட்ரூ பொலார்டு தெரிவித்தார்.

மிக அதிக மக்கள் தொகை உள்ள இந்தியா போன்ற நாடுகளில் முதல் தவணை தடுப்பூசி போட்டு அடுத்த தவணைக்கு 16 வார இடைவெளி அளிப்பது மிகச் சரியான நடவடிக்கைதான். இதன் மூலம் பெரும்பாலான மக்களுக்கு தடுப்பூசி போட முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையிலானோருக்கு தடுப்பூசி போடப்படவில்லை. இந்நிலையில் அனைவரையும் காக்க முதல் தவணை ஊசியை முதலில் போட வேண்டும்.

இதன் மூலம் கரோனா வைரஸின் டெல்டா வேரியன்ட் வகை பரவுவதை தடுக்க முடியும். இதன் மூலம் கரோனா பரவல் அதிகரிப்பைக் குறைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவில் இதுவரை 26.89 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும், குழந்தைமருத்துவ நிபுணருமான பொலார்டு, அஸ்ட்ராஜெனிகா நிறுவனம், கரோனா வைரஸ் தடுப்பூசியில் ஒரு முறை போடக் கூடிய தடுப்பூசியை இன்னமும் உருவாக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

2 டோஸ் தடுப்பூசி போட வேண்டியது அவசியம். முதலாவது டோஸ் கரோனா தொற்று ஏற்படாமல் இருக்கவும், அடுத்தது மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகவும் உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ள சூழலில் பெருமளவிலான மக்களுக்கு தடுப்பூசி போட வேண்டிய அவசியம் உள்ளது.

இதனால் முதல் டோஸ் தடுப்பூசிக்கும், இரண்டாவது டோஸ் தடுப்பூசிக்கும் இடையிலான கால அவகாசம் அதிகரிப்பதன் மூலம் அதிக எண்ணிக்கையிலானோருக்கு போட வசதி ஏற்படும்.

இந்தியாவில் அஸ்ட்ராஜெனிகா நிறுவனம் தயாரித்து அளிக்கும் கோவிஷீல்டு தடுப்பு ஊசியானது, கரோனா தொற்று ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டிய சூழலிலிருந்து 70 சதவீதம் வரை காப்பாற்றும்.

கரோனா வைரஸில் பலப்பல வேரியன்ட் உருவெடுப்பது தவிர்க்க முடியாது. இதனால் முறையான தடுப்பூசி மட்டும் தான் பாதுகாப்பை அளிக்கும். வைரஸ் பரவலைக்குறைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உலகின் 3-வது மிகப் பெரிய வைரம் போட்ஸ்வானாவில் கண்டுபிடிப்பு

■ காபரோன்

உலகின் 3-வது மிகப்பெரிய வைரம் போட்ஸ்வானா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்க கண்டத்தின் தெற்கு பகுதியில் போட்ஸ்வானா நாடு உள்ளது. அந்த நாட்டில் 23 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அங்கு 4 மிகப்பெரிய வைர சுரங்கங்கள் செயல்படுகின்றன. அரசின் வருவாயில் 50 சதவீதம் வைரங்கள் விற்பனை மூலம் கிடைக்கிறது. கரோனா வைரஸால் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையால் வைரங்கள் விற்பனை குறைந்து போட்ஸ்வானா நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் போட்ஸ்வானா நாட்டின் சுரங்கம் ஒன்றில் அண்மையில் 1,098 காரட் வைரம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. 73 மி.மி. நீளம், 52 மி.மி. அகலம், 27 மி.மி. தடிமன் கொண்ட இது உலகின் 3-வது மிகப்பெரிய வைரம் ஆகும்.

கடந்த 1905-ம் ஆண்டில் தென்ஆப்பிரிக்காவில் 3,106 காரட் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதுதான் உலகத்தின் மிகப்பெரிய வைரமாகும். கடந்த 2015-ம் ஆண்டில் போட்ஸ்வானா நாட்டில் 1,109 காரட் வைரம் தோண்டி எடுக்கப்பட்டது. இது உலகத்தின் 2-வது பெரிய வைரமாகும். தற்போது போட்ஸ்வானா நாட்டிலேயே உலகின் 3-வது மிகப்பெரிய 1,098 காரட் வைரம் கிடைத்துள்ளது.



▲ போட்ஸ்வானா நாட்டில் தோண்டி எடுக்கப்பட்ட உலகின் 3-வது மிகப்பெரிய வைரம். படம்: ஏஎப்பி

சர்வதேச சந்தை நிலவரம் மேம்பட்ட பிறகு, 3-வது மிகப்பெரிய வைரம் ஏலம் விடப்படும் என்று போட்ஸ்வானா அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு கிலோ மாம்பழத்தின் விலை ரூ.2.7 லட்சம்

● ம.பி.யில் 7 மாம்பழங்களுக்கு 4 காவலர், 6 நாய்கள் பாதுகாப்பு

■ போபால்

மத்திய பிரதேசத்தில் அரிய வகையை சேர்ந்த 2 மாமரங்களில் காய்த்துள்ள 7 மாம்பழங்களுக்கு 4 காவலர்கள், 6 நாய்கள் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தின் ஜபல்பூரைச் சேர்ந்தவர் சங்கல்ப் சிங் பரிஹார். இவர் 12 ஏக்கரில் பல்வேறு வகையான பழ மரங்களை வளர்த்து வருகிறார். இதில் 14 வகையான மாமரங்களும் உள்ளன. இவற்றில் 2 மரங்களில், அரிய வகை மியாசாகி மாம்பழங்கள் காய்த்துள்ளன.

சர்வதேச சந்தையில் மியாசாகி மாம்பழங்கள், ஒரு கிலோ ரூ.2.7 லட்சத்துக்கு விற்பனையாகி வருகின்றன. இதில் ஆன்டி-ஆக்ஸிடன்ட், போலிக் அமிலம் அதிகம். அத்துடன் நல்ல சுவையும் மணமும் இதில் உள்ளது. ஜப்பானின் மியாசாகி நகரில் இந்த மாம்பழங்கள் அதிகம் விளைவிக்கப்படுவதால், அந்த நகரின் பெயர் மாம்பழத்துக்கு சூட்டப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், சங்கல்ப் சிங் பண்ணையில் உள்ள 2 மியாசாகி மரங்களில் 7 மாம்பழங்கள் மட்டுமே காய்த்துள்ளன. இந்தத் தகவல் வெளியானதால் திருடர்கள், அவரது பண்ணையை நோட்டமிட தொடங்கினர். இதையடுத்து, 4 காவலர்கள், 6 நாய்கள் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.



▲ மத்திய பிரதேசம், ஜபல்பூரில், சங்கல்ப் சிங் பண்ணையில் காய்த்திருக்கும் மியாசாகி மாம்பழங்கள்.

**சென்னை மாமரங்கள்**

இதுகுறித்து சங்கல்ப் சிங் கூறும்போது, "ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தென்னை மரக்கன்றுகளை வாங்குவதற்காக சென்னைக்கு சென்றேன். அப்போது ரயிலில் என்னுடன் பயணித்த ஒருவர், தனது நர்சரியில் இருந்து 6 வகையான மாமர கன்றுகளை தந்தார். இதில் 2 மியாசாகி வகை என்பது இப்போதுதான் தெரியவந்துள்ளது.

சர்வதேச சந்தையில் மியாசாகி என்ற பெயர் இருந்தாலும் எனது தோட்டத்தில் காய்த்துள்ள மாம்பழங்களுக்கு எனது தாயான தாமினியின் பெயரை சூட்டியுள்ளேன். ஒரு மாம்பழத்தை ரூ.21,000 விலை கொடுத்து வாங்க மும்பை தொழிலதிபர் ஒருவர் முன்வந்துள்ளார். ஒரு மாம்பழம் 350 கிராம் இருக்கும்" என்றார்.

இதுகுறித்து ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக தோட்டக் கலைத் துறை பேராசிரியர் எஸ்.கே.பாண்டே கூறும்போது, "இந்தியாவில் 1,200 வகையான மாம்பழங்கள் உள்ளன. சங்கல்ப் சிங் தோட்டத்தில் காய்த்துள்ள மாம்பழங்கள், மியாசாகி போன்று இளஞ்சிவப்பு, அடர் சிவப்பு நிறத்தில் இருப்பதால் மியாசாகி என்று கருதுகிறார். மாம்பழத்தின் மரபணுவை சோதித்தால் மட்டுமே அது எந்த வகை மாம்பழம் என்பதை உறுதி செய்ய முடியும்" என்றார்.

கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட

# தடகள ஜாம்பவான் மில்கா சிங் காலமானார்

■ சண்டிகர்

'பறக்கும் சீக்கியர்' என்று அழைக்கப்பட்ட தடகள ஜாம்பவான் மில்கா சிங் (91), ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 4 தங்கம் மற்றும் காமன்வெல்த் போட்டியில் 400 மீட்டர் ஓட்டப்பந்தயப் பிரிவில் தங்கம் வென்ற ஒரே இந்தியர் ஆவார். அவரது சாதனைகளை பாராட்டி மத்திய அரசு பத்ம ஸ்ரீ விருதை வழங்கியிருந்தது.

மில்கா சிங்குக்கு கடந்த மாதம் கரோனா தொற்று ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பஞ்சாப் மாநிலம், மொஹாலியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர், அதன் பின்னர் சண்டிகரில் உள்ள முதுநிலை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலைய மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் கடந்த ஜூன் 3-ம் தேதி அனுமதிக்கப்பட்டார். கடந்த புதன்கிழமை கரோனாவில் இருந்து மீண்ட அவர், பொது சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவரது உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டது.



இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணி அளவில் மில்கா சிங் உயிரிழந்தார். அவரது மனைவி நிர்மல் (85), கரோனா தொற்றால் கடந்த 13-ம் தேதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மில்கா சிங்கிற்கு 3 மகள், ஒரு மகன் உள்ளனர். மில்கா சிங்கின் உடல் நேற்று மாலை 5 மணி அளவில் அரசு மரியாதையுடன் சண்டிகரில் தகனம் செய்யப்பட்டது.

மில்கா சிங் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் விளையாட்டு துறை பிரபலங்கள் இரங்கல் தெரிவித்தனர். - பிடிஐ

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper). Subscribe now to get this edition before anyone else!! Backup channel: @news_backup